# இலங்கையின் தமிழ்க் கல்விச் சமூகம்




## ஒரு பார்வை

த ஜெயபாலன்

# இலங்கையின் தமிழ்க் கல்விச் சமூகம் :

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# ஒரு பார்வை

த.ஜெயபாலன் (ஊடகவியலாளர்)

இது ஒரு தேசம் வெளியீடு நவம்பர் 2010

3

தலைப்பு:
இலங்கையின் தமிழ்க் கல்விச் சமூகம்:
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் – ஒரு பார்வை

ஆசிரியர்:
தம்பிராஜா ஜெயபாலன்
(இணையத்தள ஆசிரியர், தேசம்நெற், லண்டன்)

வெளியீடு:
தேசம்நெற் வெளியீடு, லண்டன்

பதிப்பு:
1வது பதிப்பு, நவம்பர் 2010

பதிப்புரிமை:
தம்பிராஜா ஜெயபாலன்

## உள்ளடக்கம்:

முன்னுரை 1.

4

சமூகமாற்றத்தை ஏற்படுத்தாமல் சமூகத்தைப் பிரதிபலித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு பல்கலைக்கழகமல்ல–பெரிய பள்ளிக்கூடமே! 2.

எல்லாம் அல்லது பூச்சியம் என்ற கொள்கையே எம்மைக் கைவிட்டது! ஆராய்ச்சியாளராகிய நாம் உண்மைக்கு மட்டுமே அடிபணியக் கடமைப்பட்டுள்ளோம். : பேராசிரியர் ரட்னஜீவன் ஃகூல் உடனான நேர்காணல் 3.

'Tamillain-Barre' Syndrome' மும் தமிழ் சமூகத்திற்கான புதிய அரசியல் கலாச்சாரத்தின் அவசியமும் 4.

யாழ் பல்கலைக்கழகத்தின் இலக்கையும் தொலைநோக்கு பார்வையையும் முன்னெடுத்துச் செல்லும் கல்வியியல் ஆளுமையும் முகாமைத்துவத் திறமையும் உடையவரை உபவேந்தராகத் தெரிவு செய்யுங்கள்! 5.

கட்டுரைகளுக்கான வாசகர் கருத்துக்கள். 6.

# முன்னுரை



தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான மே 18, 2009 வரையான தமிழீழ விடுதலைப் போராட்டம், அம்மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மாறாக உரிமைகள் பறிக்கப்படுகின்ற நிலையையே ஏற்படுத்தியது. மேலும் முப்பது ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட போராட்டமானது பல பத்து ஆண்டுகளுக்குத் தமிழ் மக்களைப் பின்நோக்கித் தள்ளியுள்ளது.

பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் சீராக இயங்கினால் மாணவர்கள் இளைஞர்கள் போராட வர மாட்டார்கள் என்பதனை தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் ஒரு கொள்கையாகவே ஏற்றுக்கொண்டனர். இவற்றின் விளைவாகவும் தொடர்ச்சியான யுத்தம் காரணமாகவும் தமிழ்ப் பிரதேசங்களின் கல்விநிலை வீழ்ச்சியடைந்தமை எதிர்வுகூறப்பட்ட ஒன்றே.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இருந்த முரண்நகை என்னவென்றால், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், அந்த சமூகம் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கு வாய்பாக அமையக் கூடிய கல்வியைத் தொடர்ச்சியாக நிராகரித்தது. அடிப்படை அறிவும் அடிப்படைச் சிந்தனைத் தெளிவுமற்ற  மாணவர்கள், இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு அணி சேர்க்கப்பட்டனர்.

கல்விக் கட்டமைப்புகள் ஆயுதம் தாங்கியவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. கல்விச் சமூகத்தின் உள்ளுணர்வு சிதைக்கப்பட்டு ஆயுதங்களின் கீழ் கல்வி தனது அவசியத்தினை இழந்தது. ஆனால் இன்றோ தமிழ் மக்கள் தங்களைத் தற்காத்துக் கொளவதற்கென இருந்த கல்வி வளத்தையும் சிதைத்துவிட்டு ஆயுதங்கள் மௌனமாகிவிட்டன.  இவை மௌனமாக்கப்பட வேண்டியவையே. ஆனால் இந்த ஆயுதங்களால் ஆளப்பட்ட தமிழ் மக்களும் மௌனமாக்கப்பட்டு விட்டனர்.

இலங்கையிலும் சரி, பிரித்தானியாவிலும் சரி, உலகின் எப்பாகத்திலானாலும் சரி ஒரு பெரும்பான்மைச் சமூகத்தினுள் வாழ்கின்ற சிறுபான்மைச் சமூகம் தன்னை தற்காத்துக்கொள்ளவும் தனது உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும் மிகக் கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. இப்போராட்டமானது பலவகைப்பட்டதானாலும் ஒரு சமூகம் கல்வியில் உயர்நிலையை அடைகின்ற போது அச்சமூகம் தன்னைத் தற்காத்துக் கொள்கின்ற பலத்தினைப் பெறுகின்றது. பொருளாதார வளர்ச்சியின் அடிப்படை அம்சமாக தற்போது கல்வி அமைந்துள்ளது. கல்வியும் பொருளாதாரமும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமான உறவைக்

கொண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அதன் இராணுவ பலத்தைக் கட்டி அமைக்க செலவிடப்பட்ட வளங்களை தமிழ்ச் சமூகத்தின் கல்வி வளர்ச்சியை நோக்கித் திருப்பியிருந்தால் இலங்கை வாழ் தமிழ் சமூகத்தின் நிலை இவ்வளவு கீழ் நிலைக்குச் சென்றிருக்க மாட்டாது. இலங்கைத் தமிழ் சமூகம் இன்று அறிவியல் வறுமையாலும் உள்ளுணர்வின் வரட்சியாலும் மிகவும் பாதிக்கப்படுகின்றது.

இதனை மாற்றி அமைப்பதற்கு தமிழ்ச்சமூகம் தன்னை மீண்டும் தற்காத்துக் கொள்ளும் நிலையை எய்துவதற்கும் தனது உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் அச்சமூகம் தனது கல்விநிலையை உயர்த்திக்கொள்ள வேண்டும். அது பொருளாதார மீட்சியையும் உறுதிப்படுத்தும்.

தமிழ் மக்கள் தங்கள் கல்விநிலையை உயர்த்திக்கொள்ளக் கல்விக் கட்டமைப்புகள் சீரமைக்கப்பட வேண்டும். கல்விக் கட்டமைப்புகள் சீரமைக்கப்படுவது என்பது கல்லும் சீமெந்துக் கலவையும் கொண்ட கட்டடங்களையல்ல. அகநிலை கட்டமைப்புகள் மறு சீரமைக்கப்பட வேண்டும்.

இதனை தமிழ் சமூகத்தின் உயர்ந்த கல்வி ஸ்தாபனமாக விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பிப்பதே பொருத்தமானதாக அமையும். தமிழீழ விடுதலைப் போராட்டம் சீரழித்த கல்விக் கட்டமைப்புகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முக்கியமானது. இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அதன் எல்லா அம்சங்களிலுமே கீழ்நிலையிலேயே உள்ளது. அதற்கு புறக் காரணிகளிலும் பார்க்க அகக்காரணிகளே பெரும்பாலும் காரணமாக உள்ளதனை இந்நூலில் உள்ள கட்டுரைகளில் காணலாம்.

பிரித்தானியா போன்ற நாடுகளில் ஒரு மாணவன் அல்லது மாணவி பல்கலைக்கழகம் செல்வது என்பது பெரும்பாலும்

அம்மாணவனுடையதோ அல்லது மாணவியினுடையதோ தெரிவாகவுள்ளது. ஒவ்வொரு மாணவனுக்கும் அதற்கான வாய்ப்பு பெரும்பாலும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் அவ்வாறு இல்லை. பல்கலைக்கழகம் செல்வது என்பது மாணவ, மாணவியரின் கனவு. மிகக் கடுமையான போட்டியினூடாக மிகக் குறைந்த விகிதமான மாணவ, மாணவிகளே பல்கலைக்கழகம் செல்கின்றனர். அதற்கு இம்மாணவ, மாணவிகளும் அவர்களின் பெற்றோர்களும் மேற்கொள்ளும் அர்ப்பணிப்பு மிக உயர்ந்ததாக உள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சென்றோர் எதிர்கொண்ட பிரச்சினைகளே இந்நூலை உருவாக்கக் காரணமானது. இலங்கைத் தமிழ்ச் சமூகமானது அதன் வரலாற்றில் மிக இக்கட்டான காலகட்டம் ஒன்றில் சிக்கியுள்ளது. இந்நிலையில் இச்சமூகத்தின் உயர்ந்த கல்வி ஸ்தாபனமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது தற்போதைய அதன் கீழான நிலையில் இருந்து மீட்டெடுக்கப்பட வேண்டியது மிக அவசியமானது.



அதற்கான ஒரு வாய்ப்பாக யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் உபவேந்தருக்கான தெரிவு நவம்பர் 2010ல் இடம்பெற இருக்கின்றது. புதிய உப வேந்தரைத் தெரிவு செய்யும் தகைமையுடைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கவுன்சில் அங்கத்தவர்கள் இத்தெரிவை மிகவும் பொறுப்புடன் மேற்கொள்ளவேண்டும். யாழ் பல்கலைக்கழகத்தின் இலக்கையும் தொலைநோக்குப் பார்வையையும் முன்னெடுத்துச் செல்லும் கல்வியியல் ஆளுமையும் முகாமைத்துவத் திறமையும் உடையவரை அவரது தகைமையின் அடிப்படையில் மட்டும் தெரிவு செய்ய வேண்டும் என்று தமிழ்க் கல்விச் சமூகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

த ஜெயபாலன்
ஆசிரியர், தேசம்நெற்.
லண்டன்,
நவம்பர் 09, 2010.

# சமூகமாற்றத்தை ஏற்படுத்தாமல் சமூகத்தைப் பிரதிபலித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு பல்கலைக்கழகமல்ல - பெரிய பள்ளிக்கூடமே!



(யூலை 01, 2010)

“கற்பித்தலும் ஆய்வும் இணைந்து பாரபட்சமற்ற உண்மையைத் தேடுவதே பல்கலைக்கழகம்” என்பது 19ம் நூற்றாண்டில் ஜேர்மனியின் பல்கலைக்கழகத்தின் கருத்துருவமாக இருந்தது. இதுவே அன்று வலுவான பல்கலைக்கழக கருவாகவும் அமைந்தது. இதனைவிடவும் ஆய்விலும் கற்பித்தலிலும் புத்திஜீவித சுதந்திரம், பல்கலைக்கழகத்திற்கான சுயாதீனம், தங்களுடைய சொந்த மதிப்பீடுகள் முதன்மைகளை வரையறுக்கும் சுயாதீன ஒழுங்குகள், சர்வதேசியம் என்ற வடிவங்களும் பல்கலைக்கழகங்கள் சிலவற்றினால் ஏற்கப்பட்டிருந்தது. இவற்றினைவிடவும் ஆய்வுகளுக்கான தேவைகளின் அதிகரிப்பையும், அதற்கான கேள்வியையும் பொருளாதாரத்தையும் பொறுத்து, பல்கலைக்கழகங்கள் வெவ்வேறு வடிவங்களை முயற்சித்து வருகின்றன. இன்றைய காலகட்டங்களில் பல்கலைக்கழகங்கள் தாங்கள் சார்ந்த சமூகத்தின் அரசியல் பொருளாதார கலாச்சார அம்சங்களில் ஆளுமை செலுத்துவதனூடு சிந்தனையையும் சமூகக் கட்டமைப்பையும் செப்பனிடுகின்ற, தேவையேற்படின் மாற்றி அமைக்கின்ற சமூகப்

பொறியியலை மேற்கொள்கின்றன.

இதன் அடிப்படையில் கடந்த 36 ஆண்டுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ் சமூகத்தில் குறிப்பாக யாழ்ப்பாண சமூகத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்ற மதிப்பீடு மிகவும் அவசியமானது. இதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றினூடாகப் பார்ப்பது பொருத்தமானதாக அமையும்.

**இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம்:**

யூலை 15 1974 இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது பிரிவாக யாழ்ப்பாண வளாகத்தை உருவாக்குவது என்ற அறிவித்தல் அப்போதைய கல்வி அமைச்சர் பதியுதீன் மொகமட்டினால் அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டவர் பேராசிரியர் கைலாசபதி. இவரே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல்வேறுபட்ட துறைகளையும் உருவாக்கி ஆசியாவில் சிறந்ததொரு பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை ஆக்க வேண்டும் என்ற விரிந்த பார்வையைக் கொண்டிருந்ததுடன் அதனை நோக்கியும் செயற்பட்டார். பேராசிரியர் கைலாசபதியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தந்தை எனக் கூறுவது மிகப்பொருத்தமானது.



இதில் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் இந்திரபாலாவினது ஒத்துழைப்பும் குறிப்பிடத்தக்கது.

இடதுசாரிச் சிந்தனையாளரான பேராசிரியர் கைலாசபதியின் உழைப்பிற்கு அப்போது இடதுசாரிகளின் துணையுடன் ஆட்சியில் இருந்த சிறீலங்கா சுதந்திரக்கட்சி செயல்வடிவம் கொடுத்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் கொண்டுவரப்பட்டு பின்னர் கைவிடப்பட்ட இன ரீதியான தரப்படுத்தலுக்கு பிராயச்சித்தம் செய்யும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்கும் எண்ணமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைவதற்கு சாதகமாக அமைந்திருந்தது. யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியையும், யாழ்ப்பாணக் கல்லூரியின் Undergraduate section என்பனவற்றை இணைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. அதே ஆண்டு ஒக்ரோபர் 6ல் பரமேஸ்வராக் கல்லூரியில் யாழ்பாண வளாகம் அப்போதைய பிரதம மந்திரி

சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவால் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

அன்றைய இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகங்கள், கொழும்பு, கண்டி நகரங்களை மையப்படுத்தியே இயங்கி வந்தன. இந்தச் சூழலிலேயே பேராசிரியர் கைலாசபதி தமிழ் பிரதேசம் ஒன்றுக்கான பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவினார். கொழும்பு, கண்டி ஆகிய பாரம்பரிய பல்கலைக்கழக நகரத்துக்கு வெளியே அமைக்கப்பட்ட முதலாவது பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகும். இக்காலகட்டத்தில் யாழப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் மட்டுமல்ல, சிங்கள, முஸ்லிம் மாணவர்களும் கல்வி கற்பதனை பேராசிரியர் கைலாசபதி உறுதிப்படுத்தி இருந்தார். ஆனால் இந்நிலை நீண்டகாலம் நீடிக்கவில்லை. 1977ம் ஆண்டு இனக்கலவரமும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் சிலர் தாக்கப்பட்டதன் எதிரொலியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருந்த சிங்கள மாணவர்களைத் தாக்க சிலர் முற்பட்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் அவர்களுக்கு எவ்வித தீங்கும் நேர்ந்துவிடாது பாதுகாத்து பத்திரமாக தென்பகுதிக்கு அனுப்பி வைத்தனர்.



**தமிழரசுக் கட்சியின் எதிர்நிலை:**

1960களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை திருகோணமலையில் அமைக்க விரும்பி அதற்கான காணியையும் திருகோணமலை நகரை அண்மித்து வாங்கியது. இருப்பினும் தமிழரசுக் கட்சியால் அதற்கு செயல்வடிவம் கொடுக்க முடியவில்லை. அதற்கு முக்கிய காரணம் தமிழரசுக் கட்சி தனது ஆதரவை வழங்கி வந்த ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் அத்திட்டத்திற்கு ஆதரவளிக்க முன்வரவில்லை. அதேசமயம் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் உருவாகின்றபோது தமிழ் பகுதியில் ஒரு பல்கலைக்கழகம் உருவாகின்றது என்ற எண்ணத்தில் பொதுநன்மை கருதி தமிழரசுக்கட்சியும் அதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. பெரும்பாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை வேண்டப்படாத ஒன்றாகவே தமிழரசுக் கட்சி அணுகியது.

சுதந்திரக் கட்சியின் ஆதரவில் ஒரு பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் உருவாகுவதும் அதனை சுதந்திரக் கட்சியின் பின்னணியுடைய பேராசிரியர் க.கைலாசபதி முன்னெடுத்துச் செல்வதும் தமிழர் விடுதலைக்

கூட்டணிக்கு விருப்பமானதொரு விடயமாக இருக்கவில்லை. ஏற்கெனவே யாழ்ப்பாணத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுத்த சுதந்திரக் கட்சியின் யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவிற்கு இயற்கை மரணம் இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி தீவிர பிரச்சாரங்களில் இறங்கி இருந்தது. இந்த வன்மம் பேராசிரியர் கைலாசபதி மீதும் இருந்தது.

இவ்வாறான நிலையில் தங்களுடைய கிராமங்களில் பல்கலைக்கழகம் திறக்கப்படுவதால் கிராமத்தின் சமூகக் கட்டுக்கோப்பு குலைந்துவிடும் என்பதனைக் காரணம் காட்டி யாழ்ப்பாண வளாகம் உருவான பகுதிகளில் எதிர்ப்பலைகளும் கிளம்பியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் உருவாக்கப்படுவதை விரும்பாத தமிழரசுக் கட்சி, 1977ல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்ததும் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவின் ஆதரவுடன் பல்கலைக்கழகத்தின் அதிபராக தமிழரசுக் கட்சியின் ஆதரவாளரான பேராசிரியர் சு. வித்தியானந்தனை நியமித்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தந்தையெனக் கூறக்கூடிய பேராசிரியர் க. கைலாசபதி ஒரே நிர்வாகக் காலத்திலேயே (ஒரு நிர்வாகக் காலம் மூன்று ஆண்டுகள்) அதிபர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அதனை உருவாக்கிய பேராசிரியர் க கைலாசபதி மிகக்குறுகிய காலமே உபவேந்தராக (அதிபராக) இருந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருந்த உறவைப் பயன்படுத்தி க கைலாசபதியை பதவி இறக்கியது.



### முளையிலேயே கருகிய இடதுசாரிச் சிந்தனை:

இலங்கையின் இனஉறவுகள் பலவீனமான நிலையில் தமிழ்த் தேசிய அலை வீச்சுப்பெற ஆரம்பித்த காலப்பகுதியிலேயே யாழ்ப்பாண வளாகம் உருவாகின்றது. சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக இடதுசாரிகளின் போராட்டங்கள் வெற்றியளித்து இடதுசாரிச் சிந்தனைமுறை பலம்பெற்றிருந்த காலகட்டம் அது. மேலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் புரட்சிகர மாற்றங்களுக்கான கோஷங்கள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தன.

பேராசிரியர் க கைலாசபதி யாழ்ப்பாண வளாகத்தின் அதிபராகவும் அதன் பின்னர் கலைப்பிரிவின் தலைவராகவும் இருந்தவரையில் இடதுசாரிச்

சிந்தனைக்கான தளம் ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காணப்பட்டது. அவர் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை 1980க்களின் முற்பகுதிவரை உணரக்கூடியதாக இருந்தது.

ஆனால் பொதுவாகவே இளைஞர் சமூகத்தில் ஏற்படும் புரட்சிகரச் சிந்தனைகள் மீதான காதல் யாழ்ப்பாண சமூகத்தில் யாழ்ப்பாண பல்கலைகழக சமூகத்தில் ஏற்படவில்லை. அல்லது ஏற்பட்ட போதும் அது குறிப்பிடத்தக்க அளவில் இருக்கவில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகமும் அதன் தூண்டுதலால் யாழ்ப்பாண சமூகமும் தமிழ் தேசிய முதலாளித்துவக் கட்சிகளான தமிழரசுக் கட்சியையும் தமிழ்க் காங்கிரசையும் இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பின்னால் அணி சேர்ந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி அவர்களின் அரசியல் இலக்கை நோக்கிச் செல்லவில்லை என்றவுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் வாரிசுகளான தமிழீழ விடுதலை இயக்கங்களுக்குப் பின்னால் சென்றனர்.

**யாழ்~சைவ~வேளாள~ஆண் ஆதிக்கச் சிந்தனை:**



ஆனால் 1974ல் உருவான யாழ்ப்பாண வளாகம் யாழ்ப்பாண சமூகத்தின் சிந்தனைமுறையில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு மாறாக, யாழ்ப்பாண சமூகத்தின் சிந்தனையை பிரதிபலிக்கின்ற ஒரு உயர் கல்வி ஸ்தாபனமாகியது. அதனால் யாழ்-சைவ-வேளாள-ஆண் ஆதிக்க சிந்தனைப் போக்கைக்கொண்ட சிந்தனையாளர்களையே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பெரும்பாலும் தொடர்ச்சியாக உற்பத்தியாக்கி வந்துள்ளது. அதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தலைமைத்துவப் பொறுப்பில் பெரும்பாலும் ஒரே இன-மத-சமூகக் குழுவினரே காணப்பட்டமையும் முக்கிய காரணமாக இருந்திருக்கலாம்.

விரிவுரைகளுக்கு உள்ள அதே முக்கியத்துவம் பட்டதாரி மணவர்களது கூட்டுவாழ்வும் அவர்கள் சமூகத்துடன் கொள்ளும் பரிமாற்றமும் விரிவுரைகளுக்கு அப்பால் ஏற்படுத்துகின்ற உணர்வுரீதியான தாக்கமும் முக்கியமானது. ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை அது பல்கலைக்கழகத்திற்கு வெளியேயான கூட்டுவாழ்வு சமூகப்பரிமாற்றம் என்பவற்றைக் கொடுக்கவில்லை. மாணவர்கள் பெரும்பாலும் தாங்கள் அதுவரை வாழ்ந்த அதே சூழலிலேயே வாழ்ந்து தங்கள் பட்டப்படிப்பைத் தொடர்ந்தனர். அதனால் அவர்கள் பல்கலைக்கழகச் சமூகத்திற்கே உரிய மாறுபட்ட சூழலுக்குத் தங்களை

வெளிப்படுத்தும் வாய்ப்பைக் கொண்டிருக்கவில்லை. இந்தச் சூழலானது யாழ்ப்பாணத்தின் ஒரே இன-மத-சமூகச் சூழலையே பல்கலைக்கழக வளாகத்திலும் ஏற்படுத்தியது. ஒரு குறுகிய காலத்திற்கு சிங்கள (1974 முதல் 1977 வரை) முஸ்லீம் மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்றபோதும் வெகு விரைவிலேயே அவர்கள் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்:**

இந்த சமூகப் பின்னணியில் உருவான இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது பிரிவாக இருந்து 1979 ஜனவரி 1 முதல் யாழ்ப்பாணப் பல்லைக்கழகமாகத் தனித்து இயங்க ஆரம்பித்தது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக இயங்கிய காலப்பகுதியில் அதன் முதலாவது அதிபராக இருந்தவர் பேராசிரியர் க கைலாசபதி (01 ஓகஸ்ட் 1974 - 31 யூலை 1977). அவரைத் தொடர்ந்து பேராசிரியர் சு வித்தியானந்தன் (01 ஓகஸ்ட் 1977 - 31 டிசம்பர் 1978)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாறும்வரை யாழ்ப்பாண வளாகத்தின் அதிபராக இருந்தார்.

யாழ்ப்பாண வளாகம், ஜனவரி 1979ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாறியபோது அதன் முதலாவது துணைவேந்தராக பேராசிரியர் சு வித்தியானந்தன் பொறுப்பேற்று யூலை 1988 வரை யாழ்ப்பாணத்தின் அதிஉயர் கல்வி ஸ்தாபனத்திற்குப் பொறுப்புடையவராக இருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் நீண்ட காலம் அப்பொறுப்பில் இருந்தவரும் இவரே.

பேராசிரியர் எஸ் வித்தியானந்தன் 1979 ஜனவரி - 1988 யூலை
பேராசிரியர் ஏ துரைராஜா 1988 செப்ரம்பர் - 1994 ஏப்ரல்
பேராசிரியர் ஏ குணரட்னம் 1994 ஏப்ரல் - 1997 பெப்ரவரி
பேராசிரியர் பி பாலசுந்தரம்பிள்ளை 1997 பெப்ரவரி - 2003 ஏப்ரல்
பேராசிரியர் எஸ் மோகனதாஸ் 2003 ஏப்ரல் - 2006
பேராசிரியர் ஜீவன் கூல் 2006 பதவியை பொறுப்பேற்கவில்லை.
பேராசிரியர் என் சண்முகலிங்கம் 2008 ஜனவரி

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்:**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் வேறு வேறான பாதைகளில் தங்கள் பயணத்தை மேற்கொண்ட போதும் அவை அடிக்கடி ஒன்றையொன்று குறுக்கீடு செய்துகொண்டுள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீது ஆளுமையைக் கொண்டிருந்த போதும் அது நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கவில்லை. 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து வீச்சுப் பெற்ற - இந்திய ஆதரவுடன் வீச்சூட்டப்பட்ட - தமிழீழ விடுதலைப் போராட்டம் முற்றிலும் இராணுவ மயமாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆளுமை படிப்படியாக வீழ்ச்சியடைந்து, பிற்காலங்களில் தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்கள் - (பிற்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மீது ஆளுமை செலுத்தினர். ஒரு சமூகத்தினது அதி உயர் அறிவியல் நிறுவனம் அச்சமூகத்தில் காணப்பட்ட ஆயுதக் கலாச்சாரத்தின் ஆளுமைக்குட்பட்டதன் விளைவுகளுக்கு இன்று நாம் சாட்சியமாக வாழ்கின்றோம்.



எண்பதுகளின் முற்பகுதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அரசியல்ரீதியாக முன்னெடுத்ததில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குக் கணிசமான பங்களிப்பு இருந்தது. ஒரு பக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தங்கள் உணர்ச்சிகரமான பேச்சுக்களால் தமிழுணர்வைத் தூண்டிக் கொண்டிருந்தனர். மறுபுறம் கருத்தரங்குகள், அரசியல் விழிப்புணர்வுக் கூட்டங்கள், உண்ணாவிரதம் மற்றும் போராட்டங்கள், மண் சுமந்த மேனியர் போன்ற நாடகங்கள், தெருக்கூத்துக்கள் என்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், குறிப்பாக மறுமலர்ச்சிக் கழகம், கலாச்சாரக் குழு என்பன முன்னின்று மக்கள் மயப்படுத்தின. இளைஞர்களையும் யுவதிகளையும் தமிழீழ விடுதலை இயக்கங்களை நோக்கித் தள்ளியதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் கணிசமான பங்களிப்பு இருந்தது. தமிழீழ விடுதலை இயக்கங்களின் போராளிகள் முதல் அரசியல் பொறுப்பாளர்கள் வரை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் முக்கிய பொறுப்புக்களை ஏற்றிருந்தனர்.

அந்த முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரனுக்கு வாழ்க்கைத்துணை என்ற பொறுப்பையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவியே ஏற்றுக்கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த மாணவர்களின்

உயிரைக் காப்பாற்றும் நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் அவர்களைக் கடத்திச் சென்றனர். அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட மாணவிகளில் ஒருவரான விவசாயபீட இரண்டாவது ஆண்டு மாணவியான மதிவதனி ஏரம்புக்கும் வே பிரபாகரனுக்கும் 1984 ஒக்ரோபர் 1ல் தமிழகத்தில் திருப்போரூரில் திருமணம் நடைபெற்றது.

கே பி என்று அறியப்பட்ட குமரன் பத்மநாதன், நிர்மலா ராஜசிங்கம், மு நித்தியானந்தன் ஆகியோர் புலிகளின் ஆரம்ப கால முக்கிய உறுப்பினர்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவர்கள். இவர்களில் பின்னைய இருவரும் எண்பதுகளின் நடுப்பகுதியிலேயே புலிகளில் இருந்து வெளியேறினர். சிதம்பரநாதன் (முன்னாள் ரிஎன்ஏ பா உ பத்மினி சிதம்பரநாதனின் கணவர்), கஜேந்திரன் செல்வராஜா, சிவநாதன், மு திருநாவுக்கரசு ஆகியோர் பிற்காலங்களில் முக்கியமாக அறியப்பட்ட புலிகளுடன் நெருக்கமாகச் செயற்பட்டவர்களாவர்.

ஈரோஸ், ஈபிஆர்எல்எப், புளொட், ரெலோ ஆகிய முக்கிய விடுதலை இயக்கங்கள் அனைத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆதரவுத்தளம் இருந்துள்ளது. ஆனாலும் புலிகளின் உறுப்பினர்களுக்குக் கிடைத்த முக்கியத்துவமும் பிரபல்யமும் ஏனைய இயக்கங்களில் இருந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கோ மாணவர்களுக்கோ கிடைக்கவில்லை. அக்காலகட்டத்தில் பல்கலைக்கழகத்தின் ஆதரவை இழப்பது அல்லது பகைப்பது எந்தவொரு விடுதலை இயக்கத்திற்கும் விருப்பமான விடயமாக இருக்கவில்லை.



### ரெலோ அழிப்பு ~ இயக்கங்களில் இராணுவச் சமநிலையில் மாற்றம்:

காலப் போக்கில் முற்றுமுழுதான இராணுவச் சிந்தனையை நோக்கி இயக்கங்கள் வேகமாக நகர்ந்தன. அதனால் விடுதலை இயக்கங்களின் இராணுவப் பிரிவுகள் அது பற்றி எவ்வித அக்கறையையும் கொண்டிருக்கவில்லை. யாழ்ப்பாண மருத்துவமனை வாசலில் வைத்து ரெலோ இயக்கத் தளபதிகளில் ஒருவரான தாஸ் சுட்டுக்கொல்லப்பட்டார். பொது மக்களும் காயப்பட்டனர். அதற்கு எதிரான போராட்டங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்றது. இப்போராட்டத்திற்கு எதிராக ரெலோ நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவர்களது உடல் யாழ் பல்கலைக்கழகத்திற்குக் கொண்டு வரப்பட்டு பல்கலைக்கழகம் இப்போராட்டத்தின் மையமானது. இவ்வாறான பல்வேறு மக்கள் விரோத

நடவடிக்கைகளால் ரெலோ இயக்கத்தின் செல்வாக்கு கீழ்நிலைக்குச் சென்றிருந்தது. ரெலோவினை அழித்தொழிப்பதற்குக் காத்திருந்த புலிகளுக்கு இது சாதகமான சூழலாகவும், தங்கள் செயற்பாட்டை விளக்குவதற்கான அரசியல் காரணத்தையும் கொடுத்தது.

இதனைத் தொடர்ந்து 1986 ஏப்ரல் 29 க்கும் மே 6க்கும் இடைப்பட்ட காலத்தில் புலிகள் ரெலோ இயக்கத்தினரையும் அதன் தலைமையையும் வேட்டையாடினர். ரெலோ இயக்கம் மீதான தாக்குதலை நிறுத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் குறிப்பாக பேராசிரியர் க சிவத்தம்பி சில முயற்சிகைள எடுத்தபோதும் அது எவ்வித பலனையும் அளிக்கவில்லை. ரெலோ இயக்கம் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலை இயக்கங்களிடையே இருந்த இராணுவச் சமநிலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. புலிகளுக்கு சரிசம பலத்தில் இருந்த ரெலோ இயக்கம் அழிக்கப்பட்டதன் மூலம் புலிகள் ஒற்றைத் தலைமையையும் இராணுவ வலிமையையும் உறுதிப்படுத்திக் கொண்டனர். ஏனைய இயக்கங்கள் இராணுவ ரீதியாக அவ்வளவு பலம்பொருந்தி இருக்கவில்லை. அதனால் புலிகளின் கரம் ஓங்க ஆரம்பித்தது. பின்னர் அவர்கள் ஒவ்வொரு விடயத்தையும் இராணுவ ரீதியில் அணுகத் தலைப்பட்டனர்.



### பல்கலைக்கழக மாணவர்கள் விஜிதரன் – விமலேஸ்வரன் படுகொலைகள்:

ரெலோ இயக்கம் அழிக்கப்பட்டு ஆறு மாதங்களில் 1986 நவம்பரில் அப்போதைய புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி கிட்டு (சதாசிவம் கிருஸ்ணகுமார்)வின் தனிப்பட்ட பிரச்சினைக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட மாணவன் விஜிதரன் கடத்திச் செல்லப்பட்டு புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுக்குமாறு பல்கலைக்கழகத்தில் செயற்பட்டு வந்த மறுமலர்ச்சிக் கழகத்தை விமலேஸ்வரன் போன்ற பல்கலைக்கழக மாணவர்கள் அணுகினர். ஆனால் பின்னாளில் புலிகளின் ஐபிசி வானொலிக்கு பொறுப்பாக இருந்த பல்கலைக்கழக மாணவர்களான சர்வேஸ்வரன், சிவரஞ்சித் ஆகியோர் அன்று அவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்க முன்வரவில்லை.

இந்நிலையில் விமலேஸ்வரன் பல்கலைக்கழக மாணவர்களைக்

கூட்டி விஜிதரன் போராட்டத்திற்கான மாணவர் அமைப்புக்குழுவை உருவாக்கினார். குடாநாட்டுப் பாடசாலைகளும் இப்போராட்டத்தில் இணைந்து கொண்டன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இப்போராட்டத்தின் மையமானது. இதுவே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மாபெரும் தன்னெழுச்சியான போராட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போராட்டங்களில் பல்கலைக்கழகத்திலும் அதற்கு வெளியேயும் செயற்பட்ட ஈபிஆர்எல்எப் அமைப்பு ஒரு உந்துசக்தியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

விஜிதரன் கொல்லப்பட்டு சரியாக ஓராண்டு காலத்தில் 1988 நவம்பரில் விஜிதரனுக்காக முன்னின்று குரல்கொடுத்த விமலேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார். விமலேஸ்வரனிடம் கல்விகற்ற ஒரு ரியூற்றரி மாணவனின் இரட்டைச் சகோதரன் புலிகளின் உறுப்பினர். இவரே விமலேஸ்வரனை சுட்டுக் கொன்றார்.

விஜிதரனின் மரணத்திற்கு நியாயம் கேட்டுப் போராட விமலேஸ்வரனும் அவரின் சக மாணவர்களும் துணை நின்றனர். ஆனால் விமலேஸ்வரன் கொல்லப்பட்ட போது அதனைத் தட்டிக் கேட்பதற்கான சூழல் முற்றாக இல்லாமலாக்கப்பட்டது. மரண பயத்தினால் அறிவியல் சமூகம் அந்நாட்களில் மிரண்டு போயிருந்தது.

இந்த பல்கலைக்கழக மற்றும் மாணவர்களின் போராட்டங்கள் பற்றி கிட்டு குறிப்பிட்ட பொழுது “அப்ப சனம் கம்பஸ் பொடியள் சொன்னால் தான் கேட்கும். இப்ப சனம் நாங்கள் சொன்னாலும் கேட்கும்” என்று கூறியதாக அப்போது தகவல் வெளியாகியிருந்தது. கிட்டுவினது அக்கூற்று மிக முக்கியமானது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீது யாழ் அறிவியல் சமூகத்தின் ஆளுமை முற்றாக நீங்கி புலிகள் பல்கலைக்கழகத்தின் மீது தங்கள் ஆளுமையை நிறுவ முற்பட்ட காலகட்டமே அதுவாகும். இக்காலகட்டத்தில் கலாச்சாரக் குழு, மறுமலர்ச்சிக் கழகம் ஆகியவையும் புலிகளின் செல்வாக்கினுள் வந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை முழுமையாகத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயன்ற புலிகள், பல்கலைக்கழகத்திற்குள் தமக்கு எதிரான சக்திகளை களையெடுத்த அதேசமயம் பல்கலைக்கழகத்தின் தலைமையையும் தங்களுக்கு ஏற்ப மாற்றியமைக்க முற்பட்டனர்.

**பல்கலைக்கழக உபவேந்தர் சு வித்தியானந்தன் கடத்தப்பட்டார்:**

ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் ஒருதடவை உபவேந்தர் தெரிவு செய்யப்படுவார். அதன்படி 1988 அத்தெரிவுக்கான காலமாக இருந்தது. பேராசிரியர் கைலாசபதியைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை வளர்த்தெடுப்பதில் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பங்கு குறிப்பிடத்தக்கது. கடந்த மூன்று தடவைகள் உப வேந்தராக இருந்த காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம், மருத்துவத்துறை, விவசாயத்துறை ஆகியவற்றை உருவாக்கியவர் பேராசிரியர் வித்தியானந்தன். இவர் மீண்டும் உபவேந்தராகப் போட்டியிட்டால் செனட் சபை அவரையே மீண்டும் உபவேந்தராகத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பபே அப்போது இருந்தது.

பேராசிரியர் வித்தியானந்தன் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கோ அல்லது தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கோ எதிரானவரல்ல. ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கோ அல்லது தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கோ அவர்கள் நினைத்தபடி எடுபட்டுச் செல்லக்கூடியவருமல்ல. அவர் தமிழரசுக் கட்சியின் பின்னணியைக் கொண்டவர். அதனால் அடுத்த உபவேந்தராக பேராசிரியர் வித்தியானந்தனை வரவிடாது தடுத்து தங்களுக்கு விருப்பமான பேராசிரியர் ஏ துரைராஜாவை நியமிப்பதே புலிகளுக்கும், ஈரோஸ் அமைப்பிற்கும் அவசியமானதாக இருந்தது.

1988ல் பேராசிரியர் வித்தியானந்தன் ஈரோஸ் இயக்கத்தினால் மொட்டையடிக்கப்பட்டு இம்சிக்கப்பட்டு அவரது வீட்டிலேயே காவலில் வைக்கப்பட்டார். அது தொடர்பாக பாசறை இயக்கம் என்ற பெயரில் அறிக்கை வெளியிட்ட ஈரோஸ் அமைப்பு அவர் ஊழல் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டியிருந்தது. அக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் பாசறை இயக்கம் என்ற பெயரில் செயற்பட்டு வந்தனர். அவர்களுக்கும் இக்கடத்தலுக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை. ஆனால் ஈரோஸ் பழியை அவர்கள் மீது போட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஈரோஸினதும் தமிழீழ விடுதலைப் புலகளினதும் விருப்பத்திற்கேற்ப பேராசிரியர் ஏ துரைராஜா தெரிவு செய்யப்பட்டார். அவரிடம் அதற்கான தகுதியும் இருந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் அவர் தெரிவு செய்யப்பட்ட முறையும்

தெரிவு செய்யப்பட்ட நோக்கமும் ஒரு அறிவியல் சமூகத்தின் உயர்ந்த ஸ்தாபனத்திற்கு எவ்விதத்திலும் பொருத்தமற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தனது உள்ளுணர்வை இழந்தது. தங்களது உப வேந்தருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக குரல் எழுப்ப யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் முடியவில்லை. இதற்கு மற்றுமொரு காரணம் போதைப் பழக்கத்திற்கு அடிமையான பேராசிரியர் வித்தியானந்தனின் சில நடவடிக்கைகள். மேலும் அவரால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள், பேராசிரியர் வித்தியானந்தனுக்கு அவரது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட நிகழ்வும், தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் குரல் எழுப்பாததும், அவரிடம் மிகுந்த உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியது. இவற்றின் காரணத்தால் அவர் வெகுவிரைவிலேயே காலமானார். அவர் கடத்தப்பட்டதற்குப் பின்னர் தான் இறக்கும்வரை அப்பல்கலைக்கழகத்திற்குச் செல்லவில்லை. அவரது உடலைக்கூட பல்கலைக்கழகத்திற்கு எடுத்துச் செல்ல அவரது பிள்ளைகள் மறுத்தனர். பின்னர் பல்வேறு வற்புறுத்தலால் அஞ்சலிக்காக அவரது உடல் பல்கலைக்கழகத்தில் சிறிதுநேரம் மட்டுமே வைக்கப்பட்டது என்பது வரலாறு.



**பல்கலைக்கழக மைதானத்தில் இந்தியப் படைகளுக்கு எதிரான யுத்தம் ஆரம்பம்:**

இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் அதன் சுற்று வட்டாரமும் புலிகளின் தளமாகி இருந்தது. 1987 யூலை 29ல் செய்துகொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை வந்த இந்திய அமைதிகாக்கும் படைக்கும் புலிகளுக்கும் இடையிலான முறுகல்நிலை ஒக்ரோபர் 12ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உதைபந்தாட்ட மைதானத்திலேயே யுத்தமாக வெடித்தது. இந்தியப் படைகளின் தாக்குதல் திட்டத்தை முன்கூட்டியே அறிந்துகொண்ட புலிகள், இந்தியப் படைகள் தரையிறங்க முற்பட்ட பல்கலைக்கழக மைதானத்தைச் சுற்றியிருந்த மருத்துவபீடம் உள்ளிட்ட பல கட்டிடங்களில் பதுங்கியிருந்து தாக்குதலை நடாத்தினர். இதில் அந்த மைதானத்தில் உலங்குவானூர்தியில் வந்திறங்கிய 30 வரையான இந்திய கொமாண்டோக்கள் முற்றாகக் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலை அடுத்து விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தங்கியிருந்ததாகக் கருதப்பட்ட பிரம்படியில் இந்தியப்படைகள் மோசமான பழிவாங்கல்

படுகொலைகளில் ஈடுபட்டனர். இதில் பொதுமக்களில் 50 பேர்வரை கவச வாகனங்களினால் நெரிக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு அவர்களது உடல் சின்னாபின்னமாக்கப்பட்டது. இந்தியப் படைகளுக்கும் புலிகளுக்குமான யுத்தத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இந்தியப் படைகளின் கண்காணிப்பிற்குரிய இடமாகியது.

### பல்கலைக்கழகத்தில் இலங்கை ~ இந்திய இராணுவத்தின் தலையீடுகள்:

1983ல் யாழ் பல்கலைக்கழகத்தில் தங்கள் பட்டப்படிப்பை ஆரம்பித்த மாணவர்கள் இரண்டு மடங்கிலும் கூடுதலான காலத்தைச் செலவிட்டு 1990 இலேயே தங்கள் பட்டப்படிப்பை முடித்து வெளியேறக் கூடியதாக இருந்தது. பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற போராட்டங்கள், ஹர்த்தால், பகிஸ்கரிப்புக்கள், இந்திய இராணுவம் யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் நிலைகொண்டிருந்தமை, காலத்துக்குக்காலம் பல்கலைக்கழகம் மூடப்பட்டமை என்று பல்வேறு காரணங்களால் பட்டப்படிப்புப் பாடத்திட்டங்களை திட்டமிட்டமுறையில் மேற்கொள்ள முடியவில்லை. இதற்கு இலங்கை இந்திய இராணுவங்களின் தமிழ் பகுதிகள் மீதான தாக்குதல் நடவடிக்கைகள் முக்கிய காரணமாக அமைந்தன.



ஆனால் இலங்கை இராணுவமோ, இந்திய இராணுவமோ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு எதிராகவோ அங்கு கற்கின்ற மாணவர்களுக்கு எதிராகவோ திட்டமிட்ட தாக்குதல்எதனையும்மேற்கொண்டிருக்கவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தின் நாளாந்த இயக்கத்தைப் பாதித்திருந்தது.

மேலும் இராணுவத்திற்கு எதிராக போராட்டம் ஒன்றை பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட போதுபுலி ஆதரவாளர்கள் சிலர் இராணுவத்தை நோக்கி கல்எறிந்து இராணுவத்தைக் காயப்படுத்தினர். அதனைத் தொடர்ந்து இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பல்கலைக்கழக மாணவன் சத்தியேந்திரா மரணமடைந்தார்.

### மருத்துவபீட விரிவுரையாளர் ரஜனி திரணகமவின் மரணம்:

இந்திய இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் முழுவீச்சுப் பெற்றிருக்கையிலும் புலிகள் தங்கள் மீதான எவ்விதமான விமர்சனங்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. அவ்வாறான விமர்சனங்களை ஆயுதங்கள் கொண்டு அடக்கிவந்தனர்.

இந்த விமர்சனங்கள் அறிவியல் சமூகத்தில் இருந்து வந்த போதும், அவர்களுக்கு எதிராகவும் தங்கள் ஆயுதங்களைப் பயன்படுத்தத் தயங்கியதில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்தவபீட விரிவுரையாளரும் மனித உரிமைப் போராளியுமான ரஜனி திரணகம 1989 செப்ரம்பர் 21ல் யாழ்ப்பாண மருத்துவபீடத்திற்கு அருகில் சுட்டுக்கொல்லப்பட்டார். நிர்மலா நித்தியானந்தனின் சகோதரியான இவர் விடுதலைப் போராட்டத்திற்கும் புலிகளுக்கும் ஆதரவாகச் செயற்பட்டு வந்தவர். பின்னர் அவர்களுடன் கருத்தியல் ரீதியில் முரண்பட்டிருந்தார். அவருடைய முறிந்த பனை (Broken Palmyrah) என்ற நூலுக்காகவே அவர் படுகொலை செய்யப்பட்டிருந்தார். முறிந்த பனை இலங்கை, இந்திய இராணுவங்களின் கொடிய மனித உரிமை மீறல்கள், தமிழீழ விடுதலை இயக்கங்கள் அனைத்தினதும் மனித உரிமைமீறல்கள் என்பனவற்றை அம்பலப்படுத்தி இருந்த போதும் விமர்சனங்கள் மீது எள்ளளவும் சகிப்புத்தன்மையில்லாத புலிகள் ரஜனி திரணகமவை படுகொலை செய்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படுகொலை செய்யப்பட்ட மிக முக்கியமான ஒருவர் ரஜனி திரணகம.



ரஜனி திரணகமவின் படுகொலையைக் கண்டித்து ஊர்வலம் நடாத்த பல்கலைக்கழக மாணவர்கள் தயாரான போது எமது விடுதலை இயக்கத்திற்கோ எமது தலைவருக்கோ எதிராக செயற்படுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என புலிகள் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். அதனால் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் வாயினை கறுப்புத் துணியால் கட்டி அப்போராட்டத்தைத் திட்டமிட்ட திகதியில் நடாத்தினர்.

ரஜனி திரணகமவின் மரணம் மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பின் (UTHR-J) சக விரிவுரையாளர்களான கலாநிதி சிறிதரன், கலாநிதி ராஜன் கூல் ஆகியோரது இருப்பையும் அச்சத்திற்குரியதாக்கியது. (கலாநிதி ராஜன் கூல், பின்னாளில் -2006ல் துணைவேந்தராக நியமனம்பெற்ற பேராசிரியர் ரட்னஜீவன் ஃகூலின் தமையனாராவார். இவர்கள் இருவருக்குமிடையே கருத்தியல்ரீதியில் பலத்த வேறுபாடுகள் இருப்பினும், இருவரும் பல்கலைக்கழகப் பின்புலத்தைக் கொண்டவர்களாதலாலும், கூல் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாதலாலும் விடுதலைப்புலிகளாலும் பின்னர் இன்றளவில் ஊடகங்களினாலும் தவறாக இனங்காணப்பட்டுவருகிறார் கள்). முறிந்த பனை நூலில் கலாநிதி சிறிதரன், கலாநிதி ராஜன் கூல்

ஆகியோரின் பங்களிப்பு மிக முக்கியமானது. யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு (UTHR-J) இலங்கையின் மனித உரிமை அமைப்புகளில் மிக முக்கியமானது. இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வருகின்ற வரை இவ்வமைப்பு இலங்கையில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதில் மிகக் காத்திரமான முயற்சிகளை எடுத்திருந்தது. சர்வதேச உரிமை அமைப்புகளாலும் சர்வதேச நாடுகளின் நீதிமன்றங்களாலும் (UTHR-J) இன் ஆவணங்கள் வலுவான ஆதாரங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இதில் பணியாற்றியவர்கள் குறிப்பாக கலாநிதி சிறிதரன், கலாநிதி ராஜன் ஃகூல் ஆகியோர் தங்கள் உயிரையும் பணயம் வைத்தே மனித உரிமை மீறல்களை இதுவரைகாலமும் வெளிக்கொண்டு வந்தனர். இவர்கள் மிக நீண்ட காலமாக தலைமறைவாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

**சிவரமணி ~ செல்வி ஆகியோரின் மரணங்கள்:**

மக்களுக்கான விடுதலையை வென்றெடுப்பதற்கு அறிவியல் சக்தியை சுதந்திரமாகச் செயற்பட புலிகள் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. தனது அறிவியல் சக்தியை சுதந்திரமாக உலாவவிட்டு துணிவுடன் கவிதைகள் வடித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி சிவரமணி சிவானந்தன் புலிகளின் அழுத்தங்கள் காரணமாக தனது கவிதைகளை தீயிட்டுக்கொ ழுத்திவிட்டுத் தன்னையும் அழித்துக்கொண்டார்.

சிவரமணி சிவானந்தனின் நண்பர்களான செல்வி தியாகராஜா, மனோகரன் ஆகிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு மாணவர்கள் 1990ல் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களுடைய காலத்தவரான சிதம்பரநாதன், முன்னாள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினியின் கணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. செல்வி தியாகராஜா, மனோகரனின் கொலைகள் தொடர்பாக புலிகளுடன் நெருக்கமாக இருந்த சிதம்பரநாதன் அறிந்திருந்ததாக செல்வி தியாகராஜாவுக்கு நெருக்கமானவர்கள் இன்றும் வலுவாக நம்புகின்றனர்.

செல்வி கடத்திச் செல்லப்பட்ட காலத்தில் பென் (PEN) என்ற சர்வதேச அமைப்பு அவருடைய எழுத்துக்கு விருது வழங்கிக் கௌரவித்தது. செல்வியுடன் அப்போது பர்மாவின் இராணுவ ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய அங் சன் சூச்சி க்கும் இவ்விருது வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. செல்வியை விடுவிக்கும்படியும் பென் அமைப்பு பகிரங்க

வேண்டுகோள் விடுத்தும் இருந்தது. செல்வியின் தாயார் நீண்டகாலமாகத் தன்னுடைய மகள் எங்கோ உயிருடன் இருப்பதாகவே எண்ணி இருந்தார்.

**அறிவியல் சுதந்திரத்திற்கான தடை:**

1990க்களின் முற்பகுதியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முற்று முழுதாக புலிகளிடம் சரணாகதி அடைந்தது. தங்களுக்கு எதிராகச் செயற்படக் கூடியவர்கள் என்று கருதப்பட்டவர்கள் களையெடுக்கப்பட்டனர்.

கற்பித்தலும் ஆய்வும் இணைந்து பாரபட்சமற்ற உண்மையைத் தேடுவதே பல்கலைக்கழகம் என்ற பல்கலைக்கழகத்தின் நோக்கமே கேள்விக்குள்ளாக்கப்பட்டு ஆய்விலும் கற்பித்தலிலும் புத்திஜீவித சுதந்திரம், பல்கலைக்கழகத்திற்கான சுயாதீனம் என்பன மறுக்கப்பட்டு சுதந்திரமான சிந்தனை - மரண தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டது. தமிழ் சமூகத்தின் அறிவியல் மையம் மௌனமானது. ஆயுதத்தின் மேலும் அதிகாரத்தின் மேலும் மட்டும் நம்பிக்கையும் காதலும் கொண்ட வே பிரபாகரனின் தமிழீழ விடுதலைப் புலிகள் சிந்தனையற்ற துப்பாக்கி ஏந்தும் இயந்திர மனிதர்களை உருவாக்கினர். இந்த இயந்திர மனிதர்களை உருவாக்குவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை தொழிற்சாலையாக்கினர்.



**யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டில் பல்கலைக்கழகம் புலிகளின் கட்டுப்பாட்டில்:**

தொண்ணுறுகளின் நடுப்பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து யாழ்ப்பாணம் மீண்டும் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்கு வந்த பின்னரும் புலிகள் வன்னியில் இருந்து மாணவர்களுக்கூடாகத் தங்கள் ஆளுமையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மீது கொண்டிருந்தனர். கஜேந்திரன் செல்வராஜா போன்ற பல இளைஞர்கள் வன்னிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களுக்காக புலிகள் திறமையான மாணவர்களைக் கொண்டு பரீட்சையை எழுதி இவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்பினர். இதன் காரணமாகவே கஜேந்திரன் செல்வராஜா குதிரைக் கஜேந்திரன் என்ற பட்டப்பெயரைப் பெற்றுக்கொண்டார். இவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் என்பதிலும் பார்க்க புலிகளின் முழுநேர உறுப்பினர்கள் என்பதே உண்மையாகும். இவர்களே பல்கலைக்கழகத்தை நிர்வகித்தனர்.

வெறும் கடிதத் தலைப்பு அமைப்புகளையும் சங்கங்களையும் உருவாக்கி அறிக்கை விடுவது போன்ற நாளாந்த நடவடிக்கைகளிலும் ஊர்வலங்கள், எதிர்ப்புப் போராட்டங்கள், பொங்கு தமிழ் போன்ற நடவடிக்கைகளிலும் இவர்களே ஈடுபட்டனர்.

பல்கலைக்கழகங்களில் திறமையான மாணவர்களுக்குக் கிடைக்கக் கூடிய புலமைப் பரிசில்கள் இம்மாணவர்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் புலிகளின் நோக்கங்களுக்காக வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களும் சமாதான காலத்தில் நோர்வே அரசாங்கத்தின் அனுமதியுடன் மேற்கு நாடுகளுக்கு வந்தவர்களுமே பெரும்பாலும் மேற்கு நாடுகளில் புலிகளின் நலன்சார்ந்த போராட்டங்களை முன்னெடுத்தனர். மேற்கு நாடுகளின் பல்கலைக்கழக மாணவர்களை அணி திரட்டுவதில் இவர்கள் முன்நின்றனர்.

### விரிவுரையாளர் பொங்கு தமிழ் கணேசலிங்கத்தின் மீது பாலியல் குற்ற வழக்கு:

25 20.09.2005, யாழ்ப்பாணத்தில் நீதியரசர் திருமதி சிறிநிதி நந்திசேகரம் முன்னிலையில் ஜுபொங்கு தமிழ்ஜிகனேசலிங்கம் என்று யாழ்ப்பாணத்தில் பிரபலமாகத் அறியப்பட்டிருந்த யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் தங்கராசா கணேசலிங்கம், ஆஜர் படுத்தப்பட்டார். இவர் முள்ளியவளையைச் சேர்ந்த முத்தையா யோகேஸ்வரி என்ற பதின்மூன்று வயதே நிரம்பிய, தனது வீட்டு வேலைக்காரப் பெண்ணைப் பாலியல் கொடுமை செய்த குற்றத்திற்காகவே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். சிறு வயதிலிருந்து கணேசலிங்கத்தின் வீட்டில் வேலைக்காரியாய் இருந்த யோகேஸ்வரியை கணேசலிங்கம் நாற்பது தடவைகள் பாலியற் கொடுமை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த றமேடியஸ் என்பவர் யோகேஸ்வரிக்காக வழக்காடினார். தங்கராசா கணேசலிங்கம் சார்பில் இன்றைய ரிஎன்ஏ பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தியும் அன்றைய ரிஎன்ஏ பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜும் வாதிட இருந்தனர். ஆனால் பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக இவர்கள் வழக்கில் இருந்து வாபஸ்பெற்றனர். அதன் பின் தங்கராசா கணேசலிங்கத்தின் சட்டத்தரணியாக ரிஎன்ஏ பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ந சிறீகாந்தா வழக்கை எடுத்திருந்தார்.

பின்னாட்களில் முத்தையா யோகேஸ்வரி தனது பெற்றோரைப் பார்க்கச் சென்றவர் காணாமல் போய்விட்டார். அவர் உயிருடன் இருக்கின்றாரா? அல்லது இல்லையா? அல்லது படுகொலை செய்யப்பட்டாரா? என்பதனை இன்றுவரை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனால் தங்கராசா கணேசலிங்கம் இன்னமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார். ஒரு அறியப்பட்ட பாலியல் குற்றவாளி இலங்கையில் உள்ள சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி இன்னமும் அதே பல்கலைக்கழகத்தில் தனது பணியைத் தொடர்கின்றார். ஆனால் பாதிக்கப்பட்ட அந்தக் குழந்தைத் தொழிலாளி உயிருடன் உள்ளாரா இல்லையா என்பதே தெரியவில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சில விரிவுரையாளர்கள் தங்கள் கல்வித் தகைமையையும் பொறுப்பையும் துஷ்பிரயோகம் செய்கின்றனர் என்ற குற்றச்சாட்டுகள் பல்கலைக்கழகச் சூழலில் காணப்படுகின்றது. தொழில் ரீதியான ஒழுக்கக் கட்டுப்பாடுகளை இவர்கள் மீறுவதாகவும் அக்குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கின்றன. இவை ஏனைய பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவானதாக இருந்தபோதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணச் சமூகத்தைப் போன்றே ஒரு மூடிய சமூகமாக இருப்பதால் இந்த ஒழுங்கீனங்கள் வெளிவருவதில்லை என்றும் கூறப்படுகின்றது.



**பேராசிரியர் ரட்னஜீவன் ஃகூலின் உபவேந்தர் நியமனமும் நாட்டைவிட்டு அவர் வெளியேறியதும்:**

இந்தப் பின்னணியில் 2006ல் பேராசிரியர் ரட்னஜீவன் ஃகூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக நியமிக்கப்பட்டார். அதற்கு முன்னதாக அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் University Grants Commission உறுப்பினராகவும் அவர் நியமிக்கப்பட்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இலத்திரனியல் பொறியியல் துறையில் பேராசிரியராகக் கடமையாற்றிய இவரது கல்வித் தகமையும் அதற்கேற்ற நேர்மையையும் பல்கலைக்கழகச் சமூகத்தில் அவருக்கு ஏற்கெனவே நன்மதிப்பை ஏற்படுத்தி இருந்தது. தங்கள் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்பவர்கள், தங்கள் பொறுப்புக்களைச் செய்யத் தவறுபவர்கள் மத்தியில் இவர் கடும்போக்காளரான ஒருவராகக் கணிக்கப்பட்டார்.

ஆனால் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு ப தமிழ்ச்செல்வன்

ரட்னஜீவன் ஃகூலின் நியமனத்தை கடுமையாக எதிர்த்தார். அவர் தமிழ் தேசியவாதத்திற்கு எதிரானவர் என தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டி இருந்தார். ஆனால் ரட்னஜீவன் ஃகூலுக்கு நெருக்கமானவர்கள் அவரை ஒரு தமிழ்த் தேசியவாதியாகவே காண்கின்றனர். ஆனால் புலிகளுக்கு ரட்னஜீவன் ஃகூலின்மீது இருந்த வெறுப்புக்குக் காரணம் அவர் மனித உரிமைகளுக்காகக் குரல்கொடுப்பவராக இருந்ததாகும்.

புலிகளின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அவர் கடுமையான விமர்சனங்களைக் கொண்டிருந்தார். இதன் காரணமாக தங்களுக்கு வளைந்து கொடுக்கக் கூடிய ஒருவரையே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக்க புலிகள் முற்பட்டனர். ரட்னஜீவன் ஃகூல் அதற்கு ஏற்ற ஒருவரல்ல. மிகுந்த ஆளுமை உடையவர். புலிகளுக்கு வளைந்து கொடுக்கக் கூடியவரல்ல. அதனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ரட்னஜீவன் ஃகூல் உபவேந்தராக்கப்படுவாரேயான ால், யாழ்ப்பாண அறிவியல் மையத்தில் தங்கள் அரசியலைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாத சூழல் ஏற்படும் என்பதை புலிகள் உணர்ந்தனர். அவரது நியமனத்தைப் பல வழிகளிலும் எதிர்த்தனர். தனிப்பட்ட எச்சரிக்கைகளை அவருக்கு மட்டுமல்ல அவரது குடும்பத்தினர்க்கும் விடுத்தனர்.

ரட்னஜீவன் ஃகூலின் விடயத்தில் பல்கலைக்கழகக் கவுன்சில் உறுப்பினர்களை ரட்னஜீவன் ஃகூல் க்கு வாக்களிக்க வேண்டாம் என்று புலிகளும் அவரது பல்கலைக்கழக ஆதரவு சக்திகளும் கடுமையாக பிரச்சாரம் செய்தனர். இருந்தும் ரட்னஜீவன் ஃகூல் கூடுதலான வாக்குகளைப் பெற்ற மூவரில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார். இது புலிகளுக்குக் கடுமையான கோபத்தை ஏற்படுத்தியதுடன் பேராசிரியர் ரட்னஜீவன் ஃகூல் க்கு ஆதரவாக வாக்களித்தவர்களுக்கு நெருக்கடிகளையும் வழங்கினர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கவுன்சிலால் தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட பெயர்களில் இருந்து பேராசிரியர் ரட்னஜீவன் ஃகூலை ஜனாதிபதி தெரிவு செய்தது ஆச்சரியமான விடயமல்ல.

புலிகளின் முகவர்களாக இயங்கிய கஜேந்திரன் செல்வராஜா தலைமையிலான பல்கலைக்கழக மாணவர் அமைப்பு ரட்னஜீவன் ஃகூலின் நியமனத்தைக் கடுமையாக எதிர்த்தது. பல மாணவர் போராட்டங்களை முன்னெடுத்தனர். ரட்னஜீவன் ஃகூலின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. தனிப்பட்ட பயமுறுத்தல்கள் பல வகையிலும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் விடுக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

கால் வைத்தால் தலையில்லாத முண்டம் பெட்டியில் வரும் என்று மார்ச் 11 2006ல் மக்கள் எழுச்சிப் படை தொலைபேசி மிரட்டல்களை ரட்னஜீவன் ஃகூல் க்கும் அவரது குடும்பத்தினருக்கும் விடுத்தனர். புலி ஆதரவு ஊடகங்களும் ரட்னஜீவன் ஃகூலுக்கு எதிரான பிரச்சாரங்களைத் தீவிரமாக்கி இருந்தனர். வழமையான துரோகி, ஒட்டுக்குழு, காட்டிக் கொடுப்பவர் என்ற பிரச்சாரங்கள் அப்போது தீவிரமாகி இருந்தது.

ஏப்ரல் 11, 2006ல் இதுபற்றிய அறிக்கையை சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்திருந்தது. அதில் ரட்னஜீவன் ஃகூலுக்கு இருந்த உயிராபத்தை அவ்வறிக்கை சுட்டிக்காட்டியது.

இவற்றினைவிடவும் ரட்னஜீவன் ஃகூலுக்கு எதிராக அவர் சார்ந்திருந்த மதமும் பயன்படுத்தப்பட்டது. ரட்னஜீவன் ஃகூல் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றுபவர். அதேநேரம் இந்து சமயத்தின் அடிப்படைவாதத்திற்கு எதிரானவரும் கூட. குறிப்பாக தமிழர்களிடையே உள்ள சாதியப் பாகுபாட்டிற்கு இந்து சமயத்தின் அடிப்படைவாதமே காரணம் என்ற அடிப்படையில் பல கட்டுரைகளை எழுதி உள்ளார். இவற்றினை அடிப்படையாகக் கொண்டு ரட்னஜீவன் ஃகூல் இந்து சமயத்திற்கு எதிரான கத்தோலிக்கர் என்ற துருப்புச்சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவருக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது.



இவற்றுடன் ரட்னஜீவன் ஃகூல் சிறந்த நிர்வாகியாகவும் அடிப்படை நேர்மை விடயங்களில் கடுமையானவராகவும் இருந்ததால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வழமையாகிப் போன நிர்வாக ஒழுங்கீனங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் உள்வீட்டு அரசியல் சகிடதித்தங்கள் தொடர முடியாது என்ற அபிப்பிராயமும் பல்கலைக்கழக நிர்வாகத்தினரிடம் இருந்தது. ரட்னஜீவன் ஃகூல் உபவேந்தரானால் இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த நடைமுறைகள் தொடர முடியாது என்பது மிகத்தெளிவாகி இருந்தது. அதனால் ரட்னஜீவன் ஃகூல் இன் வரவு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்திலும் வரவேற்புக்குரியதாக இருக்கவில்லை.

புலிகளுடைய கடும்போக்கை கைவிட்டு ரட்னஜீவன் ஃகூலைத் தனது கடமையைத் தொடர வழிவிடுமாறு கேட்டு வெவ்வேறு வழிகளில் முயற்சிக்கப்பட்டது. புலிகளுடனும் இது தொடர்பாக நேரடியாகவும் பேசப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இவ்விடயத்தில் தலையீடு செய்தது. ஆனால் அவை எதுவும் பலனளிக்கவில்லை. தமிழ் தேசியக்

கூட்டமைப்பும் அவரை நாட்டைவிட்டு வெளியேறும்படி நிர்ப்பந்தித்தது.

யாழ்ப்பாணப் பல்கைலக்கழகத்தைச் சிறந்தவொரு பல்கலைக் கழகமாக மாற்றும் திட்டங்களையும் முழுமையான பொறியியல்துறையை அங்கு நிறுவும் திட்டத்தையும் ரட்னஜீவன் ஃகூல் வெளியிட்டு இருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யும் University Grants Commissionஇன் உறுப்பினராகவும் அவர் இருந்ததால் அவருக்கு யாழ்பாணப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான நிதியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் இருந்தது. அவ்வாறிருந்தும் தகுதியான ஒருவரை புலிகளும் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் நிராகரித்தன.

இறுதியில் ரட்னஜீவன் ஃகூல் நாட்டைவிட்டு வெளியேறுவதே தனதும் தனது குடும்பத்தினரதும் பாதுகாப்பிற்கு ஏற்றது என்று முடிவுக்குத் தள்ளப்பட்டார். தனது தொழிலில் இருந்து நீண்ட விடுமுறையைப் பெற்றுக்கொண்ட ரட்னஜீவன் ஃகூல் ஏப்ரல் 20ல் இலங்கையைவிட்டு வெளியேறினார். முன்னர் கலிபோர்னியாவில் உள்ள Harvey Mudd College இல் 12 ஆண்டுகள் பேராசிரியராக இருந் அவர், இலங்கைச் சூழலிலேயே தனது பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டும் என்ற ஆதங்கத்துடன் இலங்கை சென்றவர் மீண்டும் தாய்நாட்டைவிட்டு வெளியேறி அமெரிக்கப் பல்கலைக்கழகத்திலேயே தனது கற்பித்தலைத் தொடர நிர்ப்பந்திக்கப்பட்டார்.

**புதிய உபவேந்தர்:**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 36 ஆண்டுகளில் அதன் முற்பகுதியான காலகட்டமே ஒப்பீட்டு அளவில் ஓரளவு சுயாதீனத்துடன் இயங்கக் கூடியதாக அமைந்திருந்தது. அதன் பின் வந்த காலங்கள் பெரும்பாலும் ஆயுதப்போராட்ட நெருக்கடிக்குள் சுயாதீனத்தை இழந்தே இயங்கிக் கொண்டிருந்தது. இதன் காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது ஆளுமையை முற்றாக இழந்துள்ள நிலையே இன்றுள்ளது. இந்த நிலையில் சடுதியாகவும் வேகமாகவும் ஆனால் விவேகமாகவும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அதனை உருவாக்கிய பேராசிரியர் கைலாசபதியின் இலக்கு நோக்கி - ஆசியாவின் சிறந்த பல்கலைக்கழகமாகக் கொண்டு செல்வதற்கு மிகுந்த ஆளுமையும் பரந்த சிந்தனையும் உடைய ஒருவரே உபவேந்தராக நியமிக்கப்பட வேண்டும்.

# "எல்லாம் அல்லது பூச்சியம் என்ற கொள்கையே எம்மைக் கைவிட்டது! ஆராய்ச்சியாளராகிய நாம் உண்மைக்கு மட்டுமே அடிபணியக் கடமைப்பட்டுள்ளோம்." பேராசிரியர் ∴கூல் உடனான நேர்காணல்



(யூலை 21, 2010)

"சமூகமாற்றத்தை ஏற்படுத்தாமல் சமூகத்தைப் பிரதிபலித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு பல்கலைக்கழகமல்ல ஒரு பெரிய பள்ளிக் கூடமே!" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடர்பான ஒரு நீண்ட விவாதம் தேசம்நெற் இணையத்தளத்தில் தொடர்கிறது. இவ்விவாதம் இதுவரை பேசப்படாத பல விடயங்களை மக்கள் தளத்திற்குக் கொண்டுவந்துள்ளது. மேலும் தமிழ் அறிவியல் சமூகமும் - அதன் ஸ்தாபனமாக விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பற்றியுமான ஒரு மீள் மதிப்பீட்டின் அவசியத்தை இந்த விவாதம் வலியுறுத்தி இருந்தது. இலக்குகள் மீள்வரைபுக்கு உட்பட்டு தன் சுயாதீனத்தையும் சுய அடையாளத்தையும் உறுதிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணப்

பல்கலைக்கழகம் தன்னை மீள் நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியமும் அவசரமும் தற்போது ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தராக நியமிக்கப்பட்டு அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாத அரசியல் சூழலில் நாட்டைவிட்டே வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட பேராசிரியர் ரட்னஜீவன் ஃகூல் அவர்களுடனான இந்த நேர்காணல் இந்த விவாதத்தை மற்றுமொரு தளத்திற்கு நகர்த்தும் என நினைக்கின்றேன்.

இலங்கையின் சிறந்த நேர்மையான கல்வியியலாளராக மதிக்கப்படுகின்ற பேராசிரியர் ரட்னஜீவன் ஃகூல் அவர்களுடனான இந்நேர்காணல் மின் அஞ்சலூடாகவே அமைந்தது. அவருடைய பதில்கள் அவர் கைப்பட தமிழில் எழுதி மின் அஞ்சலூடாகவே அனுப்பப்பட்டு சரிபார்க்கப்பட்டு பிரசுரிக்கப்படுகின்றது. அவருடைய தமிழ் மொழிப் பாவனை அறுபதுகளின் இறுதிப் பகுதியுடனேயே மட்டுப்படுத்தப்பட்டு இருந்தாலும் அப்போதைய மொழிநடையிலேயே தனது பதில்களை அவர் பதிவு செய்துள்ளார். இனி நேர்காணலுக்குள் நுழைவோம்.



**தேசம்நெற்:** உங்களைப் பற்றிய ஒரு ஆழமான சுருக்கமான அறிமுகம்…

**பேராசிரியர் ஃகூல்:** ஃகூல் குடும்பத்தை ஸ்தாபித்தவர் ஸ்ரீநிவாசன் ஆவார். அவர் பருத்தித்துறையில் ஒரு சைவக் கோவில்மணியகாரன். ஆனால் 15 ஏப்ரல் 1845 அன்று கனம் பீட்டர் பேர்சிவல் ஊழியத்தால் ஞானஸ்நானம் பெற்றுப் பின்பு பேர்சிவலோடு மெதடீஸ் திருச்சபையிலிருந்து ஆங்கிலிக்கன் திருச்சபைக்கு 1850 மட்டில் மாறினார். இதிலிருந்து நாம் நல்லூர், சுண்டிக்குழி ஆகிய ஆங்கிலிக்கன் ஸ்தாபனங்களைக் கொண்ட கிராமங்களைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகிறோம். ஊர் என்பது கிறிஸ்தவர்கள் மத்தியில் சிக்கலானது.

எனது அம்மாவின் தகப்பனார் சாமுவேல் சங்கரப்பிள்ளை சோமசுந்தரம். மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் கொடிமர சங்கரர் என்ற பட்டத்தையுடையவர். மாவிட்டபுரம், கொல்லன்கலட்டி, கருகம்பானை ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர். மாவிட்டபுரம் கோவிலின் மூலஸ்தானத்திலுள்ள மூன்று விக்கிரகங்களில் இடதுபக்கமாகவுள்ளது சோமசுந்தரத்தின் தமையன் முதலியார் பிள்ளையால் திருவிழாவில் கொடியேற்றும் உரிமையைத் தொடரத் தனக்கொரு வாரிசு வேண்டி நேர்த்திக் கடனாகக் கட்டியது.

சோமசுந்தரம் கிறிஸ்தவராகி யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் டீன் ஆகவும், சுண்டிக்குழி சோமசுந்தரம் வீதியில் வீடு கட்டி பின் நல்லூரில் 32 வருஷம் குருவாகவும் இயங்கினார். என் அய்யாவின் தாய் பக்கம் ஏழாலையைச் சேர்ந்தவர்கள். என் மனைவி துஷியந்தி ஆசீர்வாதம். ஐந்து பிள்ளைகள். இப்போ நான்கு.

அரசியல் பின்னணி என்றால் தமிழரசுக் கட்சி. செல்வநாயகம், திருச்செல்வம் (தகப்பன் - மகன் - நீலன் திருச்செல்வம்), நாகநாதன், கதிரவேற்பிள்ளை, வன்னியசிங்கம், தர்மலிங்கம் யாவரும் ஏதோ ஒரு விதத்தில் எனக்குச் சொந்தமானவர்கள். அப்பா ஃகூல் போதகர் அவர்கள் TULF மேடைகளில் பேசாமல் உட்கார்ந்து இருப்பார்.

படித்தது நல்லூர் சாதனா பாடசாலை, பரி யோவான் கல்லூரி, பட்டங்கள் D Sc (Eng) London, Ph.D. Carnegie Mellon, MSc (Distinction) London, BSc (Ceylon /Katubedde), IEEE Fellow, C.Eng.

**தேசம்நெற்:** உங்கள் இளமைக்காலம் தமிழ்த்தேசிய எழுச்சியுடன் பின்னிப் பிணைந்ததாக இருந்திருக்கும் என நினைக்கிறேன். அதனை தேசம்நெற் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள முடியுமா?



**பேராசிரியர் ஃகூல்:** குறிப்பாகப் பெரிதாய் ஒன்றும் இல்லை. அம்மா நல்லூர் பரி. யாக்கோபூ ஆலயப் பெண்களுடன் சத்தியாக்கிரகம் இருக்கப் போனபோது நான் துணையாகப் போவேன். சொந்தக்காரர் தமிழரசுக்கட்சி வேட்பாளரானபோது நானும் சிறு பெடியனாக அவர்களுடன் ஒரு வால்போல் போனேன். 1970ல் மாணவர் பேரவை ஊர்வலங்களில் ஈடுபட்டிருந்தேன். 1986 வரை இயக்கங்களுக்கு ஆதரவு என் மனதில் இருந்தது. என் அண்ணன் ஒருவர் சத்தியசீலன், தோமஸ் அரியரத்தினம் ஆகியோருடன் சுப்பிரமணியம் பூங்காவில் வகுப்புகளுக்குப் போனவர்.

நியூயோர்க் இலங்கைத் தமிழ் சங்கத்தின் பத்திரிகை ஆசிரியனாகவும் 1983 - 84 காலப்பகுதியில் செயல்பட்டு Tamil News என்ற வெளியீட்டை வைத்தியர் நாகேந்திராவின் கீழ் செய்தேன்.

ஆனால் நாமே எம்மைக் கொல்லத் தொடங்கி, எங்கள் நிறுவனங்கள் யாவும் அக்கொலைகளை ஆதரித்ததுடன் நான் தனியாய் இயங்கி எங்கு மனித உரிமைகளைப் பேண முடியுமோ அங்கு செய்யக் கூடியதைச் செய்து வருகிறேன். மனித உரிமைகள் தமிழரின் மட்டுமல்ல. பெண்கள், பிள்ளைகள், சாதி பெயரில் தாழ்த்தப்படுவோர் போலப் பலரை அடக்கும்.

மேலும் என் பாட்டனுக்கும் அப்பாவுக்கும் குரு உடைகள் (cassock) தைத்தவர் ஒரு இஸ்லாமிய தையலாளர். அவர் மகன்மார் ரஃபிக், ஸசீற் ஆகியோர் பரியோவான் கல்லூரியில் படித்து, என்னையும் என் சகோதரரையும் brother என்று அழைத்து, பிரதான வீதியில் கடை வைத்து, எமது உடுப்புகளைத் தைத்தனர். அவர்களைத் துரோகிகள் என்று குடியெழுப்ப, எல்லாமே எனக்குப் புளித்துவிட்டது. அதை ஆதரித்த - என்னுடன் தமிழ் அரசியலில் இயங்கிய - அமெரிக்க தமிழ் நண்பர்களை சகிக்க முடியாத நிலையேற்பட்டது.

**தேசம்நெற்:** மனிதன் ஒரு சமூக விலங்கு என்பார்கள். நீங்கள் சமூகம் பற்றிய ஆழமான அக்கறையுடைய ஒரு மனிதர். அந்த வகையில் சமூக மாற்றம் பற்றிய உங்கள் இளமைக்கால கனவுகள் எதிர்பார்ப்புகளுக்கு உங்கள் கல்வியியல் சாதனைகள் துணைபுரிந்துள்ளனவா?

**பேராசிரியர் ஃகூல்:** நான் கிறிஸ்தவனாக வளர்க்கப்பட்டேன். குடும்பமாக திருவிவிலியத்தை வாசித்து வந்தோம். என் கனவுகள் எல்லாம் அந்த அடிப்படையில் அமைந்துள்ளன. கடவுள் கெட்டவர் உட்பட யாவரையும் நேசிக்கிறார். இந்த அடிப்படைக் கூற்றிற்கு அமைய விதவைகளையும் அனாதைகளையும் பேணல், ஊர் பெயரும் தற்காலிக வாசகரை பராமரித்தல், மறியலில் உள்ளோரைப் பார்த்தல், அறுவடை நேரம் ஒரு பங்கை அறுக்காமல் ஏழைகளுக்கு விடல் போன்ற பல கட்டளைகள் வேதவசனத்தில் உள்ளன. இவை யாவும் எம்மத்தியில் சமத்துவத்தைப் பேணுகின்றன. ஆகவே உங்கள் கேள்விக்குப் பதிலாக என் சமயக் கல்வியே என் கனவுகளை உருவாக்கியுள்ளது. சமயசார்பற்ற கல்வியில் சமத்துவத்திற்கோ மனித உரிமைகளுக்கோ அடிப்படை காண்பது கஷ்டம்.

**தேசம்நெற்:** சமூக மாற்றத்திற்கு அல்லது சமூகப் பொறியியலுக்கும் அறிவியல் சமூகத்திற்கும் உள்ள உறவு பற்றிக் குறிப்பிட முடியுமா? பல்கலைக்கழக சமூகத்தை அறிவியல் சமூகமாக வரையறுக்க முடியுமா?

**பேராசிரியர் ஃகூல்:** மேற்கூறியவாறு சமூகக் கல்வியில் எது சரி, எது பிழை என்பதற்கு அடிப்படையில்லை. நான், Ethics for Engineers என்ற ஒரு பாடம் கற்பிக்கிறேன். பல்கலைக்கழகத்தில் நாம் சமயம் சாராமல் படிப்பிக்கக் கடமைப்பட்டுள்ளோம். ஆனால் புத்தகங்களில் இன்னும் ஒரு திருப்தியான அடிப்படையில் சரி - பிழைக்கு வரைவிலக்கணம் இல்லை. ஆகவே சுயநலத்தையே அடிப்படையாக வைத்து பலர் கற்பிக்கிறோம்.

உதாரணமாக மனித உரிமைக்கு அடிப்படை அதிகாரம் வல்லமை உள்ள நாம் இன்று மற்றோரை நசுக்கலாம். ஆனால் நாளை இந்த அதிகாரம் வல்லமை மறுபக்கம் மாறினால் அவர்கள் அதே துன்புறுத்தலை எமக்குச் செய்யலாம். ஆகவே இருவரும் சேர்ந்து உரிமைகளைப் பேணும் ஒரு நிற்பந்தத்திற்கு வருவதே இருவருக்கும் நல்லது. இதில் பல்கலைக்கழகத்திற்கு பெரிய பொறுப்புண்டு. யானைக்கொரு காலம் பூனைக்கொரு காலம் என்பதெல்லாம் சரித்திரத்தில் உண்டென்று காட்டினால் யானை பூனையைப் பராமரிக்கும்.

**தேசம்நெற்:** இலங்கையிலும் இலங்கைக்கு வெளியே உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களிலும் பட்டப்படிப்பை மேற்கொண்டும் அப்பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகவும் ஆய்வாளராகவும் கடமையாற்றி உள்ளீர்கள். அவற்றின் ஒப்பு நோக்கில் கடந்த ஆறு சகாப்த சுதந்திர இலங்கையில் பல்கலைக்கழகங்கள் நாட்டின் அரசியல் பொருளாதார சமூக கலாச்சார அம்சங்களில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

**பேராசிரியர் ஃகூல்:** சிங்களவரும் தான் தமிழரும் தான் மார்க்க ஏகாதிபத்திய சரித்திரம் எழுத வெளிக்கிட்டிருக்கிறார்கள். மெய்யென்றாலும் பரவாய் இல்லை. ஆனால் பல படுபொய்கள். சரித்திரம் என்று பாடப் புஸ்தகங்களில் எப்படி சிறுபான்மையினரைத் தாக்குகிறது என்று யோசியாமல் எழுதுகிறார்கள். எழுதி இலங்கையை நொருக்கிவிட்டார்கள். இலங்கையிலோ மேல்நாட்டிலோ பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு ஆராய்ச்சியே முதற்கடமை - முதல் பட்ட (BA, BSc) படிப்பு அல்ல. இந்த அடிப்படையில் தான் விரிவுரைகள் ஒரு வருடத்திற்கு 9 மாதங்களுக்கும் அதுவும் கிழமைக்கு 4 - 5 மணித்தியாலங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளன. இதை எல்லோரும் சரியாயச் செய்தால் எல்லாம் சீராக இருக்கும். அதனால் வரும் கூற்றுகளுக்கு இடையிலான போட்டியும் விவாதமும் இந்த மார்க்க ஏகாதிபத்தியத்தை முறித்திருக்கும். சிலர் சொல்வார்கள் இலங்கையில் வசதிகள் இல்லாமல் ஆராய்ச்சி செய்ய முடியாதென்று. அப்படியென்றால் எப்படி ஒவ்வொரு வருஷமும் சுமார் 150 இலங்கையர் ஜனாதிபதியின் பரிசை தமது ஆராய்ச்சிக்கு வெல்லுகிறார்கள். யாழ்ப்பாணத்தில் மீண்டும் அடிப்படை ஆராய்ச்சி செய்ய பல வாய்ப்புகள் தலைப்புகள் எல்லாத்துறைகளிலும் உள்ளன.

**தேசம்நெற்:** 19ம் நூற்றாண்டில் இருந்த பல்கலைக்கழகம் பற்றிய கருத்தியலுக்கும் பல்கலைக்கழகம் பற்றிய தற்போதுள்ள

கருத்தியலுக்கும் உள்ள வேறுபாடு என்ன? இலங்கைப் பல்கலைக்கழகங்களின் கருத்தியல் என்னவாக உள்ளது.

**பேராசிரியர் ஃகூல்:** காலப்போக்கில் பல்கலைக்கழகங்கள் மாறி வருகின்றன. பழைய காலத்தில் ஒரு ஆராய்ச்சியாளர் மாணவரை வைத்துத் தன் ஆராய்ச்சியை நடத்தினால் பல வருஷங்களுக்குப் பின் ஆசிரியருக்கு கலாநிதிப் பட்டம் (D Sc., D.Litt.) வழங்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சியின் நிமித்தம் கூடக் கூட பட்டதாரிகள் தேவைப்பட கல்வி ஜனநாயகப்படுத்தப்பட்டது. இதனுடன் வந்த ஆசிரியத் தேவையை பல்கலைக்கழகங்களில் பூர்த்தி செய்ய கலாநிதிப் படிப்பு தனிமையாக பல வருடங்களில் முடிக்கும் நிலையிலிருந்து 2 - 5 வருஷங்களில் ஒரு ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் செய்யும் பாடமாக மாற்றப்பட்டது. இதன் தாக்கவிளைவையே இன்று காண்கிறோம். உலகெங்கும் அரசாங்கங்களும் முதலீடு செய்கின்றன. ஆராய்ச்சிக்கு ஆராய்ச்சியாளரே நிதி திரட்டுவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது. வர்த்தக விளைவு தரும் ஆராய்ச்சி மட்டுமே இப்படி மேலோங்குவது துக்கத்திற்குரியது. ஆராய்ச்சிக் கலாசாரம் வேரூண்டாத இலங்கையில் இது ஒரு பேரழிவு. குறிப்பாக எமக்கு வேண்டிய சமூக சரித்திர வட்டாரங்களில் கேடு தரும்.



**தேசம்நெற்:** இலங்கையில் இனப்பிரச்சினை உக்கிரமாக இருந்த காலகட்டங்களில் பேராதனை பல்கலைக்கழகத்தில் நீங்கள் பேராசிரியராக இருந்துள்ளீர்கள். தென்பகுதி பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர், தமிழர் என்ற வகையில் எவ்வாறு எதிர்கொண்டீர்கள்?

**பேராசிரியர் ஃகூல்:** பல பிரச்சினைகள். பொலிஸ் மாணவரைப் பிடித்தல், புலிகள் சாராத மாணவர் வாயை மூடவேண்டிய நிலை, ஆங்கில பாடக்கோப்பில் விரிவுரையாளர் சிங்களத்தில் படிப்பித்தல், தொழில் பயிற்சிக்கு, தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி CEB, SLT போன்ற புகழ்வாய்ந்த நிறுவனங்களில் தமிழருக்கு வாய்ப்பு அளிக்கப்படாமை, ஆனையிறவு வீழ்ச்சியைத் தொடர்ந்து சில தமிழ் மாணவர் பட்டாசு கொழுத்த அதைத் தொடர்ந்து சிங்கள மாணவர்கள் தமிழரிடம் இருந்து இறந்த இராணுவத்தினருக்கு நிதி சேர்க்க, ஒரு பதட்டமான நிலையேற்பட்டமை, வன்னி மாணவர் அனுமதிக் கடிதம் பிந்திக் கிடைத்ததால் பிந்தி பீடத்திற்கு வந்ததால் அனுமதி மறுக்கப்பட்டமை, இதில் ஆசிரியராகிய நாம் தலையிடுவது கஷ்டம்.

திறந்த பல்கலைக்கழகத்தில் (Open University, Colombo) சைவ மாணவர்கள் தைப்பொங்கலைக் கொண்டாட முயன்றபோது அரிசி மூட்டைகளை வாசலில் இறக்கி சோதித்த பின் தூக்கி ஒரு கட்டை தூரம் நடக்க வேண்டும் என்றார்கள். மாணவர்கள் சொல்ல என் மனைவி அப்போதைய தமிழ்த் துணைவேந்தரிடம் இதைப் பற்றிக் கூறியபோது அவர் அன்பாகச் சொன்னது, பிள்ளை, நாங்கள் இங்கு இருப்பதே கஷ்டம். இவற்றை எழுப்பினால் இருக்கவே முடியாமல் போய்விடும் . இதுவே நிலை.

**தேசம்நெற்:** தமிழ்ப் பேராசிரியர் என்ற வகையில் நீங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் என்ன ? கல்வியியலாளர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் என்ன?

**பேராசிரியர் ஃகூல்:** பேராதனையில் நான் மாணவர் சார்பாக காவலகம் சென்றபோது பொலிஸார் பேராதனைப் பேராசிரியர் என பெயருக்கு மரியாதை கொடுத்து 24 மணிகளுக்குள் மாணவரை விடுவித்தார்கள். ஆனால் பல்கலைக்கழகத்தினுள்ளே நான் மேற்கூறிய பிரச்சினைகளை எழுப்பிய போது என்னை சிங்களவருக்கு எதிரானவர் என்று கருதி 3 வேறு வேறு விசாரணைகளுக்கு உள்ளாக்கினர்.



இப்பொய் குற்றச்சாட்டுக்கள்:

1) பீடத்தில் புள்ளிவிபரப் புஸ்தகத்தை மோசடியாக மாற்றினேன் .

2) பாடத்திற்கு வெளியான கேள்விகளை பரீட்சையில் கேட்டு பீடத்தின் தரத்தைக் குறைத்தேன்.

3) துறைத் தலைவருடன் ஒத்துழைக்க மறுத்தேன் என்றும் இதன் விளைவால் என் கேள்வித்தாளில் பிழைகள் இருந்தன என்றும். மேலும் நான் விசாரணையின் கீழ் இருந்தேன் என்றும் சொல்லி என்னை உத்தியோகத்தில் நிரந்தரமாக்கவும் சிரேஷ்ட பேராசிரியராக்கவும் மறுத்து என் மனைவியையும் வேலை நீக்கினார்கள்.

எல்லாம் தாங்க முடிந்தது. ஆனால் முதலாம் குற்றச்சாட்டு நான் ஒரு தமிழ் மாணவனை 2ம் வகுப்பு மேற்பிரிவிலிருந்து முதலாம் வகுப்பு பட்டதாரியாக மாற்றச்செய்ததென்பது என் சிங்கள நண்பர்களையும் என்மேல் சந்தேகம் கொள்ளவைத்தது.

ஒருநாள் விரிவுரை முடித்து வந்த போது ஒரு CID தலைவர் என் வருகைக்கு காத்திருந்து, தான் சிகல உருமயவைத் தொடரும் குழுவைச் சேர்ந்தவரென்றும் என் பெயர் பல கூட்டங்களில் கோபமாய்

பேசப்பட்டதென்றும் சொல்லி, எச்சரிக்கையாயிருக்க வேண்டி கொழும்பு, கண்டி தொலைபேசி இலக்கங்களை அவசரமேற்படின் அழைக்கத் தந்தார். ஒரு தஞ்சத்திற்கு, என்னை வேலை நீக்க முயலும் துணைவேந்தரிடம் ஓட முடியவில்லை. அதிலிருந்து குடும்பத்தை கொழும்புக்கு மாற்றி பகலில் மட்டும் பேராதனைக்கு வந்து சென்றேன்.

3 வருடங்களின் பின் விசாரணைகள் நான் குற்றமற்றவன் என்ற முடிவுக்கு வந்தன. மேலும் நீதிமன்றம் என்னை நிரந்தர பணியாளாக்கி சிரேஷ்ட பேராசிரியராக 3 வருடம் பின் செயலாகச் செய்யும்படி கட்டளையிட்டது. இதைச் செயற்படுத்தவும் நீதிமன்றம் சென்று நீதிமன்றத்தில் எனக்குச் சார்பான முடிவுக்கு பல்கலைக்கழகம் மரியாதையீனமாய் நடந்தது. (Contempt of Court) என்ற மனுவை பதிந்துதான், நீதிமன்றக் கட்டளைகள் அமுல்படுத்தப்பட்டன. இதேபோல் மனித உரிமை ஆணைக்குழு என் மனைவியின் வேலை நீக்கத்தை பிழையானது என்று தீர்த்தது.

மார்ச் 2008ல் யாழ். பல்கலைக்கழகத்திற்கு, பேராதனை என்னை 3 வருடத்திற்கு துணை வேந்தராக இயங்கக் கொடுத்தது. நான் இந்த 3 வருடம் முடியும் காரணத்தால் டிசம்பர் 19 2008 இலங்கை வந்து என் 7ம் வருட விடுமுறையை எடுப்பேன் என்று எழுதி அங்கு சென்றேன். அதேநாள் துறைத் தலைவருக்கு துணை வேந்தரிடம் இருந்து நான் வேலை நீக்கப்பட்டுள்ளேன் என்ற கடிதம் வந்தது. எனக்கு இன்னும் அந்த கடிதத்தின் பிரதி வரவில்லை.

தமிழராகியஎமக்குஇதுசிங்களவியாதிஎன்றுஇப்படிப்பட்டநடத்தையை தட்டிவிடுவது சுலபம். ஆனால் சிங்களவர், தமிழர் நாம் யாவரும் இப்படியே. எமக்கு எதிராக இயங்கிய தமிழர் ஒருவர் தேவையான ஆராய்ச்சிக் கட்டுரைகள் இல்லாமல் இப்போ பேராசிரியர் ஆக்கப்பட்டுள்ளார். இன்னுமொருவர் தேவையான பேராசிரியர் அனுபவம் அற்று இளைப்பாறச் சற்று முன்பு சிரேஷ்ட பேராசிரியராக்கப்பட்டார். சேர் தொமஸ் மோ சொன்னது போல, ஒரு பட்டத்திற்காக தங்கள் ஆத்மாவைக் கூலியாக விற்றுள்ளனர். இதேபோல் நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு கணணிப் பேராசிரியராக விண்ணப்பித்தேன். என் வயதைச் சேர்ந்தோர் படித்த காலத்தில் கணணியியல் ஒரு துறையாக இருக்கவில்லை. ஆகவே உலகெங்கும் துறையை உருவாக்கியவர்கள் ஒன்றில் என்னைப் போல் மின்-கணணிப் பொறியியலாளர் அல்லது கணிதத்துறை சார்ந்தோர்.

மேலும் என் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் பெரும்பாலானவை

கணணியியலைச் சேர்ந்தவை மட்டும் அல்லாமல், பேராதனை கணணித்துறையை பொறியியல் பீடத்தின் கீழ் ஸ்தாபித்து திறந்த பல்கலைக்கழகத்தில் IT பேராசிரியராகவும் 2 வருஷகாலம் வேலை செய்துள்ளேன். அப்படி இருந்தும் என் விண்ணப்பம் தெரிவுக்குழுவுக்குப் போடப்படவில்லை. நான் வழக்கு வைத்தபோது வேறு விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் என்னை நியமிக்குமாறு தீர்ப்பு தரப்பட்டது. பல கடிதங்கள் எழுதியும் அமுல்படுத்தப்படவில்லை. மறுமொழியும் தரப்படவில்லை. இந்தத் தமிழ் நிர்வாகம் சிங்கள நிர்வாகம் போன்றதோ அல்லது எமக்கு நியாயத்தோடும் நீதியோடும் நிர்வகிக்க முடியுமா என்பதே தமிழராகிய நம்மை எதிர்நோக்கும் சவால்.

**தேசம்நெற்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட காலங்களுக்கு ஒருமுறை பின்நோக்கிப் பயணிப்போம். அப்போதைய உங்கள் மனப்பதிவுகளை எமது வாசகர்களுக்கு வெளிக்கொண்டுவர முடியுமா?

**பேராசிரியர் ஃகூல்:** இது தரப்படுத்தலின் உச்சத்தில்ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்ரீமா என்றாலே மாணவர் மத்தியில் வயிற்றெரிச்சல். பரமேஸ்வரா, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளை அரசாங்கம் எடுத்து ஒரு சதம் செலவழியாமல் எமக்குப் பல்கலைக்கழகம் தருவதாக செய்ததை ஒரு நாடகமாய் கருதி மாணவர் பேரவையும் தமிழரசுக்கட்சியும் திறப்பு விழாவை பகிஷ்கரித்தோம். ஆனால் 1979 மட்டிலான கண்ணோட்டத்தில் அது ஒரு பெரிய காரியமாகும். 1974ல் நாம் மாட்டுக்கொட்டிலாகக் கருதியது 1979ல் நாட்டின் ஒரு பிரதான பல்கலைக்கழகமானது. இது எடுத்துக்காட்டுவது என்னவென்றால், சின்னக் காரியங்களிலும் சுயநிர்ணய உரிமையை எடுத்தால் அதைக் கட்டி எழுப்பலாம் என்பதே. 1987ல் 2000ம் ஆண்டும் பின் 2004இலும் கிடைத்த தருணங்களை எல்லாம் அல்லது பூச்சியம் என்ற கொள்கையின் கீழ் கைவிட்டது எனக்கு பெரிய கவலை.

**தேசம்நெற்:** 2006ல் நீங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு உபவேந்தராக நியமிக்கப்பட்ட போது உங்கள் உணர்வு எப்படி இருந்து? நீங்கள் அப்பதவியைத் தொடர்ந்தால் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினர்க்கும் உயிராபத்து விளையும் என்ற நிலையேற்பட்ட போது உங்கள் மனநிலை என்ன?

**பேராசிரியர் ஃகூல்:** என்னத்தைச் சொல்வது. மனம் மிகத் தளர்ந்திருந்தேன். அமெரிக்காவில் இருந்து கூட்டி வந்த பிள்ளைகள்

"அப்பா, இதுவா உங்கள் யாழ்ப்பாணம்?" என்று கேட்டனர். ஒரு சில தமிழரை வைத்து எல்லாத் தமிழரையும் மறியலில் அடைக்கக் கூடாதென்று வாதாடும் நாம், அதேபோல் ஒரு சில தமிழரின் கோழைத்தனத்தை வைத்து முழு சமுதாயத்தையும் குறைத்துப் பேசக்கூடாது.

துரோகி என்றும் சைவக் கோவில் உள்ள பல்கலைக்கழகத்தில் எப்படி என்னை நடமாடவிட முடியும் என்றும் வேறும் கிறிஸ்தவரை தாழ்த்தி ஒரு பேப்பர் என்ற (லண்டன்) பத்திரிகையில் சிலர் ஆசிரியர் கட்டுரை எழுதினார்கள். இதற்கும் நான் என் பிள்ளைகளுக்கு நினைவூட்டுவது 25 பேர் கொண்ட பேரவையில் 15 பேர் எனக்கு வாக்களித்தார்கள். மீதிப் பத்துப் பேரில் பலர் மதம் சாரா காரணங்களுக்காக தம் வாக்கை அளியாமல் விட்டிருப்பர். ஆகவே மதவெறி கொண்டவர்களை ஒரு மிகச் சிறுபான்மையானவரென்றே நாம் கருத வேண்டும் என்பதே.

என்னை அந்த நேரம் பேணிய மாணவர், குருமார் பொது மக்களை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன்.

மேலும் நான் தமிழருக்கு, குறிப்பாக வடமாகாணத்தாருக்குச் செய்த காரியங்களில் சிலவற்றை (என் செயல்களை நானே எடுத்துச் சொல்வது அழகற்றதாக இருந்தாலும்) இந்தக் கேள்வியின் பட்சத்தில் கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளேன்.

1) 1977-1980 காலத்தில் சுமார் 600 உபாத்தியாயர் நியமனக் கடிதங்களை நைஜீரியாவில் இலவசமாகத் தமிழருக்கு எடுத்துக் கொடுத்தேன். இவற்றில் பல யாழ் பல்கலைக்கழகத்தின் புதுப் பட்டதாரிகளுக்கு.

2) இலங்கையில் கஷ்டத்துக்குள்ளாகியோர் பலரை என் பட்டதாரி மாணவராய் அமெரிக்காவுக்கு எடுத்து இன்று பெரிய உத்தியோகங்களில் வாழ வைத்துள்ளேன். சிலரை நான் என் பரீட்சைக் கூடத்திலேயே பட்டப்படிப்பு முடித்தும் உத்தியோகஸ்தராக்கி Green Card எடுத்துக் கொடுத்துள்ளேன். மேலும் என் எழுத்துக்கள் காரணத்தால் அமெரிக்க மத்திய அரசின் உள்குடியேற்ற நீதிமன்றம் என்னை இலங்கையைப் பற்றிய வல்லுனர் என்று ஏற்றதன் நிமித்தம் பலர் சார்பில் இலவசமாகச் சாட்சியமளித்து தஞ்சம் எடுக்க உதவியுள்ளேன்.

3) மானியங்கள் ஆணைக்குழுவில் சேர்ந்த சமயம் யாழ்பாணத்தில் ஒரு வருஷத்தில் ஒரு மாணவனுக்கு 44 000 ரூபாயும் ஏனைய பல்கலைக்கழகங்களில் சுமார் 80 000 ரூபாயும் (2004ம் ஆண்டுக் கணக்கு)

ஒதுக்கி வந்தது. நான் இது பெரும் பிழை என்று சுட்டிக்காட்டியதும், 2005ம் ஆண்டு யாழ் மாணவனுக்கு ஒதுக்கப்பட்டது ரூபாய் 90 000. நான் எழுதிய முன்மொழிவின்படி வவுனியா வளாகத்திற்கு 200 மில்லியன் கட்டிட நிதி ஒதுக்கப்பட்டு கணணித் தொழில்நுட்ப பீடம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருக்கும் கணணித்துறை பெருப்பிக்கப்பட்டது.

4) திருகோணமலை வளாகத்தை கந்தளாயிற்கு மாற்றும் திட்டம் நான் எதிர்த்ததும் கைவிடப்பட்டது.

இப்படியே நான் எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் நான் சொல்ல வருவது என்ன? ஏன் இதைச் செய்கிறேன்? சைவ மக்கள் மேல் பகையென்றால் ஏன் இவற்றை செய்வேன். நான் சைவ மக்களின் பகைவன் என்பவர்கள் சைவ மக்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள்?

**தேசம்நெற்:** உங்கள் பதவியை ஏற்கவிடாமல் நீங்கள் நாட்டைவிட்டு வெளியேற யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளனர். மிக அவலமாகவும் கோரமாகவும் முடிவுக்கு வந்த வன்னி யுத்தம் பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?



**பேராசிரியர் ஃகூல்:** நீங்கள் சொல்வது போல ஒரு நாளும் ஒரு இயக்கத்தை முற்றாக அழிக்க முடியாது. அவ்வியக்கத்தை எழுப்பிய காரணங்கள் நீங்கினால் மட்டுமே அவ்வியக்கம் அழியும். புலிகளின் ஆதரவாளர் பலர் மிஞ்சவில்லை என்பது முட்டாள்தனம். மேலும் புலிகளினால் அழிக்கப்பட்டவர்களின் சொந்தக்காரர் அப்படிக் கொன்று தமிழர் மத்தியில் புலிகள் ஏற்படுத்திய பகை என்பவையே பல தமிழரை இராணுவத்துடன் இயங்க வைத்தது. புலிகளின் அழிவுக்கான காரணங்களில் இதுவும் ஒன்றானது. இன்று இராணுவத்தின் கையில் இறந்தவர்களின் சொந்தங்கள் அதேபோல் சந்தர்ப்பம் கிடைத்தால் இராணுவத்திற்கெதிராக இயக்குவார்கள் என்பது எதிர்பார்க்க வேண்டியது.

என்னைப் பொறுத்தவரை இந்தக் கொலை - மீள்கொலை வட்டம் நிறுத்தப்பட வேண்டும். அதைச் செய்வதற்கான ஞானம் அரசாங்கத்திற்கு வரவேண்டும் என்பதே என் பிரார்த்தனை. யாருடைய மரணத்தையும் வைத்து நாம் மகிழ முடியாது. குறிப்பாக வன்முறையினால் கட்டாயப்படுத்தப்பட்டு ஆயுதம் தாங்கிய பிள்ளைகளை நாம் தீவிரவாதிகளென்று சொல்வது பெரிய தவறு. அரசாங்கம் இப்பிள்ளைகளைச் சமூகச் சீர்திருத்தும்

முயற்சிகள் வெற்றிபெற வேண்டும்.

**தேசம்நெற்:** இலங்கைத் தமிழ் மக்களின் வரலாற்றில் இடம்பெற்ற மிகக் கோரமான அவலத்திற்கு நாங்கள் சாட்சியாக இருந்திருக்கின்றோம். தமிழ் அரசியல் தலைமைகள் அல்லது தமிழ் அறிவியல் சமூகம் இந்த அவலமான அல்லது கோரமான முடிவை மாற்றி அமைப்பதற்கான வாய்ப்புகள் இருந்ததா?

**பேராசிரியர் ஃகூல்:** மேல் கூறியவாறு எல்லாம் அல்லது பூச்சியம் என்ற கொள்கையே எம்மைக் கை விட்டுள்ளது. 1987, 2000, 2002 - 4 ஆகிய ஆண்டுகளில் வந்த எல்லா வாய்ப்புகளையும் இழந்துவிட்டோம். எமது தலைமைகள் மந்திரி பதவியை எடுத்தாலே மக்களுக்கு உதவுவதற்கு பல வாய்ப்புகள் வரும். அதிகாரம் அரசாங்கக் கையில் உள்ளபோது தூர விலத்தி நீங்கள் எங்கள் நன்மையை கருதுகிறீர்கள் என்று நிரூபியுங்கள் என்று சொல்வது 1965ல் பலிக்கவில்லை. இன்றும் பலிக்காது. தமிழ் மந்திரிமாருக்கே தமிழரின் தேவைகள் சரியாய் தெரியும். தமிழராகிய நாம் இப்படி என்றாலும் எடுக்கக் கூடிய அதிகாரத்தை எடுக்க வேண்டும். கூட்டுறவே ஒரே வழியாகியுள்ளது.



**தேசம்நெற்:** கடந்த மூன்று தசாப்தகால தமிழீழ விடுதலைப் போராட்டம் அல்லது தமிழ் இளைஞர்களின் ஆயுத வன்முறை மிகவும் அவலமான முடிவுக்கு வந்துள்ளது. இதிலிருந்து தமிழ் சமூகம் குறிப்பாக தமிழ் அறிவியல் சமூகம் எதனைக் கற்றுகொள்ளலாம் என நீங்கள் நினைக்கின்றீர்கள்.

**பேராசிரியர் ஃகூல்:** ஞானம், அனுபவம் என்பன முதிந்தோர் மத்தியிலேயே கூடுதலாக உள்ளன. ஆனால் எமது முதிர்ந்தோர் வழிகாட்டாமல் வாலிபருக்கு வால் பிடித்து அவர்களை ஏமாற்றி தத்தம் காரியங்களைப் பார்த்தார்கள்.

உதாரணமாக மேடையேறி போர் உற்சாகத்தை ஊட்டி, அதேவேளையில் தம் பிள்ளைகளுக்கு வெளியேற அனுமதி பெற்றார்கள். எனக்குத் தெரிந்த வெள்ளாளப் பூசாரி ஒருவர் கலிபோர்னியாவிலிருந்து பகவத்கீதையின்படி இலங்கையிலுள்ள வாலிபர்களின் தர்மம் போர் புரிவதும், தனது தர்மம் அவர்களுக்கு ஆதரவளிப்பதும் என்று எனக்குப் புழுகினார்.

அறிவியல் சமூகத்தினர் பலர் நிலைமை எல்லாம் விளங்கியும் தம்

மௌனத்தைக் கைவிடவில்லை. அம்மௌனமே மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. பல அரசியல் தலைவர்களும் நீண்ட காலம் வீரத்தோடு தம் தனித்துவத்தைப் பேணியும், கடைசியில் தலைகுனிந்த நிர்ப்பந்தம் இனி ஒருபோதும் ஏற்படக் கூடாது.

**தேசம்நெற்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36 ஆண்டுகால வரலாறு தமிழீழ விடுதலைப் போராட்டத்துடனும் பின்னிப் பிணைந்ததாகவே உள்ளது. நடந்து முடிந்துள்ள மூன்று தசாப்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது?

**பேராசிரியர் ஃகூல்:** ஆராய்ச்சியாளராகிய நாம் உண்மைக்கு மட்டுமே அடிபணியக் கடமைப்பட்டுள்ளோம். இதுவே பிளேற்றோ கூறியபடி பல்கலைக்கழகங்கள் - நாட்டு ஆளுமைக்கு ஆதாரம் என்ற நோக்குடன் கல்வியில் ஈடுபட வேண்டும். - அரசியலுக்கோ எம் மார்க்கத்திற்கோ காரணம் வைத்து எம் ஆராய்ச்சிப் பணியைச் செய்யமுடியாது. இந்த உண்மையை மறந்ததால் தான் யாழ் பல்கலைக்கழகத்திற்கு இந்த கடைசி 30 வருஷங்களாகக் கவலைக்கிடமான பல தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.



சிங்களவரும் அப்படிச் செய்கின்றனர், ஏன் நாமும் அப்படிச் செய்யக்கூடாது என்று கேட்கிறவர்கள் சிலர். அதற்கு என் பதில் அவர்களுடையமாதிரிப்பல்கலைக்கழகமா எங்களுக்கு வேண்டும். அல்லது உதாரணமாக புதிய பொறியியல் பீடத்தை அரசியல் காரணங்களுக்கு கிளிநொச்சியில் போட வேண்டும் என்கிறார்கள் பலர். அப்படி நடப்பின் ரஜரட்டை பல்கலைக்கழகம் போல், இளம் பிள்ளைகள் உடைய விரிவுரையாளர் (அதாவது அநேகர்) யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து திங்கள் பின்நேரம் அல்லது செவ்வாய் வேலைக்கு வந்து வியாழன் அல்லது வெள்ளி காலை யாழ்ப்பாணம் செல்வார்கள். செனட் பேரவை கூடும் நாட்களில் ஒரு அதிகாரியும் வளாகத்தில் இருக்க மாட்டார். இது எமது சமூகத்தின் போலித்தனத்தை மீண்டும் காட்டுகிறது. யாழ்ப்பாணத்தில் வசதியாய் வாழும் நாம், எம் வாலிப விரிவுரையாளர்கள் தமிழ் சமூகத்திற்காகத் தங்கள் குடும்பங்களுடன் கிளிநொச்சியில் வாழ வேண்டும் என்கிறோம். ஆனால் சரித்திரத்தில் அப்படி நடப்பதில்லை. ஒருவர் தன் குடும்பத்திற்கு முதலிடம் கொடுப்பதே இயற்கை, வழக்கம்.

அறிவைப் பேணி அரசியல் நோக்கங்களுக்கு பல்கலைக்கழகத்தை அடியாக்க முன்வரும் சக்திகளை எதிர்க்கும் பலம் பல்கலைக்கழக நிர்வாகிகளுக்கு வேண்டும். இப்பலம் இல்லாமல் இருந்ததே கடைசி 30

வருடங்களின் குறை.

**தேசம்நெற்:** யாழப்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக உங்களை நியமிக்க பல்வேறு தரப்பினராலும் அழுத்தங்கள் வழங்கப்பட்டு வருவதை தேசம்நெற் அறிகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகப் பணியாற்றுவதற்கான வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்தால் தற்போது அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் உள்ள பதவிகளைத் துறந்து யாழ் செல்வீர்களா? அதற்கான தயாரிப்பில் நீங்கள் உள்ளீர்களா?

**பேராசிரியர் ஃகூல்:** அந்த அழுத்தங்கள் ஜனநாயகமுறையில் வந்தால் அவற்றை நாம் வரவேற்க வேண்டும். நான் செல்வேனா என்பது இப்போது ஒரு கேள்வியாக அமையாது. ஏனெனில் நான் அமெரிக்காவில் என் பதவியை ஏற்கனவே ராஜினாமாச் செய்து ஓகஸ்டில் நாடு திரும்புகிறேன்.

பேராசிரியர் துரைராஜா 1989ல் என்னை மின்பொறியியல் துறைக்குத் தலைவராக வரவேண்டும் என்று கேட்டபோது என் மனைவியின் Ph.D. பட்டப்படிப்பு முடிந்ததும் என் 7ம் வருஷ விடுமுறையை எடுத்துக்கொண்டு 1993ல் வருவேன் என்று வாக்களித்திருந்தேன். யுத்த காரணத்தால் அவர் பொறியியல் பீடத் திட்டங்கள் பலிக்கவில்லை. 1995ல் என் நீண்ட காலத் திட்டங்களுக்கமைய ஊர் சென்றேன். ஆனால் யாழ்ப்பாணத்தில் உத்தியோகம் கிடைக்கவில்லை. நான் பொறியியல் பீடத்தை அமைக்க உதவுவேன் என்று சொல்லியும் சிவில் பொறியியல் பதவியையே விளம்பரப்படுத்தினர். தகுந்த விண்ணப்பதாரி இல்லையென்று தெரிந்தும் மீண்டும் சிவிலையே விளம்பரப்படுத்தினர். மின்துறையைச் சேர்ந்த நான் விண்ணப்பிக்க முடியவில்லை.

சரி கணணித்துறைக்குச் செல்வோம் என்று வெளிக்கிட்டதும் நடந்தது தெரிந்ததே. சரி மனைவி பிள்ளைகளை ஆகிலும் அனுப்புவோமென்று அவர்கள் இரசாயனப் பதவியை விளம்பரப்படுத்திய போது என் மனைவி விண்ணப்பம் அனுப்பினார். பல மாதங்கள் பின் அதையே நாம் மறந்த கட்டத்தில் அடுத்தநாள் நேர்முகப்பரீட்சைக்கு யாழ்ப்பாணம் வருமாறு கொழும்பில் இருந்த அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அவர் உடனடியாகத் தொலைபேசியில் தனக்கு விரும்பினாலும் வரமுடியாதென்று முறைப்பட்ட போது, பரவாயில்லை அடுத்தமுறை விளம்பரம் வரும் போது விண்ணப்பியுங்கள் என்றார்கள். மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முறைப்பட்ட போது, அவர் விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் மீண்டும்

தெரிவுக்குழுவைக் கூட கட்டளையிட்டனர். அதற்கிணங்க தெரிவுக்குழு கூடி, வெற்றிடம் இல்லை என்று முடிவெடுத்தது! உடனடியாக வழக்கு வைத்தோம். ஆனால் நாட்டைவிட்டு வெளியேறியதால் வழக்கைத் தொடர முடியவில்லை.

நான் 1993இல் இருந்து யாழ் வளாகத்துட் செல்லத் திட்டமிட்டும் ஓரிருவரால் தடுக்கப்பட்டுள்ளேன். எம் கடிதங்களுக்கு பதிலே வருவதில்லை. வழக்கு தொடர்ந்தால் ஒரு வருடமென்றாலும் எடுக்கும். இங்கே (அமெரிக்காவில்) இருந்தால் அங்கு போவது ஒருபோதும் நடவாதென்ற முடிவில்தான் என் பதவியை ராஜினாமாச் செய்தேன். கிடைத்தால் உபவேந்தர் பதவியை ஏற்பேன்.

**தேசம்நெற்:** பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களின் நியமனங்கள் அரசியல் நியமனங்களாக அமைந்துவிடுவது பல்கலைக்கழகத்தின் சுயாதீனத்தை மட்டுப்படுத்துகின்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. இக்குற்றச்சாட்டுப் பற்றியும் உபவேந்தர்களின் நியமனம் பற்றியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை பற்றியும் சற்று கூறமுடியுமா?



**பேராசிரியர் ஃகூல்:** இக் குற்றச்சாட்டு தவறானது. பல்கலைக்கழகங்கள் யாவும் பல்கலைக்கழக 1987 சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. அந்தச் சட்டம் மிகக் கவனமாக எழுதப்பட்டது. ஆளும் பேரவையில் துணைவேந்தர், பீடத் தலைவர் போன்ற பலர் தம் உத்தியோகத்தின் நிமித்தம் அங்கத்தவர்கள். இவர்களை மட்டுமே தீர்மானங்கள் எடுக்கவிடுவது நல்லதல்ல என்ற காரணத்தால் கூடவே சுற்றிய சமூகத்தில் இருந்து உள் அங்கத்தவர் எண்ணிக்கை சக ஒரு வெளிப் பெரியோர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவர்.

இதற்கமைய யாழ் பேரவையில் 12 உள்ளங்கத்தாரும் 13 வெளியங்கத்தாரும் 2006ல் இருந்தனர். இவர்கள் அதிபர்மார், கணக்காளர், GAமார், குருமார், இளைப்பாறிய பேராசிரியர்மார் போன்ற சமூகப் பெரியோர்களும் உள்ளனர். இப்படியிருந்தும் உள் அங்கத்தவரே அதிகாரம் கூடியவர்கள். ஏனெனில் வெளி அங்கத்தவர் வழமையில் ஒரு பெரிய தப்பைக் கண்டாலேயொழிய தலையிடுவதில்லை. இந்தப் பேரவை மாதாந்தம் கூடுவதாலும் அடிக்கடி தெரிவுக்குழு, நாணயக்குழு போன்றவற்றில் சந்திப்பதாலும் அவர்களுக்குள் நட்புகள் ஏற்பட்டு பீடத் தலைவர் அல்லது தொடர விரும்பும் துணைவேந்தர் பேரவையின் வாக்கை துணைவேந்தர் பதவித் தேர்தலில் கேட்கும் போது ஒரு வெளியாள் வருவது

மிகவும் கஷ்டம்.

சட்டத்தை எழுதியவர்கள் இப்படி ஒரு நெருங்கிய பேரவையில் திறமை நட்புக்கு இலக்காகும் என்பதையும் மனதில் கொண்டு பேரவையின் பொறுப்பு 3 பேரைத் தேர்ந்து ஜனாதிபதியிடம் அனுப்புவது மட்டும் என்றும், இறுதித் தெரிவு மானியக் குழுவின் ஆலோசனையோடு ஜனாதிபதியுடையதென்றும் அமைந்தது. எனக்குத் தெரிந்த அளவு நானும் துரைராஜாவும் மட்டுமே வெளியாட்களாகப் பேரவையால் தெரிவு செய்யப்பட்டுள்ளோம்.

இந்த அமைப்பில் பிழை காணலாம். ஆனால் இது பொதுவாக வேலை செய்கிறது. பேரவையில் பெரும்பான்மை வெளி அங்கத்தவர்களிடம் இருந்தாலும், நட்புக்கள், இளைப்பாறிய பேராசிரியர்மாரால் உள்அங்கத்தவரிடமே அதிகாரம் உள்ளது. அவர்கள் தெரிவு செய்யாத ஒருவரை ஜனாதிபதி நியமிக்க முடியாது. தாம் ஏற்கத்தக்க 3 பேரை ஜனாதிபதியிடம் அனுப்புவது பேரவையின் கடமை. அனுப்பிய பின் தாம் விரும்பாதவர் நியமிக்கப்பட்டார் என்பது பொறுப்பற்ற நடத்தையே.

**தேசம்நெற்:** யாழ்-சைவ-வேளாள-ஆணாதிக்க கருத்தியலின் ஆதிக்கத்திலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடர்ந்தும் உள்ளது. இதுவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர்களாக இருந்தவர்கள் இந்தக் கருத்தியலுடன் உடன்படாவிட்டாலும் சைவ-வேளாள சமூகப் பின்னணியில் இருந்தே வந்துள்ளனர். யாழ்-சைவ-வேளாள-ஆணாதிக்க கருத்தியலை எதிர்த்து நிற்கவில்லை. அதனுடன் சமரசம் செய்துகொண்டனர். ஆனால் நீங்கள் கத்தோலிக்க மதத்தை இறுக்கமாகப் பின்பற்றுபவர். சைவ-வேளாள கருத்தியலை தீவிரமாகவும் கடுமையாகவும் விமர்சிப்பவர். 2006ல் உங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரங்களில் நீங்கள் இந்துக்களுக்கு எதிரானவர் (கத்தோலிக்கர்) என்றும் பிரச்சாரப்படுத்தப்பட்டது. இந்த முரண்நிலையை நீங்கள் எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?

**பேராசிரியர் ஃகூல்:** நான் கத்தோலிக்கன் தான், ஆனால் ஆங்லோ கத்தோலிக்கன். உரோமன் கத்தோலிக்கன் அல்ல, ஆனால் பாப்பரசரை அத்தியட்சர் மாரில் (அதாவது Bishop மாரில்) முதல்வர் எனக் கருதுபவர்.

நான் சைவ சமயத்தவன் அல்ல. ஆனால் சைவ சமயத்தவருக்கு எதிரானவன் அல்ல. இதை என்னுடன் பழகிய மாணவர். நைஜீரியாவில்

வேலை வாய்ப்பு எடுத்துக் கொடுத்த 600 வாத்தியார்மார் சொல்ல வேண்டும், நான் இல்லை. எனது எழுத்துகளின் போது என் அறிவியல் கடமையையே செய்கிறேன்.

மேற்கூறியவாறு பற்பல கட்டுக்கதைகள், பொய்ப் பிரச்சாரங்கள் பாடப் புஸ்தகங்களில் வெள்ளாளரால் எழுதப்பட்டு வருகின்றன. உதரணமாக குலத்தளவே ஆகுமாம் குணம் அல்லது உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார். ஏன் இவற்றைப் பற்றி யாரும் கேள்வி கேட்பதில்லை? கேட்கக் கூடாதா? கேட்பது வெள்ளாளரைப் பகைப்பதா? இக்கட்டுக்கதைகளை எம்மை வரைவிலக்கணம் கூறும் கதைகள் என்பர். இவற்றை தாக்கும் போது அவர்களில் சிலருக்கு அது ஏதோ கத்தியைப் போட்டு திருப்புவது போல் இருக்கிறது. ஆகவே என் கேள்வியை வேறு விதத்தில் கேட்கிறேன்:

இலங்கை அரசின் பாடப் புஸ்தகங்கள் கற்பிக்கின்றன சிங்களவர் குடியமர்ந்து இலங்கையைக் கட்டியெழுப்பவும், தமிழர் ஆக்கிரமிப்புக்காரராயும் வந்தார்களென்று. இதை வினவுவது சிங்களவரைப் பகைப்பதா? இதுக்கு விடையைக் கூறிய பின்,



தாமோதரம்பிள்ளையின் சரித்திரத்தை எடுப்போம். என் மூதாதையரான சி வை தாமோதரம் பிள்ளையின் திருச்சபைப் பதிவுகளின் படி அவர் பிறந்த ஒரு சில நாட்களில் சிறுபிள்ளை ஞானஸ்ஞானம் பெற்றார். தகப்பன் வைரவி தாய் பெரியாய். இவர்கள் ஏற்கனவே ஞானஸ்ஞானம் பெற்று அந்நேரத்தில் சைரஸ் கிங்ஸ்பெரி, மேரி கிங்ஸ்பெரி என்ற பெயர்களில் இயங்கினர். ஆனால் ஆறாம் வகுப்புத் தமிழ் பாடப் புஸ்தகமோ அவர் பெற்றார் வைரவநாதர், பெரும்தேவி என்ற (இன்றைய வெள்ளாளப்) பெயர் உடையவர் என்றும் சலுகைகளுக்காக கிறிஸ்தவனாய் தாமோதரம் பிள்ளை நடித்தார் என்றும் கற்பிக்கின்றது. என் மதத்தாரைப் பற்றிய பிழையான கற்பிப்பைப் பற்றி கேள்வி எழுப்புவது சைவ மக்களுக்கு எதிரியாய் இருப்பதா? இல்லை! ஆனால் நான் இப்படிப் பொய்க் கதைகளை உருவாக்கி நஞ்சை பிள்ளைகளுக்கு ஊட்டுபவர்களை எப்போதும் எதிர்ப்பேன். இதில் சிந்திக்கும் சைவ மக்கள் என்னுடன் தோளோடு தோள் நின்று ஐக்கியநாட்டு பிள்ளைகள் உரிமைக் கோட்பாட்டைப் பேணுவர். அக்கோட்பாட்டுக்கு விரோதமாய் சிறுபிள்ளைகளுக்கு சாதி சமய நச்சூட்டுவதை எதிர்ப்பார்கள் என்று உறுதியாய் நம்புகிறேன்.

**தேசம்நெற்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நிர்வாக ஒழுங்கீனம் முதல் அறிவியல் தகமை வரை பல்வேறு பிரச்சினைகளைக் கொண்டதாக

உள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சுயாதீனம் தனித்துவம் அடையாளம் அனைத்துமே கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகி உள்ளது. இந்நிலையில் நீங்கள் இதனை குறுகிய உங்கள் பதவிக்காலத்தில் சீர்செய்ய முடியும் என நினைக்கின்றீர்களா? எவ்வாறு இந்த சீராக்கத்தை செய்ய உள்ளீர்கள்?

**பேராசிரியர் ஃகூல்:** ஏற்கனவே இதை தொட்டுள்ளேன். இவற்றைச் செய்ய ஓரேயொரு வழி மட்டுமே. குட்டப்பட்டும் குனிந்தும் நிற்கும் ஆசிரியர்களுக்கு மரியாதை கொடுத்து தலைநிமிரப் பண்ணுவதே. ஒரு சின்ன உதாரணம் - என் மனைவியை யாழ் பல்கலைக் கழகம் அடுத்தமுறை விண்ணப்பியுங்கள் என்றது. மனிதரை மனிதராகப் பாவிக்க மறுப்பதற்கு அது ஒரு உதாரணம். அவர் முறைப்பட்டது குட்டக் குட்டக் குனிய மறுப்பதற்கு உதாரணம். 3 வருடத்தில் சீர் திருத்தம் செய்ய முடியாது. ஆனால் மனிதரை மரியாதையுடன் பாவிக்கத் தொடங்கினால் அந்தச் சீர்திருத்தம் தொடரும்.

**தேசம்நெற்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பற்றிய விவாதத்தில் அந்த இறுக்கமாக மூடப்பட்ட அறிவியல் சமூகத்தில் நடைபெறுகின்ற பாலியல் துஸ்பிரயோகம் மிக முக்கியமான விவாதப் பொருளாகவும் அமைகின்றது. பல்கலைக்கழக சமூகத்திற்கு இந்தப் பாலியல் துஸ்பிரயோகம் (அதிகாரப் படிநிலையில் மேலுள்ளவர்கள் தமக்குக் கீழுள்ளவர்களை தமது பாலியல் விருப்புக்கு பயன்படுத்துவது. கீழுள்ளவர் அதற்கு சம்மதித்தாலுமே அது துஸ்பிரயோகம்.) பொதுவான விடயமா? அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மட்டுமே எதிர்நோக்குகின்ற ஒரு பிரச்சினையா? இதனை எவ்வாறு கையாள முடியும்?

**பேராசிரியர் ஃகூல்:** நான் பாலியல் துஸ்பிரயோகம் யாழ் பல்கலைக் கழகத்தில் உண்டென்று கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் எனக்கு நேரடியாகத் தெரியாது. ஆனால் என் மனைவி திறந்த பல்கலைக்கழகத்தில் துறைத்தலைவரின் பாலியல் இம்சைக்கு (sexual harassment) இலக்கான போது அவர் முறையிட்டு, அவ்வாறு சம்பவம் நடக்கும் போது என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று ஒரு கொள்கைப் பத்திரம் இருக்க வேண்டுமென்று கேட்டபோது ஏற்பட்ட எதிர்ச்சி பெண்களின் தாழ்ந்த நிலையைக் காட்டுகின்றது.

பொய் சொல்லாதே என்று திட்டினார் பீடத்தலைவர். இது அமெரிக்காவில்லை என்றார் ஒரு பேராசிரியர். அவர் மார்பைப்

பிடிக்காவிட்டால் அது பாலியல் துஸ்பிரயோகம் இல்லை என்றார் இன்னுமொரு பேராசிரியர். அது சீலை உடுக்காமல் சட்டை போடுவதால் தான் என்று இன்னுமொருவர். அது தனக்கு ஏன் நடப்பதில்லை என்றும் கேட்டார் அவ்விலும் ஒரு 28 வயது கூடிய ஒரு பெண் பேராசிரியர்.

நான் உப வேந்தராய் நியமிக்கப்பட்டு ஏதாவது காண நேரிட்டால் என்னைப் பொறுத்தவரை நான் சட்டத்தின் கீழ் மிகக் கடுமையான நடவடிக்கை எடுப்பேன். என் மனைவி இதை ஜனாதிபதியிடம் எழுப்பியதை தொடர்ந்து ஜனாதிபதி உயர்கல்விக் காரியதரிசிக்கு எழுதி, புதிய மாணவர் இம்சை தடைச்சட்டத்தின் கீழ் பாலியல் துஸ்பிரயோகமும் தடைப்பட்டு உள்ளது.

**தேசம்நெற்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியதில் முன்னின்ற பேராசிரியர் க கைலாசபதி அதனை ஆசியாவிலேயே சிறந்த பல்கலைக்கழகமாக்கக் கனவுகண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு நீங்கள் உபவேந்தராக 2006ல் நியமிக்கப்பட்ட பின் பல்கலைக்கழக அபிவிருத்தி தொடர்பாக உங்கள் வேலைத்திட்டங்களை வெளியிட்டு இருந்தீர்கள். தற்போது மீண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவி உங்களை நெருங்கி வந்துகொண்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பற்றிய உங்களுடைய தொலைநோக்குப் பார்வை இலக்கு என்ன?

**பேராசிரியர் ஃகூல்:** இலக்குகள் பிரதானமாக 3.

1) பொறியியல் பீடத்தை அமைப்பது.

2) வவுனிய வளாகத்தை பல்கலைக்கழகமாக்குவது. (ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ஒரு சுதந்திரப் பல்கலைக்கழகமாக்கும் பொறுப்புடன் ஒரு வளாகம் கொடுக்கப்பட்டது. இரு தமிழ் பிரதேச வளாகங்கள் மட்டுமே இன்னும் வளாகங்களாக உள்ளன. ஏனைய வளாகங்கள் பல்கலைக்கழகங்களாகி இப்போ பல வருஷங்கள்.)

3) யாழ் பல்கலைக்கழகத்தை இலங்கையில் நியாய, நீதியான, நிர்வாக வழிகாட்டியாக அமைப்பது.

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பேராசிரியர் ரட்னஜீவன் ஃகூல் அவர்களின் இலக்குகளை அடையும் என்ற நம்பிக்கையுடனும், தன் சுயாதீனத்தையும் சுய அடையாளத்தையும் மீளுறுதி செய்துகொள்ளும் என்ற நம்பிக்கையுடன் இந்நேர்காணலை முடிவுக்கு கொண்டு வருகின்றேன்.)

# ‘Tamillain-Barre’ Syndrome’ மும் தமிழ் சமூகத்திற்கான புதிய அரசியல் கலாச்சாரத்தின் அவசியமும்



(செப்ரம்பர் 23, 2010)

‘Guillain-Barre’ Syndrome’ என்பது மனிதனின் நரம்புத் தொகுதியின் முடிவுப் புள்ளிகளைத் தாக்குகின்ற ஒருவகை நோயின் அறிகுறி. இது ஆரம்பத்தில் பலவீனத்தை ஏற்படுத்தி கால் கைகளில் ஆரம்பித்து உடலை முற்று முழுதாகச் செயலிழக்கச் செய்து மரணத்தையும் விளைவிக்கும். இதன் தாக்கம் வேகமானது. இது மருத்துவரீதியில் உடனடிச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியது. இந்நோயின் ஆபத்து என்னவெனில், உடலை நோய்க்கிருமிகளிடம் இருந்து பாதுகாக்கின்ற நீர்ப்பீடனத் தொகுதியே (Immune System) உடலின் நரம்புத் தொகுதியைத் (Nerve System) தாக்குகின்றது. இது ‘Guillain-Barre’ Syndrome’ பற்றிய மருத்துவக் கட்டுரை அல்ல.

**‘Tamillain-Barre’ Syndrome’:**

இக்கட்டுரை, தமிழ் சமூகத்தினை பாதுகாக்க வேண்டிய அதன் அறிவியல் கட்டமைப்புகளில் உள்ளவர்கள், அச்சமூகத்தின் சிந்தனைத் திறனைத் தாக்கி ஒட்டுமொத்த சமூகத்தையுமே சீரழிக்கின்ற ‘Tamillain-Barre’ Syndrome’ பற்றியது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் அரசியல் தலைமைகள் குறிப்பாக அரசியல் அதிகாரத்தைக் கொண்டுள்ள தலைமைகள் இச்சமூக நோயை எவ்வாறு கையாளப் போகின்றன என்பது முக்கியமானது. இக்கட்டுரையானது குறிப்பாக யாழ் மாவட்டத்தை மையப்படுத்தியே எழுதப்பட்டபோதும் ஏனைய மாவட்டங்களிலும் தமிழ்ச் சமூகத்தின் நிலையில் பாரிய மாற்றங்கள் இல்லையென்றே கருதலாம்.

தமிழ் சமூக இயக்கத்தை அதன் உள்ளிருந்தே அழிக்கின்ற ‘Tamillain-Barre’ Syndrome’ உடனடியாக அடையாளம் காணப்பட்டு அதற்குரிய சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். அல்லது இந்நோய் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் செயலிழக்கச் (Paralysed) செய்துவிடும். கடந்த பல ஆண்டுகளாக ஆட்கடத்தல் கொலை என்பன நாளாந்த வாழ்வின் ஒரு அங்கமாக, ஊடகங்களில் வெறும் சிறு செய்தியாக இருந்த நிலை போய், இப்போது அவ்வாறான சம்பவங்கள் நடக்கின்றதா என்பதை ஊடகங்கள் கண்ணில் எண்ணெய் விட்டுத் தேடிக்கொண்டிருக்கின்றன. இவ்வாறான வெளிப்படையான குற்றச்செயல்களும் அரசியல் சலசலப்புகளும் ஏற்படுத்துகின்ற பரபரப்பிலும் ஆர்வத்திலும் சமூகத்தை மெல்ல மெல்ல சிதைக்கின்ற வேறு அம்சங்கள் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை.

இன்று வடக்கு கிழக்கில் தமிழ் சமூகத்தை நிர்வகிக்கின்ற கட்டமைப்புகள் மிகமோசமான நிலையை அடைந்துள்ளன. கிராம சேவகர்கள் பற்றி மாதத்திற்கு 1500 (நாளொன்றுக்கு 50) முறைப்பாடுகள் வருவதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். இதில் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாமை, லஞ்சம், ஊழல், மதுபோதைக்கு அடிமையாதல் போன்ற முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்முறைப்பாடுகள் கிராம சேவகர்களிடம் மட்டுமல்ல ஏனைய துறைகளிலும் பரவலாக உள்ளது. ஆனால் இவற்றை எதிர்கொள்ள அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாருக்கு உள்ள துணிச்சலும் நேர்மையும் ஏனைய துறைசார்ந்த பொறுப்பில் உள்ளவர்களிடம் பெரும்பாலும் இல்லை.

இமெல்டா சுகுமாரைப் போன்றே வவுனியா அரசாங்க அதிபர் திருமதி சார்ள்ஸ், கிளிநொச்சி அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன், யாழ் மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா, போன்றவர்கள் குறிப்பாக பெண்கள் தங்கள் கடமைகளைப் பொறுப்புடன் மேற்கொள்வதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இமெல்டா சுகுமார், ரூபாவதி கேதீஸ்வரன் ஆகியோர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலும் தங்கள் கடமையை மேற்கொண்டவர்கள்.

இலங்கையில் காலம் காலமாக ஆட்சிக்கு வந்த அரசு தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிரானது, என்ற உணர்வு நிலையில் உள்ள தமிழ்ச் சமூகம், அதன் நிர்வாகத்தைத் தம் கைகளில் கொண்டுள்ளவர்கள், தமக்குக் கிடைத்துள்ள மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டு தமிழ் மக்களின் நலன்சார்ந்து செயற்படவேண்டும் என்ற எண்ணப்பாடு மிகக் குறைவாகவே உள்ளது. இவர்கள் தமிழ் மக்களின் நலனுக்கு எதிராகத் தங்கள் சொந்த நலன்சார்ந்து செயற்படுகின்ற போக்கே இங்கு குறிப்பிடப்படும் 'Tamillain-Barre' Syndrome' க்கு தற்போது காரணமாக உள்ளது.

இது விடயத்தில் 1994 முதல் யாழ் மாவட்டத்தின் அதிகாரத் தலைமையைக் கொண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எதிர்கால அரசியல் முன்னெடுப்புகள் மிக முக்கியமானது. வடக்கின் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தின் பொறுப்பான பதவிகளை நிரப்புகின்ற விடயத்தில் அமைச்சர் தேவானந்தா அதிகாரத்தைக் கொண்டுள்ளார். அதனால் எவ்வாறான சமூக உருவாக்கத்தில் அவர் தன்னை ஈடுபடுத்த முனைகிறார் என்பதனை போரிற்குப் பின்னான அடுத்த சில ஆண்டுகள் நிரூபிக்கும்.

### 'Tamillain-Barre' Syndrome' இன் சில குணம்குறிகள்:

#### முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் கே கணேஸ்:

யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த கெ கணேஸ், இவர் முன்னர் வவுனியா அரசாங்க அதிபராகவும் இருந்தவர். இவர் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி ஏ சந்திரசிறியின் பாதங்களில் வீழ்ந்து ஆசீர்வாதம் வாங்கினார் என்பது அவர் எப்படிப்பட்ட ஆளுமை உடையவர் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. ஒரு மாவட்டத்தினுடைய அரசாங்க அதிபர் என்பது இலங்கை ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதி. அவ்வாறான ஒருவர் இராணுவ அதிகாரியின் பாதங்களில் வீழ்வது அவருடைய பதவியையும்

அவமானப்படுத்துகின்ற ஒரு செயலே. அவர் அவ்வாறு இராணுவ அதிகாரியின் பாதங்களில் வீழ்ந்தமைக்குக் காரணம் தன்னுடைய பதவிக் காலத்தை ஆறுமாத காலத்திற்கு நீடிப்பதற்கே எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் ஓய்வுபெறுவதற்கான வயதெல்லை 65 வயதாக இருந்த போதும் இவர் எப்படியோ தனது பதவிக்காலத்தை 69 வயதுவரை தக்க வைத்து அதன்பின்பும் இன்னும் சிறிது காலம்வரை அதனை நீடித்துக் கொள்ள முற்பட்டு உள்ளார்.

அவர் தனதுபதவிக்காலத்தைநீடித்துக்கொண்டதுதமிழ்மக்களுக்கோ யாழ் மக்களுக்கோ தனது சேவையை வழங்குவதற்காகவா என்பது சந்தேகத்திற்குரியது. இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தபோதும் அரசாங்க அதிபராகப் பணியாற்றியவர். பகைமுரண் கொண்ட அரசியல் அந்தங்களிடையே பணியாற்றுவது என்பது இலகுவான விடயமல்ல. இந்நிலையில் மக்களின் நலன்கள் என்பதிலும் பார்க்க இந்த அரசியல் அந்தங்களில் உள்ளவர்களின் நலன்களையே இவர்கள் திருப்திப்படுத்த வேண்டி இருந்தது. இன்று அவ்வாறான நெருக்குவாரம் இல்லாத போதும் அவர்கள் மக்கள் நலன் சார்ந்து இயங்குகின்ற உணர்வு நிலையை மீளப் பெறமுடியாத (irreversible) வகையில் இழந்துபோய்விட்டனர்.



வன்னி யுத்தத்தின் முடிவில் நூற்றுக் கணக்கான சிறார்கள் அனாதரவாக்கப்பட்டனர். போரினால் பாதிக்கப்பட்ட இச்சிறார்களைப் பொறுப்பேற்று பராமரிக்க லண்டனில் உள்ள ஒரு ஆலயம் முன் வந்தது. அவர்களுக்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பொது ஸ்தாபனம் ஒன்றும் உள்ளது. அப்பிள்ளைகளை ஒரு ஸ்தாபனம் பெறுப்பேற்கும் பட்சத்தில் அரசாங்க அதிபர் அதற்கான அனுமதியை வழங்க வேண்டும். அப்போது அரசாங்க அதிபராக இருந்த கே கணேஸிடம் 2010 ஏப்ரல் வரை இது தொடர்பாக பல தடவை முயற்சித்தும், அவர் அதனைத் தட்டிக்கழித்து வந்துள்ளார். முதற்தடவை இவ்விடயமாக பேசுவதற்கு லண்டன் ஆலயத்தின் - இலங்கையில் உள்ள ஸ்தாபனத்தின் முக்கியஸ்தர் சென்றிருந்தார். அவர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர்கள் பல முயற்சிகள் எடுத்தும் அது பலனளிக்கவில்லை. அதன் பின் லண்டனில் இருந்து நேரடியாகத் தொடர்பு கொண்ட போது, ஜூமுதல் கோணல் முற்றும் கோணல் மாதிரி நீங்கள் மட்டகளப்பாள்ஜி ஒருத்தரையா அனுப்பி உள்ளீர்கள் என்று அரசாங்க அதிபர் கணேஸின் அலுவலகத்தில் இருந்து பதிலளிக்கப்பட்டது. இது விடயமாக தேசம்நெற் உடன் தொடர்புகொண்ட அவ்வாலயம் அவர் சம்திங் எதிர்பார்க்கிறார் என்று தாங்கள் சந்தேகப்படுவதாகவும் தெரிவித்தனர்.

கெ கணேஸ் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜென்ரல் ஜி ஏ சந்திரசிறியின் பாதங்களில் வீழ்ந்து ஆசீர்வாதம் வாங்கிய போதும் யூலை 01 2010ல் அவருக்கு வழங்கப்பட்ட பதவி நீடிப்பு பத்து நாட்களுக்குள் யூலை 10 2010ல் முடிவுக்கு வந்தது.

இவ்வாறான ஒருவரே தமிழ்க் கல்விச் சமூகத்தின் மையமாக உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கவுன்சிலில் இடம்பெற்றுள்ளார். யாழ் பல்கலைக்கழகத்தின் உப வேந்தரது நியமனம் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகவிடயங்களில் ஆளுமையுடைய பல்கலைக்கழகத்தின் கவுன்சிலில் இடம்பெறுபவர்களின் ஆளுமை வரவேற்கத்தக்கதாக இல்லை.

யாழ் கிராம சேவகர்களுக்கு எதிராக மாதம் 1500 குற்றச்சாட்டுகள் வருவதை மூன்று மாதங்களே அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் கவனத்திற்கு எடுத்துள்ளார். ஆனால் இதுவரை பல ஆண்டுக்காலம் அப்பொறுப்பில் இருந்த முன்னாள் அரசாங்க அதிபர் கே கணேஸ் அவ்வாறானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்துள்ளார். அல்லது நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் இருந்துள்ளார். இவ்வாறானவர்களை ஒக்ரோபர் 06, 2010 யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கௌரவப் பட்டம் கொடுத்து கௌரவிக்க தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் என் சண்முகலிங்கம் முற்பட்டு இருந்தார். (ஆனால் தேசம்நெற் இல் இக்கட்டுரை வெளியானதும் அந்த கௌரவிப்புகள் கைவிடப்பட்டது.) இதன்மூலம் யாழ் பல்கலைக்கழகம் எவ்வாறானவர்களை முன்னுதாரணமாக சமூகத்தின் வரும்கால சந்ததியினருக்கு காட்ட முற்படுகிறது என்பதை இது வெளிப்படுத்துகின்றது.



**சைவத் தமிழ் சொற்பொழிவாளர் ஆறு திருமுருகன்:**

ஆறு திருமுருகன் இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் தன் பேச்சாற்றலால் பிரபல்யம் அடைந்தவர். தன் பேச்சாற்றலுக்காக "செஞ்சொற்செல்வர்" என்ற பட்டத்தைக் கொண்டவர். இவர் யாழ்ப்பாணத்தில் பல பொது ஸ்தாபனங்களிலும் பல்வேறு பொறுப்புகளில் உள்ளவர். ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகவும் உள்ளார். சிவபூமி அறக்கட்டளையிலும் தலைவராக உள்ளார். பெரும்பாலும் விழாக்களில் கலந்துகொண்டு கௌரவத்தை ஏற்றுக்கொள்வதுடன் இவர் தனது சமூகக் கடமையை முடித்துக் கொள்கின்றார். இவர் அனாதரவானவர்களை பராமரிக்கின்ற முயற்சியில் கூடிய கரிசனையைக்

காட்டி வருவதை அவதானிக்க முடிகிறது.

ஆயினும் இவர் மீதான முழுமையான மதிப்பீடு சர்ச்சைக்குரியதாகவே உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக யாழ் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் அதிபராக இருக்கும் ஆறு திருமுருகன் மீது தற்போது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

1894ல் ஆரம்பிக்கப்பட்ட யாழ் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஒறேற்றர் சுப்பிரமணியம் அதிபராக இருந்த 1961 ஆம் ஆண்டில் 50 மாணவர்களை பல்கலைகழகம் அனுப்பியது. அன்றைய காலகட்டத்தில் ஒரே பாடசாலையில் அதிக மாணவர்கள் பல்கலைகழகம் சென்றமையால் யாழ் ஸ்கந்தாவரோதயாக் கல்லூரி அகில இலங்கை ரீதியில் 3 ஆவது இடமும் யாழ்ப்பாணத்தில் 1 ஆவது இடமும் பெற்று தரத்தின் உச்சியில் இருந்தது. இது ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பொற்காலமாக இருந்தது. கல்வித் தரத்தில் குறைந்த மாணவர்களையும் வயது கூடிய மாணவர்களையும் ஏனைய பாடசாலைகள் ஏற்க மறுப்பவர்களையும் கூட இக்கல்லூரி ஏற்றுக் கொண்டது. இது பற்றி அப்போதைய அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் கருத்துத் தெரிவித்து இருந்த போது ஜூஇத்தகைய மாணவர்களால் இக் கல்லூரியை மட்டுமே சிலவேளை சீர்குலைக்க முடியும். அனால் இவர்களை வெளியே விட்டால் சமுதாயமல்லவா அழிந்துவிடும்ஜி என்று பதிலளித்து இருந்தார். ஏனைய பாடசாலைகளில் நிராகரிக்கப்பட்ட மாணவர்களையும் உள்வாங்கியே அவ்வதிபர் தனது சாதனையை நிகழ்த்தி உள்ளார்.



ஆனால் ஆறு திருமுருகன் அதிபராக வந்ததன் பின்னர் யாழ் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் சராசரி வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாக பரவலான குற்றச்சாட்டுகள் உள்ளன. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில மாணவர்கள் காலத்திற்குக் காலம் திறமையான சித்திகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பது உண்மையானாலும் சராசரியாக பாடசாலையின் கல்வித்தரம் வீழ்ச்சி அடைந்துள்ளதாகக் குற்றம்சாட்டப்படுகின்றது.

பல்வேறு பொது அமைப்புகளிலும் தன்னை முன்னிலைப்படுத்துகின்ற ஆறு திருமுருகன் பாடசாலையில் கவனம் கொள்ளவில்லையென பாடசாலை மாணவர்களின் பெற்றோர் கருதுகின்றனர். ஆறு திருமுருகன் மீது வழக்குத் தொடுத்துள்ளவரும் இப்பாடசாலை சார்ந்த பெற்றோரில் ஒருவரே.

இதில் முக்கிய விடயம் என்னவெனில் முன்னணிப் பாடசாலைகளில்

ஒன்றான ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு அதிபராக வருபவர் அதிபர்களுக்கான தரப் பரீட்சையில் சித்தியடைந்து இருக்க வேண்டும். ஆனால் ஆறு திருமுருகன் தனது சேவைக்கால அடிப்படையில் தனக்கு இருந்த சமூக அந்தஸ்தைக் கொண்டு அரசியல் செல்வாக்குடன் அப்பதவியைப் பெற்றுள்ளார். அப்பதவியை ஏற்ற பின்னராவது இவர் அதிபர் பதவிக்கான பரீட்சையை எடுக்க முயலவில்லை. அதனால் அதிபர்கள் மட்டத்தில் இவர் அதிபராகக் கணிக்கப்படுவதில்லை. இதனால் பதவியேற்றது முதல் பாடசாலை அதிபர்களுக்காக வைக்கப்படுகின்ற கூட்டங்கள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களில் இவர் கலந்துகொள்வதில்லை. அதனால் பாடசாலை வளர்ச்சி, நிர்வாகம் போன்ற விடயங்களில் இவர் பின்தங்கியுள்ளார். ஒரு பாடசாலையைத் தரமான பாடசாலையாகக் கொண்டுவருவதற்கு அதிபருடைய பிரசித்தி மட்டும் போதாது என்பதனை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதில்லை.

இவ்விடயம் சம்பந்தமாக தேசம்நெற் பல்வேறு பிரிவினர்களிடமும் விசாரித்ததில் இவ்வாறான அதிபர் நியமனங்கள் யாழ் மாவட்டத்தில் பொதுவாக இருப்பதனையும் யாழ்ப்பாணத்தின் முக்கிய பாடசாலைகளிலேயே இவ்வாறான அதிபர்கள் நியமிக்கப்பட்டு இருந்ததையும் அறிய முடிந்தது. அதேசமயம் அதிபருக்கான பரீட்சை எடுக்காமல் கூடிய சேவைக்காலத்தைக் கொண்டு அதிபரான சிலர் தங்கள் பாடசாலையை உயர்வான நிலைக்கு கொண்டுவந்தமையும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். அதனால் பரீட்சைகளிலும் பார்க்க அவர்கள் தங்கள் பதவியைக் கொண்டு எதனைச் சாதித்தனர் என்பது முக்கியமானது. ஆனால் அறு திருமுருகனின் நிலை இரண்டும் கெட்டானாகி உள்ளது.

மேலும் ஆறு திருமுருகனின் சர்ச்சை அதிபர் பதவியுடன் நிற்கவில்லை. ஆறு திருமுருகன் கதாப்பிரசங்கம் செய்வதற்கு யாழ் பல்கலைக்கழகம் ஒன்றும் சைவக் கோயிலும் அல்ல, யாழ் பல்கலைக்கழக கவுன்சில் கோவில் நிர்வாக சபையும் அல்ல. ஆனாலும் தனது பாடசாலை அதிபர் பதவிக்குரிய தகைமையையே பெறாத ஆறு திருமுருகன் யாழ் பல்கலைக்கழகத்தின் கவுன்சிலின் உறுப்பினராகவும் ஆக்கப்பட்டுள்ளார். ஆலயத்தின் அறங்காவல் தலைவர் என்ற அடிப்படையில் இந்நியமனம் மேற்கொள்ளப்பட்டு இருக்கலாம் என்று இதனை எடுத்துக் கொள்ளலாம்.

உள்ளடக்கம் பற்றி மாறுப்பட்ட கருத்து இருக்கலாம், ஆனால் ஆறு திருமுருகன் செஞ்சொற்செல்வர், சிறந்த சொற்பொழிவாளர். சிறந்த தமிழ் ஆசிரியராகவோ சைவசமய பாடத்திற்கான ஆசிரியராகவோகூட

இருக்கலாம். அவை மட்டும் அவருடைய ஏனைய பொறுப்புகளுக்கான இலவச அனுமதியாக முடியாது. சமூகப் பொறுப்பில் உள்ளவர்கள் அகலக் கால் வைக்காமல் தங்கள் பலத்தையும் பலவீனத்தையும் மதிப்பீடு செய்து ஏற்கும் பொறுப்புக்களை பொறுப்புடன் திறம்படச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய முடியாதபட்சத்தில் அதிலிருந்து வெளியேற வேண்டும்.

உண்மையே உயர் அறம் என்ற யாழ் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் மகுட வாசகத்திற்கு ஒரு அதிபர் என்றளவில் ஆறு திருமுருகன் மதிப்பளிக்க வேண்டும்.

**யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நாகலிங்கம் சண்முகலிங்கன்:**

Prof. N. Shanmugalingam B.Ed.(Colombo), M.A.(Jaffna), Ph.D.(Jaffna) - யாழ் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக 2006 பிற்பகுதியில் நியமனம் பெற்ற இவர் இப்பல்கலைக்கழகத்தில் இதுவரை துணைவேந்தர்களாக இருந்தவர்களில் மிகக் குறைந்த அறிவியல் தரத்தைக் கொண்டிருப்பவராக உள்ளார். மேலும் நிர்வாகத் திறனும் செயற்திறனும் குறைந்த உபவேந்தராகவும் இவர் கணிக்கப்படுகின்றார். இவருடைய நடவடிக்கைகளும் சர்ச்சைக்குரியதாகவே இருந்து வருகின்றது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எம். ஏ பட்டம் பெற்ற இவர், தனது கலாநிதிப் பட்டப் படிப்பிற்காக பிலிப்பைன்ஸிற்குச் சென்றிருந்தார். அங்கு மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாத நிலையில் மீண்டும் யாழ்ப்பாணம் வந்தார். இவர் பின்னர் யாழ்ப்பாணத்தில் தன் கலாநிதிப் பட்டப்படிப்பை முடித்து பேராசிரியர் ஆனார்.

தனிமனித பலவீனங்களை ஒருவருக்கு எதிராகப் பயன்படுத்துவது ஆரோக்கியமல்ல. ஆனால் அதனையே சமூகத்தின் உயர்பொறுப்புகளில் உள்ளவர்கள் தங்களுக்கான மறைவிடமாக பயன்படுத்த முனையும் போது, அப்பலவீனங்களை அம்பலத்திற்கு கொண்டு வருவது தவிர்க்க முடியாதது. ஏனைய பல்கலைக்கழகங்களிலும் பாலியல் சுரண்டல்கள் காணப்பட்ட போதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இதில் முன்னணியில் நிற்கின்றது.

தற்போது சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருக்கும் ஶ்ரீ பிரசாந்தன் 2003ல் ஞானம் சஞ்சிகையில்

எழுதிய கவிதையில் விரிவுரையாளரின் பலவீனத்தை விரிவாகவே விபரிக்கிறார் அவர்.

ஆற்றல் விளைச்சல் 'அறுப்பதற்'கென்றே
அரியணை
வீற்றிருக்கின்ற விரிவுரையாளரே!
நேற்றொரு பரீட்சை நடந்தது.
நெளிந்த 'பின்னலி'
கூற்றை ரெண்டு விழிகளில் கொண்டவள்
காற்று வாங்கும் சாட்டையொடு
உம்மிடம் கண்வீச்சு
நீட்டினாள்.
சொல்லுக, நீர் விழவில்லையா?
நேற்றொரு பரீட்சை நடந்தது.
எமக்கும்,
உம் மாற்றம் உறுகிற
மனச்சாட்சிக்குமே
நேற்றொரு பரீட்சை நடந்தது.
நீர் ஒடிந்த மனதினுள்
ஓங்கி வளர்கிற ஓர்மத்தில்
பிடித்த கூரிய பேனை இருந்தது.
நானும்,
பரீட்சை எழுதினேன், விரிவுரையாளரே!

இக்கவிதைக்கு ஸ்ரீ பிரசாந்தன் கொடுத்த விலை பெரியது. யாழ் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பித்த போது, அங்கு தேர்ந்தெடுக்கப்பட்டவரிலும் அதிக திறமை இருந்தும் ஸ்ரீ பிரசாந்தின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. ஆனால் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் "இவ்வளவு திறமையுள்ள உங்களை ஏன் தமிழ் பல்கலைக்கழகங்கள் நிராகரித்தனர்?" என்ற ஆச்சரியக் கேள்வியுடன் மகிழ்ச்சியுடன் அவரை ஏற்றுக்கொண்டது.

இவ்வாறான யாழ் பல்கலைக்கழகச் சூழலில் கற்பித்த என் சண்முகலிங்கம் இந்த 'லீலைகளில்' முன்நின்றார்.

அப்போது 2005 - அக்காலப்பகுதியில் ஐரோப்பாவில் வாழும் யாழ் பல்கலைக்கழகத்துடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்த

ஒருவரும் யாழ்ப்பாணம் சென்றிருந்தார். (தேசம்நெற் க்கு தகவல் அளித்த அவர் தனது பெயரை வெளியிட விரும்பவில்லை.) அவர் பல்கலைக்கழகம் சென்று பலரையும் சந்தித்து வந்தார். அவர் அந்நாட்களில், பொங்கு தமிழ் கணேசலிங்கத்தின் பாலியல் வல்லுறவு பற்றிய செய்தியை விசாரித்தறிய முற்பட்ட போது “அது பழைய செய்தி. இப்ப நடந்த கூத்தைக் கேளுங்கள்” என்று சொல்லிப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் கூறப்பட்டவையே இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிய மாடிக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஓகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் ஒருநாள் என் சண்முகலிங்கம் மாணவி ஒருத்தியை அழைத்துக் கொண்டு கட்டிமுடிக்கப்படாத கட்டிடத்தின் உச்சிக்குச் சென்றிருக்கிறார். அதற்கு அருகில் உள்ள ஒரு கட்டிடத்தின் கூரைப்பகுதியில் தனது கட்டுமான வேலையின் இறுதியில் தவறுதலாக விட்டுவந்த ஏதோ ஒன்றை எடுக்கச் சென்ற கட்டிடத் தொளிலாளி, இவர்களது அசாதாரண நடமாட்டத்தைப் பார்த்தவுடன் சந்தேகம் கொண்டு, தானும் மேலேறி என்ன நடைபெறுகிறது என்று அருகில் இருந்த கட்டிடத்தில் இருந்து பார்த்திருக்கிறார். அவர்கள் உறவில் ஈடுபட்டதையும் கண்டு கொண்டார். ஓடிச்சென்று பல்கலைக்கழகத்தின் அப்போதைய துணைவேந்தர் எஸ் மோகனதாஸிடம் முறையிட்டார். அவர் அதனை வேறு காரணங்களுக்காக மூடிமறைத்தார். ஆனாலும் அச்சம்பவம் பின்னாளில் பரகசியமானது.

இன்னுமொரு சம்பவத்தில் வெளிநாட்டுப் பெண் ஆய்வாளருடன் தகாதமுறையில் நடந்துகொள்ள முற்பட்ட போது அப்பெண் என் சண்முகலிங்கத்தை அறைந்துள்ளார். பிலிப்பைன்ஸ் நாட்டில் இருந்து சமூக ஆய்வு ஒன்றுக்காக இப்பெண் யாழ் பல்கலைக்கழகம் அனுப்பப்பட்டார். இப்பெண் ஆய்வாளரை என் சண்முகலிங்கம் சமூகவியல்துறை சார்ந்தவர் என்பதால் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவரிடமே அனுப்பி வைத்தார். அப்பெண்ணை என் சண்முகலிங்கம் கட்டிஅணைக்க முற்பட்டபோது அப்பெண் சண்முகலிங்கத்தை அறைந்தே விட்டார். தன்னை அவரிடம் அனுப்பிய பாலசுந்தரம்பிள்ளையிடம் அப்பெண் முறையிட்டுள்ளார். எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் அப்பெண் ஆய்வாளர் தனக்கு மேலும் ஆபத்து நிகழலாம் என்ற அச்சத்தில் ஆய்வை மேற்கொள்ளாமலேயே இடைநடுவில் நிறுத்திவிட்டு யாழ்ப்பாணத்தை விட்டே வெளியேறினார்.

இவ்விரு சம்பவங்களுமே என் சண்முகலிங்கம் யாழ் பல்கலைக்

கழகத்தின் உபவேந்தராக வருவதற்கு முன்னர் இடம்பெற்றவை. இவை தெரிந்திருந்தும் என் சண்முகலிங்கம் யாழ்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக்கப்பட்டார். இதனால் அவர் உபவேந்தர் ஆனதன் பின்னர் பெண்கள் மீதான சுரண்டலுக்கும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கும் இலவச அனுமதி வழங்கப்பட்ட நிலை உருவானது.

இந்த நிலையிலேயே சில மாதங்களுக்கு முன் பல்கலைக்கழக மாணவர்கள் சில விரிவுரையாளர்களின் பெயர்களைப் பட்டியலிட்டு மொட்டைப் பிரசுரம் ஒன்றை பல்கலைக்கழக வட்டாரத்தில் வெளியிட்டனர். அதில் குற்றம்சாட்டப்பட்ட விரிவுரையாளர்(கள்) பொ. பாலசுந்தரம்பிள்ளை, எஸ்.மோகனதாஸ், என்.சண்முகலிங்கம் ஆகியோரால் உருவாக்கப்பட்டவர்கள். பல்கலைக்கழகத்தின் பாலியல் துஸ்பிரயோகம் எவ்வளவுக்கு ஸ்தாபனமயப்படுத்தப்பட்டு உள்ளது என்பதனையே இது வெளிப்படுத்துகிறது.

அதற்கும் முன்னதாக கம்பவாரிதி ஜெயராஜ் தனது பொன் விழா நூலிலும் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மீதான குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:



“.....மாதுக் கோளாறுகளும் இருக்கவே செய்தன.
தம் கல்வி அதிகாரத்தைப் பயன்படுத்தி,
பட்டங்களுக்குப் பரிசாக,
மாணவிகளின் பண்பினை விலைபேசிய,
அவ் அழுக்குகளை,
இப்போதைக்கு இங்கு எழுதவிரும்பவில்லை.

ஒழுக்கநிலை இதுவென்றால்,
அறிவுநிலையைப் பொறுத்தவரை
தம் வெற்றிக்காய் ஒரு இனத்தின் புலமையைப் பலியிட்ட,
அவர்தம் வஞ்சனைச் செயல்கள்,
இன்றும் எம் கல்வியுலகைப் பாதித்து நிற்கின்றன.”

(ஜெயராஜ்ஜியம் - பல்கலைக்கழகத் தமிழ்துறையினருக்கு பகிரங்கக் கடிதம் - 1 : கம்பவாருதி ஜெயராஜ்)

இத்தோடு இவை நிற்கவில்லை. அண்மையில் தமிழ் தேசியத்தை ஆதரிக்கும் ஒரு இணையம் விரிவுரையாளர்களினால் விபச்சாரவிடுதியாக

மாறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தட்டிக் கேட்பது யார்? என்று தலைப்பிட்டு ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளது. நவம்பர் 18 2009ல் பதிவு செய்யப்பட்ட இக்கட்டுரை துருவியன் என்பவரால் எழுதப்பட்டு உள்ளது. அதில் இருந்து ஒரு பகுதி,

"மிகச் சில விரிவுரையாளர்கள் மட்டும் தம்மிடம் பாடரீதியாகச் சந்தேகங்களைத் தீர்க்க வரும் மாணவிகளைத் தனியேதான் வரவேண்டும் என்ற எழுதப்படாத சட்டத்தைக் கடைப்பிடிக்கின்றனர். அவ்வாறு தனியே செல்லாமல் குழுவாகச் சென்றால் அவர்களைக் கண்டபடி திட்டுவதோடு பரீட்சைப் பெறுபேற்றின்போது அவர்கள் கவலைப்பட நேரிடுமென்று மறைமுக மிரட்டலையும் விடுத்துள்ளனர்.

இதனால் வேறுவழியின்றிக் குறித்த விரிவுரையாளரை இன்னமும் தனியே சென்றுதான் மாணவிகள் சந்தித்து வருகின்றனர். இதுபற்றி உரியவர்களிடம் முறையிட்டால் இன்னமும் தாங்கள் பழி வாங்கப்பட்டு விடுவோமோ? தம்முடைய பல்கலைக்கழக வாழ்க்கை இதனால் தடைப்பட்டு விடுமோ? என்ற பயத்தில் பல மாணவிகள் வாய்பேசா ஊமைகளாகி விடுகின்றனர். எனினும் நிலைமையின் உக்கிரம் தாங்க முடியாத சில மாணவிகள் வீடுகளில் தமது பெற்றோரிடம் இத்தகைய இழிவான செயலைச் சொல்லி அழுகின்றனர். பெற்றோரும் ஏதும் செய்ய முடியாத ஏதிலிகளாக அவர்களுக்கு ஆறுதல் சொல்வதைத் தவிர வேறேதும் செய்ய முடியாத கையறு நிலையிலேயே உள்ளனர்."

பெண்கள் மீதான என் சண்முகலிங்கத்தின் இப்போக்கினால் இவருக்கு பல்கலைக்கழக மாணவர்கள் "உம்மா (முத்தம்) சண்முகலிங்கம்" என்ற பட்டப் பெயரை வைத்துள்ளனர். "பெண் விரிவுரையாளர்களே தனியாக இவருடைய அலுவலக அறைக்குச் செல்ல அச்சப்படுகின்றனர்" என தேசம்நெற் உடன் யாழில் இருந்து தொடர்பு கொண்ட பெயர் குறிப்பிட விரும்பாத மாணவர் சிலர் தெரிவித்தனர்.

யாழ் பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக தனது மூன்றாண்டு கால சேவையை இவ்வாண்டு டிசம்பருடன் நிறைவு செய்யும் பேராசிரியர் என் சண்முகலிங்கம் மற்றுமொரு மூன்றாண்டுக்குத் தன் சேவையை யாழ் பல்கலைக்கழகத்திற்கு வழங்கத் தயாராகி வருகின்றார்.

**யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தர்**
**பாலசுந்தரம்பிள்ளை:**

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை 1997 பெப்ரவரி முதல் 2003 ஏப்ரல் வரை யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்தவர். இன்றும் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக உள்ளார். யாழ் பல்கலைக்கழகம் இன்றுள்ள கீழ்நிலைக்குத் திடீரென வரவில்லை. காலம்காலமாக அப்பல்கலைக்கழகத்தை நிர்வகித்தவர்களின் பொறுப்பின்மையே அதனை இந்நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. அதில் பொன் பாலசுந்தரம்பிள்ளையின் பொறுப்பற்ற செயற்பாடுகளும் மிக முக்கியமானது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகச் சீர்கேடுகளும் பாலியல் துஸ்பிரயோகங்களும் ஸ்தாபனமயப்பட்டது இவரது காலத்திலேயே. இவருக்குப் பின் வந்த உபவேந்தர்களான எஸ் மோகனதாஸ், என் சண்முகலிங்கம் ஆகியோருடன் ஒப்பிடுகையில் இவருக்கு ஆங்கிலப் புலமை இருந்த போதும் இவர் தனது அறிவுத்தரத்தால் அறியப்பட்ட ஒரு உபவேந்தரல்ல.

தற்போது லண்டனில் வாழ்கின்ற, பொன் பாலசுந்தரம்பிள்ளையின் காலத்தில் அங்கு கற்று துணை விரிவுரையாளராகவும் கடமையாற்றிய விரிவுரையாளர் ஒருவர் தேசம்நெற் உடன் இதுதொடர்பாக தொடர்பு கொண்டார். அவர் தகவல் தருகையில் “பொன் பாலசுந்தரம்பிள்ளை விரும்பாதவர்கள், அவர்கள் எவ்வளவு திறமையானவர்களாக இருந்தாலும், எவ்விதத்திலும் அவர்களுக்கு பதவி கிடைக்காமல் செய்துவிடுவார்” என்கிறார்.

மேலும், தனக்கு உதவி விரிவுரையாளர் பதவியை வழங்காமல் தடுக்க எல்லா வழிகளையும் பயன்படுத்தினார் என்றார் அம்முன்னாள் விரிவுரையாளர். ஆனால் ஒரு கட்டத்தில் யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின் அத்துறையில் கற்பிக்க விரிவுரையாளர்களே இல்லையென்ற போது தன்னையும் தன்னையொத்த வேறு சிலரையும் உள்ளெடுக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது என்றார் அவர். யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கதையே தனிக்கதை என்றார் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாத அம்முன்னாள் உதவி விரிவுரையாளர்.

கம்பவாருதி ஜெயராஜ் தனது கம்பன் கழக இளைஞர்கள் யாழ் பல்கலைக்கழகத்தினால் எவ்வாறு பழிவாங்கப்பட்டனர் என்பதனை பல்கலைக்கழகத் தமிழ்துறையினருக்கு பகிரங்கக் கடிதம் - 3 என்ற தலைப்பில் எழுதி உள்ளார். இக்கட்டுரை ஜெயராஜ்ஜியம் என்ற கம்பவாருதியின் பொன்விழா மலரில் பிரசுரிக்கப்பட்டும் இருந்தது.

எங்களைப் (கம்பன் கழகத்தை) பிடிக்காத அவர்களுக்கு (யாழ்
பல்கலைக்கழகத் தமிழ்துறைக்கு)
கழகத்தில் வளர்ந்த இளைஞர்கள் எவரையும் பிடிக்கவில்லை.
என்னென்னவோ காரணம் சொல்லி,
அறிவுலகில் புகாமல் அவர்களைத் தடுத்தார்கள்.
பொய், என்றேனும் உண்மையை வெல்லுமா?
கழகத்தில் வளர்ந்த
க இரகுபரன், ஸ்ரீ பிரசாந்தன், ச முகுந்தன், த ஜெயசீலன், த சிவசங்கர்
ஆகியோர்,
ஏதோ விதத்தில்,
தமிழுலகில் இன்று தம் பெயர் பதித்து நிற்கின்றனர்.

கம்பவாருதி ஜெயராஜ் முன்வைக்கும் மற்றுமொரு குற்றச்சாட்டையும் இங்கு பதிவு செய்வது பொருத்தமானது என நினைக்கிறேன்.

எங்கள் பல்கலைக்கழகங்களுக்குள்,
பகிரங்கமாய் பிரதேசவாதம் பேசப்படுகின்றது.
யாழ் பல்கலைக்கழகத்திற்குள்,
தீவு, வடமராட்சி என இருபெரும் பிரிவுகள்.
மாணவர்களுக்குள் அல்ல,
விரிவுரையாளர்களுக்குள்.
இப்பிரிவுகள் பற்றியே,
பெரும் பதவிகள் தீர்மானிக்கப்படுகின்றனவாம்.
நம் இனமே தலைகுனிய வேண்டிய வெட்கக்கேடு.

தீவுப் பேராசிரியரின் துறைக்குள்,
தீவு மாணவர்கள் தலைதூக்குவதும்,
வடமராட்சிப் பேராசிரியரின் துறைக்குள்,
அவ்வூர் மாணவர்கள் தலைதூக்குவதும்,
யாழ் பல்கலைக்கழகத்துள் ஏற்றுக்கொள்ளப்பட்ட,
நியதியாய்ச் சொல்லப்படுகிறது.
கெட்டித்தனமாய்,
பேராசிரியர்களைத் தம் வலைக்குள் வீழ்த்தக்கூடிய,
ஒரு சில வேற்றூர் மாணவர்களும் வெல்வாராம்.
பல்கலைக்கழகத்தில்
அனைவருக்கும் பகிரங்கமாய்த் தெரிந்த இரகசியம் இது.
என்னே இழிவு.

(ஜெயராஜ்ஜியம் - பல்கலைக்கழகத் தமிழ்துறையினருக்கு பகிரங்கக் கடிதம் - 3 : கம்பவாருதி ஜெயராஜ்)

யாழ் பல்கலைக்கழகம் மீதான இக்குற்றச்சாட்டுகளை அது தொடர்பாக யாழ் பத்திரிகைகளில் வெளியான சில செய்திக் கட்டுரைகளும் உறுதிப்படுத்தி இருந்தன.

‘விரிவுரையாளரிடம் கேள்வி கேட்டால் அல்லது அவருடன் விவாதித்தால் கையில் தருவினம்’ (ஃபெயில் ஆக்குவீனம்) - மாணவர்கள் ஒரு அரங்க ஆய்வு. உதயன் (யூன் 13 2004).

‘பாகுபாடு பார்த்து புள்ளி போடுறது, மாக்ஸ் வெட்டுறது எல்லாம் ஒட்டுமொத்தமாகவே இங்கை இருக்குதெண்டு இப்பதான் தெரியுது.‘ - மாணவர்கள் ஒரு அரங்க ஆய்வு, உதயன் (யூன் 11 2004).

‘விரிவுரையாளர்களைத் தட்டிக்கேட்கும் மாணவர்கள் பழிவாங்கப் படுகின்றனர். ‘ - வலம்புரி (மே 27 2004).

தங்களை விரும்பாதவர்களைப் பழிவாங்க முற்படும் இப்பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் தங்களுக்கு வேண்டியவர்களை இப்படியும் கவனிக்கிறார்கள். பொன் பாலசுந்தரம்பிள்ளையின் இயல்பை வெளிப்படுத்தும் ஒரு சம்பவம் இவ்வாண்டு (2010) ஜனவரியில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடந்தது.

தமிழ் பிரதேசங்களின் மீள்புனரமைப்பு முன்னேற்றம் தொடர்பாக புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்புப் பற்றிய ஒரு மாநாடு ஜனவரி 12 2010ல் இடம்பெற்றது. இதில் லண்டனில் இருந்து கலந்துகொண்ட ஒருவரை பொன் பாலசுந்தரம்பிள்ளை அணுகித் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டுள்ளார். லண்டனில் இருந்து சென்றவர் தன்னை அவருக்கு அறிமுகப்படுத்த முற்பட, பாலசுந்தரம்பிள்ளை அவரைக் கையமர்த்தி, “உம்மைப் பற்றிய விபரம் எல்லாம் நான் ஒன்லைனில் செக் பண்ணினனான்” என்றார். அவர் தொடர்ந்து கூறுகையில் “என்னுடைய மகனும் லண்டனில் பினர் (ஒரு இடம்)இல் இருக்கிறார். நீர் அவரை கவனித்துக் கொள்ளும், நான் உம்மை யாழ்பாணத்தில் ராசா ஆக்குகிறன் ” என்று கூறியுள்ளார்.

யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தின் உச்சத்தில் உள்ள ஒருவர் முன் அறிமுகமில்லாத ஒன்லைனில் மட்டுமே தகவல் அறிந்த ஒருவருடன் மேற்கொண்ட ஒரு உரையாடல் இது. “பேராசிரியர் ஒன்லைனில் சரியாக செக் பண்ணி இருந்தால் எனக்குக் கிட்டக்கூட வந்திருக்க மாட்டார். என்னுடைய

ஒரு பக்கத்தை மட்டும்தான் அவர் ஒன்லைனில் பார்த்திருக்கிறார்" என தேசம்நெற்க்குத் தெரிவித்த அவர், இப்போதைக்குத் தன்னை வெளிப்படுத்த விரும்பவில்லை எனத் தெரிவித்தார்.

**ஊடகங்களின் அச்சமும் மௌனமும்:**

உபவேந்தர் என் சண்முகலிங்கம் உட்பட ஏனையவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் மிக மோசமானவையாக இருந்தபோதும் ஒரு மிகப்பலமான நிறுவனத்தின் அதிகாரம் இவர்களது கையில் இருப்பதும் அல்லது அதிகாரத்தில் உள்ளவர்களின் தயவு இவர்களுக்கு உள்ளதும் பாதிக்கப்பட்டவர்களை அச்சமூட்டுகின்றன. முதலாளித்துவ சமூகமுறைக்கே வளர்ச்சியடையாத ஆண் ஆதிக்க சமூகம் ஒன்றில் பெண்கள் மீதான பாலியல் துஸ்பிரயோகங்கள் முன்வைக்கப்படும் போது அது அப்பெண்ணின் மீதே திருப்பப்படுகின்றது. அதனால் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்கள் மீதான பாலியல் அதிகார துஸ்பிரயோகங்களை வெளிக்கொண்டு வரத் தயங்குகின்றனர். பாதிக்கப்பட்டவர்கள் யாரும் இக்குற்றச்சாட்டுக்களை வெளிக்கொணராத போது அதனை வெளிக்கொண்டு வர வேண்டிய ஊடகங்களும் எழுதப்படாத சமூக, அரசியல், சட்டக் காரணங்களுக்காக அவற்றை சுயதணிக்கை செய்கின்றன. அதனால் குற்றங்களை இழைப்பவர்கள் இப்போதும் எவ்வித மனக்கிலேசமுமின்றி சமூகத்தில் பெரிய மனிதர்களாக நடமாட முடிகின்றது.

அதுமட்டுமல்ல இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருந்த சமூக பாதுகாப்பிற்கான விழுமியங்கள் தூர்ந்து போய் பிறழ்வான நடத்தைகளையும் பிறழ்வான மனிதர்களையும் அனுசரித்துப் போகின்ற சகிப்புத்தன்மை மேலோங்கி உள்ளது. மேலும் இப்படியானவர்கள் கல்வி, பதவி, நிதி வளம் ஆகியவற்றைக் கொண்டு தங்கள் சுயரூபத்தைத் திரையிட்டு மறைக்கக் கூடியதாகவும் உள்ளது. மேலும் தமிழ்ச் சமூகம் மிக இறுக்கமான மூடிய சமூகமாக இருப்பதும் இவ்வாறானவர்கள் தங்களை வளர்த்துக் கொள்வதற்குத் தகுந்த சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

**சண்முகலிங்கம் ~ பாலசுந்தரம்பிள்ளை ~ ஆறுதிருமுருகன் : கூட்டும் கூத்தும்:**

இது தமிழ் கல்விச் சமூகத்தின் மிக ஆபத்தான கூட்டு. இனவாரியான

தரப்படுத்தல் ஓரிரு ஆண்டுகளிலேயே கைவிடப்பட்டது. அதனை அடுத்து பிரதேச ரீதியிலான தரப்படுத்தல் வந்தது. அதனையும் தமிழ் மக்களுக்கு எதிரானது என்று முழங்கி ஆயுதம் ஏந்துவதற்கு வித்திட்ட காரணிகளில் இந்தப் பிரதேச ரீதியான தரப்படுத்தலும் ஒன்றானது. (ஆனால் உண்மையில் நூற்றுக்கும் குறைவான யாழப்பாண மாணவர்களே இத்தரப்படுத்தலால் பாதிக்கப்பட்டனர். ஆனால் யாழப்பாணம் தவிர்ந்த வன்னி உள்ளிட்ட ஏனைய மாவட்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் செல்லும் சந்தர்ப்பத்தை இது வழங்கி இருந்தது.)

ஆனால் அவ்வாறு கல்வித் தரத்தின் உச்சியில் இருந்த யாழ் மாவட்டத்திலிருந்து அந்தத் தரப்படுத்தலை அன்று எதிர்த்துநின்று ஆயுதம் தாங்கிய மாணவர் சமூகம், கால்நூற்றாண்டுக்குப் பின் இன்று, அதே தரப்படுத்தலினால் நன்மை பெறுகின்றது. இவ்வீழ்ச்சிக்கு தனியான ஒரு காரணத்தை சுட்டிக்காட்ட முடியாது. பல்வேறு அம்சங்கள் காரணமாக இருந்துள்ளது. ஆனால் ஏனைய தமிழ் மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ் மாவட்டத்தின் கல்வி வீழ்ச்சி கணிசமானது. சண்முகலிங்கம் - பாலசுந்தரம்பிள்ளை - ஆறுதிருமுருகன் போன்றவர்கள் கூட்டாக யாழ் கல்விச் சமூகத்தை வழிநடத்தும் போது இவ்வாறான கணிசமான வீழ்ச்சியில் மேற்குறிப்பிட்டவர்கள் போன்றோரின் பங்கினை நிராகரிக்க முடியாது.



சண்முகலிங்கம் - பாலசுந்தரம்பிள்ளை - ஆறுதிருமுருகன் இடையே உள்ள இந்த நட்பு சாதாரண நட்பு அல்ல. விசுவாசம், நன்றிக் கடனுடன் கூடிய நட்பு. யாழ்ப்பாணத்தில் குறிப்பிடக்கூடிய விழாக்களில் இம்மூவரையும் ஒன்றாகவே காணலாம். 'buy one, get two free – பை வன் கெற் ரூ பிறி' என்ற வகையில் ஒருவரை ஒரு நிகழ்ச்சிக்கு அழைத்தால் மூவரும் வந்து சேர்வார்கள்.

இந்த நட்பின் பின்னணி முக்கியமானது. கலாநிதிப் பட்டம் பெற வெளிநாடு சென்றவர் வெறும்கையோடு வந்தார். அவர் ஆறு திருமுருகன் நெருக்கமாக இருந்த தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தை மையப்படுத்தி சமய சமூகவியல் ஆய்வு ஒன்றைச் செய்தார். அந்த ஆய்வு அவ்வாலய மலரில் பின்னர் பிரசுரிக்கப்பட்டது. இவ்வாறு அன்றைய யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரான பொன் பாலசுந்தரம்பிள்ளையால் பேராசிரியராக்கப்பட்டவர் தான் இன்றைய உபவேந்தர் என் சண்முகலிங்கம். சண்முகலிங்கத்திற்கு முன் உபவேந்தராக இருந்த எஸ் மோகனதாசும் பொன் பாலசுந்தரம்பிள்ளையால் உருவாக்கப்பட்டவரே.

இன்றைய இந்த உபவேந்தர் மீண்டும் உபவேந்தர் ஆக்கப்பட வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளவரும் பொன் பாலசுந்தரம்பிள்ளையே. ஏன் பொன் பாலசுந்தரம்பிள்ளை, சண்முகலிங்கத்தை உபவேந்தராக ஆக்க விரும்பிகிறார் என்பதற்கான விடையை அவரே அண்மையில் இடம்பெற்ற விழா ஒன்றின் போது தனக்கு நெருக்கமான ஒருவருக்குக் கூறியுள்ளார். “சண்முகலிங்கம் இருக்கிற வரைக்கும் நான் தான் விசி” என்று பொன் பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார். காரணம் எஸ் மோகனதாஸ், என் சண்முகலிங்கம் ஆகியோர் செயற்திறன் அற்றவர்கள். முடிவெடுக்கும் ஆளுமையற்றவர்கள். வடக்குக்கு வெளியே இருந்து வருகின்ற ஆங்கிலக் கடிதங்களுக்கு முறையாகப் பதிலளிக்க முடியாதவர். இவற்றுக்கெல்லாம் இவர்களுக்கு பொன் பாலசுந்தரம்பிள்ளை தேவை. குருவை மிஞ்ச முடியாத சிஸ்யர்கள். இவர்களின் இக்குறைபாடுகளால் இவர்களுக்கு பின்னால் சிலர் பலமானவர்களாக உள்ளனர். இவர்களது பலவீனங்கள் இவர்களுக்குப் பின்னால் உள்ளவர்களின் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு தக்க சூழலை வழங்குகிறது.

இந்த விசுவாசத்திற்கு மற்றுமொரு காரணம் பொன் பாலசுந்தரம்பிள்ளை பிலிப்பைன்ஸ் மாணவியின் விடயத்தில் என் சண்முகலிங்கத்தைக் கண்டும் காணாமல் விட்டது. அந்த நன்றிக் கடனும் என் சண்முகலிங்கத்திற்கு உண்டு.



ரஸ்ய ஆட்சித் தலைவர் (ஜனாதிபதி) டமிர்ரி மெட்வெடெவ் க்கும் ரஸ்யாவின் முன்னாள் ஆட்சித் தலைவர் விளாடிமீர் புட்டீனுக்கும் உள்ள உறவு உலகறிந்தது. அதுவே யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் என் சண்முகலிங்கம் அவர்களுக்கும் முன்னாள் உபவேந்தர் பொன் பாலசுந்தரம்பிள்ளைக்கும் உள்ள உறவு. என் சண்முகலிங்கத்தை யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தின் அரசனாக பொன் பாலசுந்தரம்பிள்ளை ஆக்கியுள்ளார். அவரே ஆட்டுவிக்கிறார்.

இப்போது ஆறு திருமுருகன் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தின் தலைவர் மட்டுமல்ல யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கவுன்சில் உறுப்பினரும் கூட. என் சண்முகலிங்கம் மீண்டும் யாழ் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் ஆவதற்கு பொன் பாலசுந்தரம்பிள்ளை மட்டும் போதாது, ஆறு திருமுருகன் அருள்பாலிக்கவும் வேண்டும்.

சண்முகலிங்கம் - பாலசுந்தரம்பிள்ளை - ஆறுதிருமுருகன் கூட்டினால் மட்டும் தமிழ் மக்களின் குறிப்பாக யாழ் கல்விச் சமூகத்தின் அறிவு

மையமான யாழ் பல்கலைக்கழத்தை தம் வயப்படுத்த முடியாது. பல்கலைக்கழகத்தின் கவுன்சிலால் தெரிவு செய்யப்படும் மூவரில் ஒருவராக இருக்க வேண்டும். பின் அந்த மூவரில் ஒருவராக என் சண்முகலிங்கம் வருவதற்கு அரசியல் செல்வாக்கு வேண்டும். அதற்கு விரிக்கப்பட்ட வலை என்னவென்று பார்ப்போம்.

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கலாநிதிப் பட்டம்:**

ஒகஸ்ட் 6, 2010ல் நடைபெற இருக்கும் யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் ஓய்வுபெற்ற யாழ் அரசாங்க அதிபர் கெ கணேஸிற்கும் கலாநிதிப் பட்டங்களை வழங்க தற்போதைய யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் என் சண்முகலிங்கம் திட்டமிட்டுள்ளதாக தேசம்நெற் க்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய உபவேந்தர் என் சண்முகலிங்கத்தின் பதவிக்காலம் இவ்வாண்டு டிசம்பருடன் முடிவுக்கு வருவதால் ஒக்ரோபரில் இப்பதவிக்கான தேர்தலுக்கான விண்ணப்பம் கவுன்சிலால் கோரப்பட இருக்கின்றது. தேர்தல்கள் இன்னும் சில வாரங்களில் நடைபெற உள்ளது. யாழ் பல்கலைக்கழகக் கவுன்சில் உறுப்பினர்களின் நியமனங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சம்மதம் இருந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. கவுன்சில் அங்கத்தவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சமிக்ஞைக்கு கட்டுப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனாலும் மீறிச் செயற்படுவார்கள் என்றில்லை.

அவர்கள் சமிக்ஞையை மீறமாட்டார்கள் என்பது அவர்கள் கடத்தப்படுவார்கள் அல்லது கொலை செய்யப்படுவார்கள் என்ற அச்சத்தில் அல்ல. அவ்வாறான ஒரு அச்சம் இல்லையென்பதும் கவுன்சில் உறுப்பினர்களுக்கு மிகத்தெளிவாகவே தெரியும். கடத்தல், கொலை என்ற கதைகள் தங்களை நியாயப்படுத்தவும் மக்களை ஏமாற்றவும் மட்டுமே. அப்படி என்றால் எதற்காக அவர்கள் அமைச்சரின் சமிக்ஞையை மீறமாட்டார்கள் என்பதற்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஒரு நிகழ்வே சாட்சி. யாழ் மாநகரசபைத் தேர்தலுக்கு முன்பாக பல்கலைக்கழகத்தில் அமைச்சர் தேவானந்தா ஒரு சந்திப்பை ஏற்பபாடு செய்திருந்தார். அப்போது ஒரு சந்தர்ப்பத்தில் அமைச்சர் தேவானந்தா "என்னிடம் உதவிக்கு வராதவர்கள், உதவி பெறாதவர்கள் இருக்கிறீர்களா?" எனக் கேட்டார். அங்கிருந்தவர்களில் அப்படி யாரும் இருக்கவில்லை. இதுவே அவர்கள்

அமைச்சரின் சமிக்ஞைக்குக் கட்டுப்பட வேண்டி இருப்பதற்குக் காரணம்.

இதே துருப்புச் சீட்டையே தற்போதைய உபவேந்தர் என் சண்முகலிங்கம் அமைச்சர் தேவானந்தாவில் பயன்படுத்த முற்படுகிறார். அமைச்சருக்கு கலாநிதிப் பட்டத்தைக் கொடுத்து மீண்டும் தன்னை யாழ் பல்கலைக்கழகத்திற்கு உபவேந்தராக்கும்படி கேட்கின்றார். இன்று அமைச்சர் முன்னுள்ள கேள்வி, அவர் இந்த வலையில் வீழ்வாரா? பட்டத்தைப் பெற்றதால் நா இழப்பாரா?

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்த ஒரு பார்வை:**

அமைச்சர் டக்ளஸ் தேவானந்த கம்யூனிஸ்ட் கட்சியின் சிவப்பு நாடா (Red Tape) பத்திரிகையின் ஆசிரியரான தோழர் கதிரவேலு - யாழ் மத்திய கல்லூரி ஆசிரியை மகேஸ்வரியின் நான்கு ஆண் பிள்ளைகளில் இரண்டாமவர். தனது ஆறு வயதிலேயே தாயை இழந்த இவர், உறவினரும் தொழிற்சங்கவாதியுமான கெ சி நித்தியானந்தாவின் அரசியல் சிந்தனையில் வளர்ந்தவர். தந்தையினதும் தன்னை வழிநடத்திய தந்தையைப் போன்றவரினதும் வழியைத் தனயன் பின்பற்றி ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தனது 13வது வயதிலேயே குரல்கொடுக்க ஆரம்பித்தார்.



ஆரம்பத்தில் ஈழ விடுதலை இயக்கத்தில் இணைந்தவர், ஈழமாணவர் பொது மன்றத்திலும் அங்கம் வகித்தவர். 1975ல் தனது 18வது வயதில் ஈழப் புரட்சிகர அமைப்பை (ஈரோஸ்) உருவாக்கியவர்களில் ஒருவர். இவ்வமைப்பின் இராணுவப் பயிற்சிக்காக 1978ல் பாலஸ்தீனம் சென்று பாலஸ்தீன விடுதலை இயக்கங்களில் ஒன்றான அல் பற்றா அமைப்பில் பயிற்சி எடுத்தவர். அதன் பின் ஈரோஸ் பிளவுபட ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியை (ஈபிஆர்எல்எப்) பத்மநாபாவுடன் இணைந்து உருவாக்கினார். அதில் ஏற்பட்ட பிளவில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்)இல் இருந்து பிரிந்து வந்த பரந்தன் ராஜனுடன் இணைந்து ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈஎன்டிஎல்எப்)யை உருவாக்கினார். இறுதியாக 1987ல் இப்போதுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபிடிபி) உருவாக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக இலங்கையின் பிரபல்யமான சிறைக்கூடங்களில் எல்லாம் அடைக்கப்பட்ட இவர், 1983 யூலை 25 - 27 வெலிக்கடைச் சிறைப் படுகொலைகளிலிருந்து உயிர்

தப்பியவர். ஆனால் டக்ளஸ் தேவானந்தாவின் சகோதரருக்கு அவ்வாறு உயிர்தப்பிக்க முடியவில்லை. 1990களின் முற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட டக்ளஸ் தேவானந்தவின் சகோதரர் பிரோமானந்தா மிகுந்த சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இவரும் ஈபிடிபி உறுப்பினரே.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து அரசியல் நீரோட்டத்திற்கு வந்த ஈபிடிபி 1994 முதல் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்து வருகின்றது. 2000 ஆண்டு முதல் பெரும்பாலும் அமைச்சுப் பதவியில் இருந்து வருகின்றார் அமைச்சர் தேவானந்தா. இவ்வாண்டு ஏப்ரலில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார் இவர்.

தமிழீழ விடுதலைப் போராட்டமே தடம்புரண்ட போது அமைச்சர் தேவானந்தாவால் தன் தந்தை வழியைத் தொடர முடியவில்லை. அனைத்து இயக்கங்களிலும் இடம்பெற்ற ஆயுதக் கலாச்சாரத்தின் தாக்கமும் அதன் விளைவுகளும் அவர் தலைமைதாங்கிய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினையும் பாதிக்கவே செய்தது.



“ஒரு காலத்தில் ஆயுதம் ஏந்திய ஒரு சுதந்திரப் போராட்ட இயக்கத்தை வழி நடத்திச் சென்ற ஆரம்பகால தலைவர்களில் நானும் ஒருவன். அன்றைய தவிர்க்க முடியாத காலச்சூழலே நாம் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய கட்டாய கட்டளைகளை எம்மீது பிறப்பித்திருந்தது. எமது சமகால இருப்பை நியாயப்படுத்துவதற்காக எமது கடந்தகால வரலாற்றை கொச்சைப்படுத்த நான் விரும்பவில்லை .

... தமிழ் மக்கள் இன்றுவரை தாங்கி வந்துள்ள துயரங்களுக்கும், அவலங்களுக்குமான பொறுப்பை வேலுப்பிள்ளை பிரபாகரன் மீது மட்டும் சுமத்தி விட்டு சம்பந்தப்பட்ட ஏனைய தமிழ் தலைமைகள் அதற்கான பொறுப்பில் இருந்து விலகிவிட முடியாது.

சம்பந்தப்பட்ட அனைத்து தமிழ்த் தலைமைகளும் அதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்கவேண்டும். ஆயுதப்போராட்டத்தை ஆரம்பங்களில் வழி நடத்திச் சென்றவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் தமிழ் மக்கள் சுமந்து வந்த அவலங்களுக்கான தார்மீகப் பொறுப்பை நானும் பகிரங்கமாகவேஏற்றுக்கொள்கின்றேன்.” எனக்கூறி அமைச்சர் தேவானந்த கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளுக்கான பொறுப்பைத் தானும்

ஏற்றுக் கொண்டுள்ளார்.

(கற்றுக் கொண்ட அனுபவங்கள் புதிய வரலாற்றைப் பெற்றுத் தரும் என்று அமைச்சர் தேவானந்தா கற்றறிந்த பாடங்கள் நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழுவின் முன் செப்ரம்பர் 03 2010ல் அளித்த சாட்சியத்தில் இருந்து.)

அனைத்து ஆயுத அமைப்புகள் மீதும் அதன் தலைமைகள் மீதும் உள்ள குற்றச்சாட்டுகள் ஈபிடிபி கட்சிக்கும் அதன் தலைமைக்கும் உண்டு. அதே போன்று ஆயுதம் ஏந்தாத அமைப்புகளும் இந்த ஆயுதக் கலாச்சாரத்தை ஆதரித்து, ஆயுத அமைப்புகள் மேற்கொண்ட அதே தவறை அவர்களும் செய்துள்ளனர். ஆனாலும் என்றுமே தங்கள் அரசியல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பேற்க முன்வராத பல தமிழ் அரசியல் தலைமைகள் மத்தியில் அமைச்சர் தேவானந்தாவின் சாட்சியம் வரவேற்பைப் பெற்றமைக்குக் காரணம் அவர் தன்னுடைய அரசியலுக்கு பகிரங்கமாக பொறுப்பெற்றுக் கொண்டது தான்.

மே 18 2009ற்கு முன் மிகக் கூடுதலான தடவைகள் (13 தடவைகள்) தமிழீழ விடுதலைப் புலிகளால் குறிவைக்கப்பட்ட போதும் உயிர் தப்பிய தலைவர் என்ற பெருமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவிற்கு உரியது. ஆனால் அவருடைய நூற்றுக் கணக்கான தோழர்களுக்கு அவ்வாறு உயிர் தப்பிக்கும் வாய்ப்பு எட்டவில்லை. அதனால் மே 18 2009ற்கு முன்பாக ஈபிடிபி கட்சிக்கு ஆயுதம் ஏந்துவதற்கான - வன்முறையைப் பயன்படுத்துவதற்கான (அவை சில இடங்களில் தவறாகவும் பயன்படுத்தப்பட்டு இருந்தன.) காரணங்கள் - தேவை இருந்ததுள்ளது. ஆனால் மே 18 2009ற்குப் பின்பாக அதற்கான அவசியம் இல்லாத சூழல் ஏற்பட்டு உள்ளது.

இன்றைய இந்த அரசியல் மாற்றத்தை ஈபிடிபி யும் அதன் தலைமையும் விளங்கிக் கொண்டு புதிய அரசியல் கலாச்சாரம் ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியம். அன்று தொடர முடியாது போன தந்தையின் வழித் தடங்களை தனயன் மீள்மதிப்பீடு செய்வதற்கான நேரம் இது. அன்றைய பல கொம்யூனிஸ்ட் தோழர்கள் மக்களுக்காக உழைத்து பென்சனும் இல்லாத நிலையில் இருந்த போது அமைச்சர் தேவானந்தாவின் உதவிக்கரம் அவர்களுக்கு வாழ்வளித்தது. இன்னும் அவ்வாறன சிலருக்கு வாழ்வளிப்பதாகவே தெரிகிறது.

இன்றும் இவர் மீதுள்ள நம்பிக்கைக்குக் காரணம் எளிமை, எப்போதும்

மக்களால் அணுகக் கூடியவராக இருப்பது, எப்போதும் எந்நேரத்திலும், விவாதிக்க தயாராக இருப்பது, மற்றையவர்கள் கருத்தையும் ஏற்று பரிசீலிக்கும் பண்பு.

பல்வேறு விமர்சனங்கள் இருந்த போதும் இன்றுள்ள தமிழ் அரசியல் தலைமைகளிடையே ஆளுமையுள்ள ஒரு அரசியல் தலைவராக இருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. அதிகப்படியான விருப்பு வாக்குகளை அவர் பெற்றுக் கொண்டமைக்கும் இதுவே காரணமாக அமைந்திருக்கலாம். "கற்றுக் கொண்ட பாடங்கள் புதிய வரலாற்றைப் பெற்றுத்தரும்!" என்ற ஃபிடல் கஸ்ரோவின் வாக்கியத்தை அமைச்சர் தேவானந்தா நம்பினால் முன்னைய அரசியல் கலச்சாரத்தில் இருந்து தன்னையும் கட்சியையும் விடுவித்துக்கொள்ள வேண்டும்.

**வாங்காதே வாங்கவல்லாய்:**

முன்னைய அரசியல் கலாச்சாரத்தில் இருந்து விடுவித்துக்கொள்வதும் ஒருவகைப் போராட்டமே. இன்று அமைச்சர் தேவானந்தாவைச் சுற்றி வருபவர்கள் (கட்சித் தோழர்கள் அல்ல) தம் தேவைக்காக தங்களை கட்சியில் இணைத்துக் கொண்டவர்கள். சுயலாபம் கருதிச் செயற்படுகின்றவர்கள். 13 தடவைகள் புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் இருந்து தப்பிய ஒருவருக்கு, இவர்களை இனம்காண்பதில் எவ்வித கஸ்டமும் இருக்காது. ஒருவருடைய நுண்ணிய அசைவுகளையும் கணித்து மதிப்பீடு செய்கின்ற ஆற்றல் அவருக்கு உண்டு. அதுவே அவரது உயிரையும் அரசியலையும் இன்றுவரை காப்பாற்றி வந்துள்ளது.

அதனாலேயே எதிர்காலத்தில் தம் வாழ்வை உய்விக்க வேண்டும் என்ற விருப்பில் ஆயிரம் ஆயிரம் விருப்பு வாக்குகளைத் தந்த மக்களுக்காக, கலாநிதி விருதினை "வாங்காதே வாங்கவல்லாய்" என்று கூற வேண்டியுள்ளது. "கோயிற் சுண்டல் போல் பட்டங்களை அள்ளிக்கொடுக்கின்றனர்" என யாழ்பாணப் பல்கலைக்கழகத்தின்மீது குற்றச்சாட்டு உள்ளது. இது போன்ற காரணங்களாலேயே மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அளித்த பட்டத்தை நிராகரித்தார். பல்கலைக்கழகம் ஒன்று கலாநிதிப் பட்டம் வழங்குதற்கான ஆளுமையும் தகைமையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு உண்டு. ஆனால் உபவேந்தர் என் சண்முகலிங்கம் ஏன் இந்தப் பட்டத்தை வழங்குகிறார் என்று கணக்குப் பார்க்க 'கல்குலேற்றர்' தேவையில்லை.

இக்கலாநிதிப் பட்டத்தை அமைச்சர் தேவானந்தா ஏற்றுக் கொள்வாரானால் அது அவரையும் கேவலப்படுத்தி, யாழ்பாணப் பல்கலைக்கழகத்தின் எதிர்காலத்தையும் கேவலப்படுத்துவதாக அமையும். அதனால் மக்கள் தலைவனாக மக்கள் தந்த கௌரவத்தை ஏற்று யாழ் பல்கலைக்கழகம் வழங்க முன்வரும் கலாநிதிப் பட்டத்தை அமைச்சர் தேவானந்த நிராகரிப்பதன் மூலம் இவ்வாறான சுயலாப கொடுக்கல் வாங்கல் அரசியல் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

(இக்கட்டுரை வெளியானதன் பின் கௌரவ கலாநிதிப் பட்டத்தை அமைச்சர் தேவானந்தா எற்றுக்கொள்ள மாட்டார் என்பது தெரியவர அப்பட்டத்தை வழங்குவதற்கான முயற்சி கைவிடப்பட்டது.)

### 'Tamillain-Barre' Syndrom' ற்கு அவசர சிகிச்சை அவசியம்:

தமிழ் சமூகத்தினை பாதுகாக்க வேண்டிய அதன் அறிவியல் கட்டமைப்புகளில் உள்ளவர்கள் அச்சமூகத்தின் சிந்தனைத் திறனைத் தாக்கி ஒட்டுமொத்த சமூகத்தையுமே சீரழிக்கின்ற 'Tamillain-Barre' Syndrome' இங்கு தெளிவாகவே அடையாளம் காணப்பட்டுள்ளது.

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் கெ கணேஸ், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஆறு திருமுருகன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் என் சண்முகலிங்கம், முன்னாள் உபவேந்தர் பொன் பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரின் நியமனங்களில் அமைச்சர் தேவானந்தாவின் சம்மதம் இருந்துள்ளது.

ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் அரச நியமனங்களுக்குத் தம் அதிகாரத்தை பயன்படுத்துகின்ற முறை இலங்கை போன்ற நாடுகளில் வழமையாகி உள்ளது. ஆனால் அந்த நியமனங்களுக்கு நியமிக்கப்படுபவர்கள் அதற்கான தகுதியைக் கொண்டிருக்க வேண்டும் என்பதும் குறிப்பாக மக்களின் அறிவியல் மையமான பல்கலைக்கழகத்திற்கு நியமிக்கப்படுபவர் தகுதி பொறுப்புணர்வு உடையவராக இருக்க வேண்டியதும் அவசியமானது. ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் எதிர்காலத்தையே சீரழிக்கக் கூடியவர்களை, சமூகப் பொறுப்பற்றவர்களை, ஆளுமையற்றவர்களை பொறுப்பான பதவிகளில் நியமிப்பதன் மூலம் தமிழ் சமூகத்திற்கு 'தனது அரசியல் வாழ்வில் அமைச்சர் தேவானந்த எதனை விட்டுச் செல்ல விரும்புகின்றார்?' என்ற

கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது.

அண்மைக் காலங்களில் சமூகரீதியில் ஒடுக்கப்பட்டவர்கள் உட்பட பலருக்கும் பெரும்பாலும் அவர்களின் தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டு உள்ளமை வரவேற்கப்பட வேண்டியது. இவ்வாறு வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் பலர் சமூகப் பொறுப்புணர்வோடு தங்கள் கடமையைச் செய்கின்றனர். ஈபிடிபி கட்சிக்கு நெருக்கமான ஒரு அதிபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட போது பொறுப்புணர்வற்றவர்கள் சார்பில் தாங்கள் தலையிடப் போவதில்லை என்று அமைச்சர் தேவானந்தா தெரிவித்துள்ளார். அப்பொறுப்பற்ற அதிபர் சட்டப்படி அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

பொறுப்புள்ளவர்கள் தங்கள் கடமையைச் செய்ய அமைச்சர் தேவானந்தா தடைவிதிப்பதில்லை என்பதனை யாழ்ப்பாணத்தின் காட்சியகமாகப் பேணப்பட்ட தொழில்நுட்ப பூங்காவிற்கு பொறுப்பாக இருந்த தற்போது லண்டனில் வாழும் எஸ் பாலச்சந்திரன் அப்போது தேசம் சஞ்சிகைக்குத் தெரிவித்திருந்தார். ஈபிடிபி கட்சியுடன் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்த மார்க்ஸிய கருத்துடைய இவர் தொழில்நுட்ப பூங்காவின் இயக்கத்தில் முக்கிய பங்கேற்று இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே அமைச்சர் தேவானந்தா தனது அரசியல் வாழ்வில் குறைந்தபட்சம் நம்பிக்கையான எதிர்காலத்தை தமிழ் மக்களுக்கு விட்டுச் செல்லக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பலமாகவே உள்ளது. அதனால் விமர்சனங்கள் தவிர்க்க முடியாதது.

தகுதியற்ற, பொறுப்பற்ற, ஆளுமையற்றவர்கள் 'கலாநிதிப் பட்டம் தந்தும்', 'நண்டுக் கறி தந்தும்', 'காலில் வீழ்ந்து ஆசீர்வாதம்' பெற்றும் தம் காரியங்களைச் சாதிக்க முயல்வார்கள். ஆனால் அமைச்சர் தேவானந்தாவுக்கு விருப்பு வாக்கும் கட்சிக்கு வாக்கும் அளித்த அந்த மக்களை இவர்கள் மிதிக்கின்றனர். இவர்கள் மக்களுக்கு மட்டுமல்ல அமைச்சருக்குமே விசுவாசமற்றவர்கள்.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவுக்கும் அமைச்சர் தேவானந்தாவும் அழைக்கப்பட்டு

வந்திருந்தார். அவரின் பாதுகாப்பிற்காக சில தோழர்களும் வந்திருந்தனர். இவர்கள் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிற்கு அணிந்துவந்த ஆடைகளும் நடந்துகொண்ட முறைகளும் பலருக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தி இருந்ததாக தேசம்நெற் தொடர்புகொண்ட சிலர் சுட்டிக்காட்டி இருந்தனர். தங்கள் காரியத்தை சாதிக்க முற்படுபவர்கள் இவ்வாறன குறைகளைக் கண்டிக்கவோ எடுத்துச் சொல்லவோ முன்வருவதில்லை. ஆனால் வெளியே புறமுதுகில் குற்றம் சொல்லவும் தயங்குவதில்லை. அண்மையில் சில வாரங்களுக்கு முன் நடைபெற்ற ஒரு திறப்பு விழாவிற்கு அமைச்சரையும் அழையுங்கள் என்று கேட்கப்பட்ட போது சண்முகலிங்கம் - பாலசுந்தரம்பிள்ளை - ஆறு திருமுருகன் கூட்டு அதனை தடுத்து நிறுத்தியது. இவர்கள் பின் கதவால் செய்கின்ற நேர்மையற்ற அரசியல் மிக ஆபத்தானது. இது அமைச்சர் தேவானந்தாவை ஒரு அரசியல் முள்ளிவாய்க்காலுக்கே கொண்டு செல்லும்.

இலங்கையில் குறிப்பாக தேசிய சிறுபான்மை சமூகங்கள் இரட்டிப்பு ஒடுக்குமுறையை எதிர்கொள்கின்றன. தேசிய சிறுபான்மை சமூகங்களில் குறிப்பாக தமிழ் சமூகம் இலங்கை அரசை எதிர்நிலை அரசாக உணர்ந்து ஆயுதப் போராட்டத்தையும் முன்னெடுத்து இருந்தது. அதற்கு நியாயமான காரணங்களும் இருந்தது.



இன்று யுத்தம் முடிவடைந்த போதும் தமிழ் மக்களின் உணர்வுநிலையில் இலங்கை அரசு எதிர்நிலையான அரசு என்பதிலும் அது சிங்கள அரசு என்பதிலும் பாரிய மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. அதற்கான சூழலையும் ஆட்சியாளர்கள் ஏற்படுத்தவில்லை. அவ்வாறான சூழல் ஏற்படுத்தப்படும் என்பதற்கான ஏதும் அறிகுறிகளும் குறிப்பிடப்படும்படியாக இல்லை. ஆனால் 30 ஆண்டுகால யுத்தம் முடிவடைந்து 30 மாதங்களும் ஆகாத நிலையில் உடனடியாக மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது என்ற வாதத்தையும் முற்று முழுதாக நாம் நிராகரிக்கவும் முடியாது.

இன்றுள்ள சூழலில் தமிழ் சமூகம் தன்னைத் தானே மீள்கட்டமைக்க வேண்டியுள்ளது. அதற்கு தமிழ் சமூகத்தின் நிர்வாகத்தில் இருக்கின்ற குறிப்பாக தமிழர்கள் சுயநல, சுயலாப நோக்கங்களைக் கைவிட்டு சமூக சிந்தனையோடு செயற்பட வேண்டும் அவ்வாறு இல்லாதவர்கள் அம்பலப்படுத்தப்படுவது தவிர்க்க முடியாதது. இது தமிழ் சமூகத்தின் நலன்சார்ந்தவர்களது கடமையும் ஆகும்.

# யாழ் பல்கலைக்கழகத்தின் இலக்கையும் தொலைநோக்கு பார்வையையும் முன்னெடுத்துச் செல்லும் கல்வியியல் ஆளுமையும் முகாமைத்துவத் திறமையும் உடையவரை உபவேந்தராகத் தெரிவு செய்யுங்கள்!



(நவம்பர் 09, 2010)

*“யாழ் பல்கலைக்கழகத்தை நல்ல திசைநோக்கி முன்னெடுக்கக் கூடிய வாய்ப்புக்கள் தற்போது எட்டிவரும் நிலையில் இவ்வாறான சந்தர்ப்பங்களை ஒழுங்கு முறையில் சரிவரப் பயன்படுத்த நாம் முன்வர வேண்டும். யாழ் பல்கலைக்கழகத்தை மிகச் சிறந்த முறையில் முன்னேற்ற வேண்டும்.*

*யாழ் பல்கலைக்கழகம் கூடாதவர்களின் கூடாரமாக மாறிவிடக் கூடாது என்பதில் நான் மிகுந்த அக்கறை கொண்டு செயற்பட்டு வரும் நிலையில் இப்பல்கலைக்கழகம் தவறானவர்களது கரங்களில் சிக்கி விடக் கூடாது என்பதில் அனைவரும் விழிப்புடன் செயற்பட வேண்டும். யாழ் பல்கலைக்கழகத்தை ஒரு சிலர் தவறான வழிவகைகளில் தளமமைத்து செயற்பட எத்தனிக்கக் கூடும். அவர்கள் அவ்வாறு தவறான வழிவகைகளுக்குள் இப்பல்கலைக்கழகத்தைத் தள்ளி விடாமல் எமது பண்பாட்டு கலாசார விழுமியங்களைக் காப்பாற்றிக் கொண்டு இப்பல்கலைக்கழகத்தை எமது மக்களுக்கு பயன்தரக் கூடிய வகையில் முன்னேற்ற நாம் அனைவரும் தயாராக வேண்டும்.”*

*டக்ளஸ் தேவானந்தா - பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்*
*(ஒக்ரோபர் 29, 2010 இல் யாழ் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடிய போது தெரிவிக்கப்பட்ட கருத்து.)*

யாழ் பல்கலைக்கழகம் அதன் கல்வியியல் தரத்திலும் நிர்வாகத்திலும் மிகக்கீழ்நிலையை அடைந்துள்ளது மட்டுமல்ல ஒரு கல்விக்கட்டமைப்புக்கு இருக்கவேண்டிய அடிப்படைப் பண்புகளையே இழந்துள்ளமை முன்னைய கட்டுரைகளில் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டு உள்ளது. அதன் தாக்கத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களே பிரதிபலித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் உபவேந்தர்களாக பொறுப்பேற்றவர்கள் அதற்குரிய பொறுப்புணர்வுடன் செயற்படாமை பல்கலைக்கழகத்தின் இன்றைய நிலைக்கு முக்கிய காரணமாக உள்ளது. மேலும் பல்கலைக்கழகத்தின் துறைத்தலைவர்களும் அதற்கான பொறுப்பில் இருந்து தங்களை விடுவிக்க முடியாது.

யாழ் பல்கலைக்கழகத்தை சிறந்தமுறையில் முன்னேற்றுவதற்கான ஆளுமையான தலைமைத்துவத்தை தெரிவதற்கு ஒரு சிறந்த வாய்ப்பு எட்டியுள்ளது. நவம்பர் 09 2010ல் உபவேந்தர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுநாள். அடுத்த பல்கலைக்கழகக் கவுன்சில் கூட்டத்தில் விண்ணப்பதாரிகள் - வேட்பாளர்களைத் தெரிவதற்கான தேர்தல் நாள் குறிக்கப்படும். யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கான தெரிவு இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டு உள்ளது.

**உபவேந்தரிடம் யாழ் பல்கலைக்கழகத்தின் எதிர்பார்ப்பு:**

யாழ் பல்கலைக்கழகம் தனது உபவேந்தருக்கான விண்ணப்பத்தை கோரும் அறிவிப்பில் உபவேந்தராக வருபவரிடம் எதனை எதிர்பார்க்கின்றது என்பதனை தெளிவாகவே வரையறுத்து உள்ளது.

"யாழ் பல்கலைக்கழகத்தின் தொலைநோக்குப் பார்வை கற்பித்தல், கற்றல், ஆய்வு, நிபுணத்துவம் என்பனவற்றின் முன்னணி மையமாக விளங்குவது. - The vision of the University of Jaffna is to be a leading centre of excellence in teaching, learning, research and scholarship. அதனுடைய முதற்கடமை தரமான உயர் கல்வியை வழங்கி பொதுவாக நாட்டுக்குரிய குறிப்பாக வடபகுதிக்குரிய தேவைசார்ந்த ஆய்வுகளை முன்னெடுத்து நாட்டுக்கு பணிசெய்ய வேண்டும். - Its priorities are serving the country to improve the quality of Higher Education and promote research relevant for the development of the country in general and the Northern Region in particular." என யாழ் பல்கலைக்கழகத்தின் பார்வையும் இலக்கும் தெளிவாகவே வரையறுக்கப்பட்டு உள்ளது.



"பல்கலைக்கழகத்தினுடைய முகாமைத்துவத்தில் வெளிப்படைத் தன்மை, பொறுப்புணர்வு, சீரான நிர்வாகம் என்பவை உபவேந்தருடைய பொறுப்பு. - The Vice Chancellor shall be responsible for maintaining transparency, accountability and good governance in the management of the affairs of the University. உபவேந்தர் கல்வியியல் தலைமைத்துவத்தை வழங்குவதுடன் நிர்வாகக் கொள்கைகளை உருவாக்குவது, அறிமுகப்படுத்துவது, அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பு உடையவர். - The Vice Chancellor should provide academic leadership and is responsible for formulating, introducing and carrying out a streamlined management policy." என உபவேந்தருடைய கடமையும் பொறுப்பும் தெளிவுபடுத்தப்பட்டு உள்ளது.

"உபவேந்தர் பல்கலைக்கழகத்தினுடைய இலக்கையும் தொலை நோக்கு பார்வையையும் முன்னெடுத்துச் செல்லும் கல்வியியல் ஆளுமையும் முகாமைத்துவத் திறமையும் உடையவராக இருக்க வேண்டும். - The Vice Chancellor shall be a person with a vision to carry forward the vision and goals of the University through his/her intellectual as well as managerial brilliance. அத்துடன் தேசத்தினுடைய தேவைகளை அடையாளம் கண்டு அதற்கு ஏற்ப முன்கூட்டியே உயர்கல்விக் கொள்கைகளை வகுக்கவும்

பலப்படுத்தவும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி போன்ற பல்கலைக்கழகத்தின் கல்வியியல் செயற்பாடுகளை கால வரையறை மதிப்பீடுகளுக்கு அமைய மேற்கொள்ள வேண்டும். - In addition, the Vice-Chancellor is called upon to identify needs of the nation in terms of national policies of higher education and should be able to strengthen the time tested values for the advancement of the University through academic activities including research & development.” என உபவேந்தருடைய கடமையும் பொறுப்பும் மேலும் விரிவாகத் தெளிவுபடுத்தப்பட்டு உள்ளது.

மேற்குறிப்பிட்ட கல்வியியல் முகாமைத்துவப் பொறுப்புக்களை நிறைவேற்றக்கூடிய ஒருவரையே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கைக் கல்விச் சமூகம் குறிப்பாக தமிழ் கல்விச் சமூகம் எப்போதும் எதிர்பார்க்கின்றது.

**யாழ் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் நிலை:**

ஆனால் துரதிஸ்ட்டவசமாக யாழ் பல்கலைக்கழகத்தில் கடந்த காலங்களில் உப வேந்தர் பதவிக்கு வந்தவர்கள் பல்கலைக்கழகத்தின் இலக்கான ‘தரமான உயர் கல்வியை வழங்கி பொதுவாக நாட்டுக்குரிய குறிப்பாக வடபகுதிக்குரிய தேவைசார்ந்த ஆய்வுகளை முன்னெடுத்து நாட்டுக்கு பணிசெய்ய வேண்டும்’ என்பதையோ அல்லது பல்கலைக்கழகத்தின் தொலைநோக்குப்பார்வையான ‘கற்பித்தல், கற்றல், ஆய்வு, நிபுணத்துவம் என்பனவற்றின் முன்னணி மையமாக விளங்குவது’ என்பதனையோ பூர்த்தி செய்யத் தவறியுள்ளனர்.

கல்வியியல் தகமை, நிர்வாகம், நிதிக் கையாள்கை என யாழ் பல்கலைக்கழகத்தின் பல்வேறு அம்சங்கள் மிகத் தாழ்நிலைக்குச் சென்றுள்ளன. இதற்குக் காரணம் இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் மட்டுமல்ல. தொண்ணூறுக்களின் நடுப்பகுதியின் பின் யாழ்ப்பாணத்தில் மட்டுப்படுத்தப்பட்ட யுத்தமே இடம்பெற்றது. தமிழ் சமூகத்தினை பாதுகாக்க வேண்டிய அதன் அறிவியல் கட்டமைப்புகளில் உள்ளவர்கள் அச்சமூகத்தின் சிந்தனைத் திறனைத் தாக்கி ஒட்டுமொத்த சமூகத்தையுமே சீரழிக்கின்ற ‘Tamillain-Barre’ Syndrome’ தான் யாழ் பல்கலைக்கழகத்தினை கீழ்நிலைக்கு இட்டுச்சென்றது என்பதனை முன்னைய கட்டுரையில் பார்த்துள்ளோம்.

மேலும், “யாழ் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் வெற்றிடங்களை

நிரப்புகின்ற போது முறைகேடான நியமனங்கள் இடம்பெற்றுள்ளது. பல ஆண்டுகளாக இதைச் சுட்டிக்காட்டிய போதும் இதனைச் சீர்செய்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை" என ஓடிற்றர் ஜெனரல் எஸ் சுவர்ணஜோதி தனது 2009ம் ஆண்டு ஓடிற் அறிக்கையில் குறிப்பிட்டதும் கவனிக்கத்தக்கது.

செப்ரம்பர் 09 2010ல் Firedrich Ebert Stifung என்ற ஜேர்மன் அமைப்பின் அனுசரணையில் இயங்கும் பருத்தித்துறை அபிவிருத்தி நிதியம், யாழ்ப்பாணத்தின் விவசாய மீன்பிடிப் பொருளாதாரத்தை அறிவியல் பொருளாதாரம் ஆக மாற்றுவது பற்றிய கலந்துரையாடலை யாழ்ப்பாணத்தில் நடாத்தியது. இதில் யாழ்ப்பாணத்தில் உள்ள கல்வியியலாளர்களும் மாணவர்களும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். அங்கு உரையாற்றுகையில் "அறிவு என்பது மற்றைய எல்லாத்துறைகளைக் காட்டிலும் செல்வத்தை உருவாக்கக் கூடியது" என்றார் ஆசிய பசிபிக் பகுதிகளுக்கான HSBC வங்கியின் மதிப்பீடு - அபாய முகாமையாளர் நிரஞ்சன் நடராஜா.

யாழ்ப்பாணத்தில் வடக்கில் இயற்கை வளம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், மூளைவளம் நிறையவே உள்ளதைச் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் குறிப்பிடுகையில், "ஸிபல்கலைக்கழகங்கள் சந்தைக்கு ஏற்ப கல்வியை வழங்கி பட்டதாரிகளை உருவாக்க வேண்டுமே ஒழிய, பல்கலைக்கழகங்கள் உருவாக்கும் பட்டதாரிகளை சந்தை உள்வாங்கிக் கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது" எனத் தெரிவித்தார்.

பல்கலைக்கழகம் என்பது பொருளாதாரச் சந்தையின் தேவையை மட்டும் பூர்த்தி செய்யும் ஒரு கல்வி நிறுவனமல்ல. பொருளாதாரச் சந்தையின் தேவையைப் பூர்த்தி செய்வது அதன் முக்கிய பாத்திரங்களில் ஒன்று. இல்லாவிட்டால் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்ற புள்ளிவிபரம் மட்டுமே மிஞ்சும்.

அதேசமயம் சமூகத்தின் பல்வேறு அம்சங்களையும் ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் சமூக இயக்கத்தில் - நாட்டின் இயக்கத்தில் பல்கலைக்கழகங்கள் காத்திரமான பங்களிப்பை மேற்கொள்கின்றன. இன்று அறிவியல் என்பது சமூகத்தின் நாட்டின் அனைத்து அம்சங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற விடயமாக உள்ளது. இந்த அறிவியலின் மையமாக பல்கலைக்கழகங்களே உள்ளன. அதனால்

பல்கலைக்கழகங்களின் முக்கியத்துவம் முன்னரைக் காட்டிலும் பல மடங்கு அதிகரித்து இருப்பதுடன் அதன் தேவை பரந்ததாகவும் உள்ளது.

பல நூற்றாண்டுகளுக்கு முன் சமூகம் எவ்வாறு இருந்தது என்ற வரலாற்றை ஆராய்வதுடன், அடுத்த சில 10 ஆண்டுகளில் சமூகம் எவ்வாறு மாற்றமடையும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொருளாதாரம், அரசியல் எனப் பல்வேறு அம்சங்களும் எவ்வாறான நகர்வை எடுக்கும், எவ்வாறான நகர்வை எடுக்க வேண்டும் என்பதை பல்கலைக்கழகங்களே ஆய்வு செய்து முடிவுகளை வழங்க வேண்டியுள்ளது. அதன் அடிப்படையில் அரசியலாளர்கள் முடிவுகளை மேற்கொள்கின்றனர். இவற்றுக்கான தலைமையை யாழ் பல்கலைக்கழகம் கொண்டிருக்கவில்லை என்பதற்கு கீழுள்ள மதிப்பீடு சாட்சியாகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 5000 மாணவர்கள் பட்டப்படிப்பையும் 600 மாணவர்கள் பட்டமேற்படிப்பையும் மேற்கொள்கின்றனர். பல்கலைக்கழக மாணவர்களைக் காட்டிலும் பல்கலைக்கழகம் செல்லாத மாணவர்களை தொழில் நிறுவனங்கள் கூடுதலாக விரும்புவதாக இலங்கையில் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் யாழ் பல்கலைக்கழகம் போன்ற பாரம்பரிய பல்கலைக்கழகங்களின் கல்வியியல் பலவீனங்கள், தலைமைத்துவம் அற்ற தன்மை, நிர்வாகச் சீர்கேடுகள் என்பன தனியார் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் வருகையைத் துரிதப்படுத்தும் நிலையும் இலங்கையில் ஏற்பட்டு வருகின்றது.



இலங்கையில் உள்ள 15 பல்கலைக்கழகங்களில் 2010 தர வரிசைப்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 10வது இடத்தில் உள்ளது. கொழும்பு பல்கலைக்கழகம் முதலாவது இடத்தில் உள்ளது. உலகத்தர வரிசையில் கொழும்புப் பல்கலைக்கழகம் 1903ம் இடத்தில் உள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 9309ம் இடத்தில் உள்ளது. (தகவல்: யூலை 2010: Rankings Web by the Cybermetrics Lab CSIC)

**யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கான தெரிவு:**

இந்த நிலையில் யாழ் பல்கலைக்கழகத்தின் வீழ்ச்சியின் வேகத்தை மறுபக்கம் திருப்புவதற்கான வாய்ப்புகள் ஆராயப்பட வேண்டும். அதற்கு யாழ் பல்கலைக்கழகத்தின் இலக்கையும் தொலைநோக்கு பார்வையையும் முன்னெடுத்துச் செல்லும் கல்வியியல் ஆளுமையும் முகாமைத்துவத் திறமையும் உடைய ஒருவர் உபவேந்தராக வருவது முக்கியமானது.

தற்போது யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவிக்கு கீழ் வருவோர் தங்களை முன்நிறுத்தி உள்ளதாகத் தெரியவருகின்றது. இக்கட்டுரை எழுதப்பட்ட போது இப்பட்டியல் பல்கலைக்கழகத்தால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

**யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள்:**

பேராசிரியர் என் சண்முகலிங்கன் - B.Ed.(Colombo), M.A.(Jaffna), Ph.D.(Jaffna) - Vice-Chancellor
பேராசிரியர் என் ஞானகுமரன் - B.A.(Kelaniya), M.A.(Jaffna), Ph.D.(India) - Dean/ Faculty of Arts
பேராசிரியர் எஸ் சத்தியசீலன் - B.A.(Peradeniya), M.A.(Jaffna), Ph.D.(Jaffna) - Dean/ Faculty of Graduate Studies
பேராசிரியர் (செல்வி) வசந்தி அரசரட்ணம் - Department of Bio Chemistry
சிரேஸ்ட விரிவுரையாளர் ஆள்வாப்பிள்ளை - Faculty of Agriculture
திரு தனேந்திரன் - Unuion Member with 2 A/L s

**யாழ் பல்கலைக்கழகத்தைச் சாராத விண்ணப்பதாரிகள்:**



பேராசிரியர் ரட்ன ஜீவன் ஃகூல் - D.Sc. (Eng.) London, Ph.D. Carnegie Mellon, IEEE Fellow, Chartered Engineer
ராஜரட்னம் - (இங்கிலாந்தில் இருந்து சென்றுள்ள பொறியியல் பட்டதாரி. மேலதிக விபரம் தெரியவில்லை.)

இவர்களில் இருந்து மூவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் விரைவில் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது. தெரிவு செய்யப்படும் மூவரில் ஒருவரை ஜனாதிபதி உப வேந்தராக நியமிப்பார். பல்கலைக்கழகத்தில் இம்மூவரில் ஒருவராகத் தெரிவு செய்யப்படாதவர் உபவேந்தராகத் தெரிவு செய்யப்படமாட்டார். பல்கலைக்கழகத்தில் உபவேந்தர் தெரிவுக்காக நடத்தப்படும் வாக்கெடுப்பில் பல்கலைக்கழக கவுன்சில் உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிக்கத் தகுதி உடையவர்கள்.

இப்பல்கலைக்கழகக் கவுன்சிலில் 12 உறுப்பினர்கள் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களாகவும் (12 + 1) 13 உறுப்பினர்கள் பல்கலைக்கழகத்திற்கு வெளியே இருந்து, சமூகப் பொறுப்புடையவர்கள் University Grand Commission ஆல் நியமிக்கப்படுவர். இந்தப் 13 பேரினதும் நியமனத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சம்மதம் இருந்துள்ளது.

மேலும் பல்கலைக்கழகத்தின் கவுன்சில் உறுப்பினர்களிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் செல்வாக்குண்டு.

ஒவ்வொரு கவுன்சில் உறுப்பினரும் மூன்று வெவ்வேறு வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும். ஒருவருக்கு மட்டும் வாக்களித்து மற்றையவர்களுக்கு வாக்களிக்காமல் விடுவதன் மூலம் விருப்பு வாக்கை அளிக்க முடியும்.

கடந்த காலங்களில் வேட்பாளருக்கும் வாக்களிக்கத் தகுதி இருந்தது. இம்முறை போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் உரிமையில்லை எனத் தெரியவருகின்றது.

**பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் கவுன்சில் உறுப்பினர்கள்:**

பேராசிரியர் என் சண்முகலிங்கம் - (Vice Chancellor),
பேராசிரியர் எஸ் சத்தியசீலன் - (Dean/Graduate Studies),
பேராசிரியர் கெ சிவபாலன் - (Dean/Medicine),
பேராசிரியர் கெ தேவராஜா - (Dean/Management & Commerce),
கலாநிதி திருமதி சிவச்சந்திரன் - (Dean/Agriculture),
பேராசிரியர் என் ஞானகுமரன் - (Dean/Arts),
பேராசிரியர் கந்தசாமி - (Dean/ Science),
பேராசிரியர் செல்வி வி அரசரட்ணம் - (Rep of Senate),
பேராசிரியர் கெ குகபாலன் - (Rep of Senate),
கலாநிதி மங்களேஸ்வரன் (Dean/Business Studies, Vavuniya Campus),
திரு எஸ் குகனேசன் (Dean/Applied Science, Vavuniya Campus),
திரு ஆர் நந்தகுமார் - (Rector/Vavuniya Campus)

University Grand Commission **ஆல் நியமிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தைச் சாராத கவுன்சில் உறுப்பினர்கள்:**

திரு கெ கணேஸ் (முன்னாள் யாழ் அரசாங்க அதிபர்.),
அருட்தந்தை கலாநிதி ஜஸ்ரின் பி ஞானப்பிரகாசம் (அடுத்த யாழ் பிஸப் ஆகக் கருதப்படுபவர்.),
திரு கெ கேசவன் (பிரபலமான சட்டத்தரணி - சென் பற்றிக்ஸ் பழைய மாணவர்.),
திரு ஏ திருமுருகன் (தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத் தலைவர், சைவ மற்றும் சமூக வேலைகளில் ஈடுபட்டு உள்ளவர்.),
திரு ஏ தியாகராஜா (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின்

இரசாயனப் பொறியியலாளராக இருந்தவர்.),

திரு ரி ராஜரட்ணம் (கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியின் உப அதிபராக இருந்தவர். பின்னர் SLIATE (Sri Lanka Institute for Advanced Technical Education) என்ற தொழில்நுட்பக் கல்லூரியை உருவாக்கியவர்.),

இன்ஜினியர் எம் ராமதாசன் (Euroville Engineers and Constructors (PVT) Ltd இன் முகாமைத்துவ இயக்குநர்.),

திருமதி என் குணபாலசிங்கம் (யாழ் பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை.),

திரு கெ தேவேந்திரன் (Jaffna Multi Purpose Cooperative Society - MPCS க்கு பொறுப்பானவர்.),

திருமதி சரோஜா சிவச்சந்திரன் (மிகவும் அறியப்பட்ட பெண்ணிலைவாதி. சர்வதேச அரங்குகளில் பேச்சாளராக அழைக்கப்பட்டவர். இலங்கைத் தேசிய சமாதான கவுன்சிலின் உறுப்பினர்.)

திரு எம் சிறிபதி (பாடசாலை அதிபர்),

சுசிலா சாரங்கபாணி (ஓய்வுபெற்ற ஆசிரியை. சமாதான நீதவான்),

டொக்டர் எஸ் ரவிராஜ் (யாழ் போதனா வைத்தியசாலை சிரேஸ்ட சத்திரசிகிச்சை மருத்துவர்)



**கல்வியியல் ஆளுமையினதும் முகாமைத்துவத் திறமையினதும் அடிப்படையில் உபவேந்தர் தெரிவு இடம்பெற வேண்டும்:**

யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் என் சண்முகலிங்கம் அங்கு நீண்டகாலம் பணியாற்றிய துறைத் தலைவர்கள் என் ஞானகுமரன், எஸ் சத்தியசீலன் ஆகியோர், யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் தெரிவுக்கு போட்டியிடுகின்றனர். இப் பல்கலைக்கழகத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டது போல் மிகச் சிறந்த முறையில் முன்னேற்றுவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு பல ஆண்டுகளாக இருந்தது. ஆனால் அவர்கள் முன்னேற்றுவதற்கு மாறாக பல்கலைக்கழகத்தினைச் சீரழிப்பதற்கே பல்வேறு வழிகளிலும் இதுவரைகாலமும் பங்கேற்று இருந்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து உபவேந்தர் பதவிக்குப் போட்டியிடுகின்ற பேராசிரியர்கள் பல்கலைக்கழகத்தின் துறைத் தலைவர்களாகவும் இருந்துள்ளனர். அவர்களுடைய பீடங்களின் நிலையும் மோசமானதாகவே இருந்துள்ளது.

இக்கட்டான காலகட்டத்தில் யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து கற்பித்தோம் என்ற தகுதி மட்டும் பல்கலைக்கழகத்தை சிறந்தமுறையில் முன்னேற்றப் போதுமானதல்ல. இந்த இக்கட்டான காலகட்டத்தில்

தங்களுக்கு இருந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இவர்கள் பெரும்பாலும் அதிகாரத் துஸ்பிரயோகமும் பாலியல் துஸ்பிரயோகமும் நிதி, நிர்வாகத் துஸ்பிரயோகமுமே செய்துள்ளனர். வடமாகாணத்தின் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கல்விநிலை இவ்வளவு கீழ்நிலைக்கு கொண்டு செல்லப்பட்டமைக்கு இவர்களுக்கு முக்கிய பொறுப்பு உண்டு.

கடந்த காலங்களில் இருந்த வாய்ப்பையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி யாழ் பல்கலைக்கழகத்தைச் சுற்றி இறுக்கமான தடுப்பை போட்டு, அப்பல்கலைக்கழகத்திலேயே படித்து, அங்கேயே பட்டம் பெற்று, அங்கேயே வேலையையும் பெற்று விடுகின்றனர். அதற்குள் வெளியே இருந்து யாரையும் அனுமதிக்க விடாப்பிடியாக மறுத்தே வருகின்றனர்.

வெளியார் நுழைந்தால் தங்கள் பலவீனங்கள் அம்பலமாகிவிடும் என்ற அச்சத்தில் உள்ளேயே சமரசம்செய்து உள்ளேயே நியமனங்களையும் மேற்கொள்கின்றனர். அதனால் யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து உப வேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளவர்களின் கல்வியியல் தகமையும் அனுபவமும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளன.



இவ்வாறான பலவீனங்களால், இப்பதவிக்காக இவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தயவை மட்டுமே நம்பித் தங்கள் விசுவாசத்தை அமைச்சருக்கு வெளிப்படுத்தி வருகின்றனர். இவர்களை அமைச்சர் தனக்கு விசுவாசமானவர்கள் என்ற அடிப்படையில், தனக்குக் கட்டுப்படக் கூடியவர்கள் என்ற அடிப்படையில் ஒரு தவறான தெரிவுக்கு செல்வது தமிழ்க் கல்விச் சமூகத்தின் எதிர்காலத்திற்கு செய்யப்படும் மிகப்பெரும் அநீதியாக அமையும்.

மேலும் பல்கலைக்கழகக் கவுன்சிலில் உள்ள 25 உறுப்பினர்களுக்கும் தமிழ்க்கல்விச்சமூகம்பற்றியமுக்கியபொறுப்புஉள்ளது.இந்தஉபவேந்தர் தெரிவுக்கு வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ள கவுன்சில் உறுப்பினர்களில் 12 பேர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்வியியலாளர்களாகவும் 13 பேர் சமூகப் பொறுப்புடையவர்களாகவும் உள்ளனர். சமயத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், சமூகத்தின் முக்கிய பதவிகளில் உள்ளவர்கள், பெண்ணிலைவாதி என பன்முகத்தன்மையினதாக இந்தப் பல்கலைக்கழகக் கவுன்சில் உள்ளது. இவ்வாறான மதிப்புக்குரிய மிக உயர்ந்த பொறுப்புடையவர்களினால் தெரிவு செய்யப்படும் பல்கலைக்கழக உபவேந்தர் அந்த மதிப்பையும் பொறுப்புணர்வையும் பிரதிபலிக்க வேண்டும்.

**அறியப்பட்ட பேய்களும் அறியக் கூடிய தேவதைகளும்:**

கடந்த 30 ஆண்டுகால யுத்தத்தில் சீரழிந்துள்ள சமூகத்திற்கு எஞ்சியுள்ள ஒரே நம்பிக்கை கல்வி. தமிழ் மக்களுக்கு அந்தக் கல்வியை வழங்குகின்ற உயர்ந்த ஸ்தாபனமான யாழ்பாணப் பல்கலைக்கழகம் கல்விச் சமூகத்திற்கு முன்னுதாரணமாக, தலைமை ஸ்தாபனமாக விளங்க வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் உள்ள ஒருவரையே மீண்டும் உப வேந்தர் ஆக்க வேண்டும் என்ற நோக்கில் "Known devil is better than unknown angel" போன்ற பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒருவகையில் இந்த கவுன்சில் உறுப்பினர்களே யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து உப வேந்தர் பதவிக்கு நிற்பவர்களை 'அறியப்பட்ட பேய்கள்' என ஏற்றுக்கொள்கின்றனர்.

இன்று இணைய வலையில் உலகம் மிகவும் சுருங்கிவிட்டது. உலகின் ஒரு மூலையில் இருந்து கொண்டு மறுமூலையில் உள்ள ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியரைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இணையமும் தொலைபேசியும் சரியான தொடர்புகளும் போதுமானது. அதனால் நீங்கள் அறிய விரும்பினால், 'அறியாத தேவதைகள்' என்பதற்கு இடமில்லை. அகவே 'அறியப்பட்ட பேய்கள்' என நீங்கள் அடையாளம் கண்டவர்களை - தமிழ் மக்கள் அடையாளம் கண்டவர்களை முற்றாக நிராகரியுங்கள்.

'அறியப்பட்ட பேய்கள்' ஆக அடையாளம் காணப்பட்டவர்கள் தெரிவுசெய்யப்படுவது பல்கலைக்கழகக் கவுன்சிலின் மதிப்பீட்டை வெகுவாகப் பாதிக்கும். சமயத் தலைவர்களும் பெண்ணிலை வாதியும், பாடசாலை அதிபர்களும், கல்வியியல் மேதைகளும், உயர் பதவியில் உள்ளவர்களும் இணைந்து இதுவரை பல்கலைக்கழகத்தைச் சீரழித்தவர்களை, பாலியல் துஸ்பிரயோகங்களுக்காக அறியப்பட்டவர்களை, உரிய கல்வித் தகமை அற்றவர்களை, நிர்வாகத்திறன் அற்றவர்களை உப வேந்தராக வர அனுமதிப்பது ஒரு போதும் நியாயப்படுத்தப்பட முடியாது. இது தமிழ் கல்விச் சமூகத்திற்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும். அதற்கு யாழ் பல்கலைக்கழகக் கவுன்சில் காரணமாக இருக்கக் கூடாது.

உப வேந்தருக்காக போட்டியிடுபவர்கள் கவுன்சில் உறுப்பினர்களின் நீண்ட கால நண்பர்களாக இருக்கலாம். நெருக்கமானவர்களாக இருக்கலாம். ஆனால் உங்களின் தெரிவு தமிழ்க் கல்விச் சமூகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற தெரிவு. அதனால் நட்புக்கும்

நெருக்கத்திற்கும் அங்கு இடம்கொடாமல் தெரிவு செய்யப்படுபவர் பல்கலைக்கழகக் கவுன்சிலின் மதிப்பையும் கௌரவத்தையும் நிலைநிறுத்துபவராக இருக்க வேண்டும்.

**அமைச்சர் தேவானந்தாவின் பொறுப்பு:**

தமிழ்க் கல்விச் சமூகத்தின் எதிர்பார்ப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பிரதிபலிக்க வேண்டும். அவ்வாறு தமிழ்க் கல்விச் சமூகத்தின் எதிர்பார்ப்பை யாழப்பாணப் பல்கலைக்கழகம் பிரதிபலிக்காமையாலேயே யாழ் பல்கலைக்கழகம் தொடர்பான விவாதம் பொதுத்தளத்திற்கு வந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கான தெரிவு பற்றிய விவாதம் இதுவரை இவ்வாறான ஒரு பொதுத் தளத்திற்கு வரவில்லை. இம்முறையே இது பரந்த பொதுத்தளத்திற்குக் கொண்டுவரப்பட்டு உள்ளது. எதிர்காலத்தில் இனிமேல் ஒரு மூடிய சமூகமாக யாழ் பல்கலைக்கழகம் இருக்க முடியாது என்பதையே இது காட்டி நிற்கின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்குறிப்பிட்டது போல், "யாழ் பல்கலைக்கழகத்தை மிகச் சிறந்த முறையில் முன்னேற்ற வேண்டும்"என்று அவர் விரும்பினால் அதனைச் சாதிக்கக் கூடிய, பல்கலைக்கழகத்தின் இலக்கையும் தொலைநோக்குப் பார்வையையும் முன்னெடுத்துச் செல்லக்கூடிய பரந்த கல்வியியல் தகைமையும் இலங்கையிலும் சர்வதேச பல்கலைக்கழகங்களிலும் பணியாற்றிய அனுபவமும் ஆளுமையும் உடைய ஒருவரே அப்பொறுப்பான பதவிக்குக் கொண்டு வரப்படவேண்டும்.

கல்வியை முன்னிலைப்படுத்தி தமிழ் மக்களின் விடுதலைக்காய் போராட ஆரம்பித்த அமைச்சரின் கைகளில் தற்போது அம்மக்களின் கல்வியின் எதிர்காலத்தைப் பற்றி முடிவெடுக்கின்ற முக்கிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அதற்குத் தகுதியானவர் யார் என்பதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவிற்கு மிக நன்றாகவே தெரியும். இந்தத் தெரிவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்த 'கல்வித் தகமையினதும் நிர்வாகத் திறனினதும் அடிப்படையில்' மிகப்பொறுப்புடன் எடுப்பார் என்று தமிழ் மக்களின் கல்வியின்பால் அக்கறை கொண்டுள்ள நலன்விரும்பிகள் எதிர்பார்க்கின்றனர்.

# அணிந்துரை : கட்டுரைகள் தொடர்பாக வாசகரகள் வெளியிட்ட கருத்துக்கள்.



As a person who was attached to the Univeristy of Jaffna for more than 13 years, I realise that you (T Jeyabalan) are raising an important issue here.
Dr. Siddeek Yoosuf, London.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமையவேண்டுமென்பதில் மிகத் தீவீரமாக செயற்பட்டவர் கைலாசபதி என்ற ஜெயபாலனின் கூற்று முற்றிலும் உண்மையே! இதை அன்றைய சூழலில் வைத்து மதிப்பிட வேண்டும். இந்து - தமிழ் பல்கலைக்கழகம் என தமிழ்த் தேசியம் அடிபட, அதற்குள் இப்பல்கலைக்கழகம் அமைய தீவிரமாக செயற்பட்டவர் கைலாசபதி! இதற்காக அவர் வீட்டிற்கு கைக்குண்டும் வீசப்பட்டது!
ஆதவ்

There is no doubt criminals using the power as means of expoliting power for their personal interest should be punished whether in University or anywhere in a

society. Not only Jaffna University but also School children also face similar fate particularly after end of war. Abductions, ransom, murders, drug use etc have become norm in Jaffna.

Ajith

ஜெயபாலன் அவர்களுக்கு நன்றிகள்! பல வியடங்களைத்தேடி நீண்ட கட்டுரையாக எழுதியுள்ளீர்கள்.

அரபாத்

நீண்ட கட்டுரை. தகவல்களுக்கு நன்றி ஜெயபாலன். ஒரு அறியப்பட்ட பாலியல் குற்றவாளி இலங்கையில் உள்ள சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி இன்னமும் அதே பல்கலைக்கழகத்தில் தனது பணியைத் தொடர்கின்றார். ஆனால் பாதிக்கப்பட்ட அந்தக் குழந்தைத் தொழிலாளி உயிருடன் உள்ளாரா இல்லையா என்பதே தெரியவில்லை.

தீபா

கட்டுரையாளரின் நியாயங்கள் புரிகிறது. விமலேஸ்வரின் படுகொலை! இது ஒரு பல்கலைக்கழக மாணவனின் படுகொலை மட்டுமல்ல! ஒர் அரசியற் படுகொலை!!



ப்பிரசன்னா

எனக்கு தெரிந்திராத தகவல்கள் இக்கட்டுரை முலம் அறிந்தேன் நன்றி. கொடுமைக்கு உள்ளாக்கபட்ட அந்த பெண் யோகேஸ்வரி காணாமல் போனது வலிக்கிறது.

பிசி

Well written article. However, as a reader, my opinion is the topic "விரிவுரையாளர் பொங்கு தமிழ் கணேசலிங்கத்தின் மீது பாலியல் குற்ற வழக்கு" is not good / unnecessary for this article.

Varathan

36 வருடங்களாக இயங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சீர்கேடுகள் அது ஆரம்பிக்கப்பட்ட நாள் முதற்கொண்டே இருந்து வருகின்றன. அவை பற்றி இதுவரை காலமும் கண்டுகொள்ளாத தேசம்நெற் இன்று திடீரென Hoole என்னும் அவதார புருஸர் வந்து நீர் மேல் நடந்து செல்லும் அற்புதம் செய்யப் போகிறார் என்பதன் பின்னணி என்ன?

Hoole (மறுபடியும்) பதவியேற்கும் போது முன்னர் இருந்த எதிர்ப்பு

இருக்கக்கூடாது என்பதற்கான பிரச்சாரமாகத் தான் இக்கட்டுரை எழுதப்பட்டதா?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அது இயங்கும் சமூகத்தின் இயல்பையே பிரதிபலிக்கிறது. ஊரவர்களுக்கும், உறவினர்களுக்கும் நியமனம் தொடக்கம் அது கொண்டுள்ள அவலங்கள் ஏராளம்.

ஒரு துணை வேந்தரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் மட்டுமே. 36 வருடங்களாக பாழடிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தை மூன்று ஆண்டுகளில் பேராசிரியர் Hoole சீர்செய்து விடுவார் என்று நீங்கள் திட்டமிட்டுப் பிரசாரம் செய்வது அவர் நீர் மேல் நடக்கும் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டப் போகிறார் என்பது போல் தோன்றவில்லையா?
ராபின் மெய்யன்

I don't know anything about Jaffna university, but I spent in my life ten years in Madras university. Everybody knows, Madras university was called "Mudaliyar university"!. The same connotation was applicable for Jaffna university, I think!. What is the difference between Indian Tamils and "Srilankan Tamils" in this context!.



IF WE BLAME ANY "CASTE" FOR ANY FAILURE, IT WILL BOOMERANG ON THE WHOLE CASTE SYSTEM - THAT IS IT's SPECIALITY!.
DEMOCRACY

யாழ் பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை எந்தத் தமிழ் சூரனும் முன்வைக்கவில்லை. தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களுக்கு அநீதி தனது அரசினால் உண்டாக்கப்பட்டது என்ற பிரச்சனையால் பாதிக்கப்பட்ட அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் மனதில் உருவாக்கம் பெற்றதே யாழ் பல்கலைக் கழகம். அதனை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் ஆதரித்தனர். அமிர்தலிங்கம் – செல்வநாயகம் ஆட்கள் கறுப்பு கொடி காட்டி பல்கலைக்கழக திறப்பு விழாவை எதிர்த்தனர்.

பின்னர் அதே பல்கலைகழகத்தில் உத்தியோகம் பெற பின் கதவால் முண்டியடித்தவர்களும் அதே எதிர்ப்பாளர்களே ஆகும். அதனாலேயே பின்னாளில் குதிரை கஜேந்திரன் போன்றவர்கள் பல்கலைக்கழக வளவில் அரச செலவில் உண்டு உறங்கி அரசுக்கெதிரான பிரச்சாரங்களை செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

நம்முடைய கலாநிதிகள் பல 'கல்லா நிதி'களை 'கலாநிதி' களாக்கினர். பேராசிரியருக்கு திருநெல்வேலி சந்தையில் முருங்கைக்காய் வாங்கிக் கொடுத்த

பலர் விசேட சித்திகளைப் பெற்றனர்.

விஜிதரன் கடத்தப்பட்ட நிகழ்வின் போது அங்கு வேலை செய்யும் ஒரு உதவி விரிவுரையாளர் புலிகளின் கிட்டுவை 'WELCOME GENERAL' என்று அழைத்த காட்சி தமிழர்களின் 'அறிவு'பற்றி கதைக்கும் பல செம்மல்களையே முகம் சுளிக்க வைத்தது.

தமிழனுக்கு நிர்வாகம் பற்றிய அறிவு பூச்சியம் என்பதற்கு மிகப் பொருத்தமான உதாரணம் யாழ் பல்கலைக்கழகம்.
நந்தா

ஜெயபாலனால் விளங்கப்படுத்தப்பட்டுள்ள யாழ் பல்கலையின் 36 ஆண்டு கால சரிதத்துக்கு 'இலங்கைத் தமிழ் சமூகத்தின் 36 வருடத் தொடர் சீர்குலைவு அல்லது கல்விப் பின்னடைவு' என்னும் தலைப்பே சாலப் பொருத்தமாக இருக்கும்.
யாழ் பல்கலை மட்டும் தான் கொள்கையற்ற சீர்குலைந்த பாதையில் செல்லும் உயர்கல்வி நிறுவனமல்ல. கிழக்கில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழகமும் குழறுபடிகளில் யாழ் பல்கலைக்கு எந்தவிதத்திலும் சளைத்தது அல்ல! யாழ் பல்கலையில் இருந்து புறப்பட்டவர்களினால் சீர்குலைக்கப்பட்ட நிறுவனமே கிழக்குப் பல்கலைக்கழகம்.



அதே போல் யாழ் பல்கலையின் உபகிளையான (வவுனியாவில் கடந்த 13 ஆண்டுகளாக இயங்குகின்ற) வவுனியா வளாகம் என்பது – இலங்கைத் தமிழ் சமூகத்தின் தொடர்ச்சியான பின்னேற்றத்துக்கு உயர் சைவ வேளாண்குலத்தை சேர்ந்த படித்த கல்விமான்கள் என்பவர்கள் எப்படியெப்படியான தாக்கங்களை விளைவித்தனர / விளைவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஜெயபாலனால் முன்வைக்கப்பட்ட வாதத்துக்கு மேலும் வலுவூட்டுவதாகவே இந்த விவாதமேடையின் போக்கிருக்கின்றது என்பதனை மீண்டும் வலியுறுத்துவதுடன், 'யாழ் பல்கலையானது தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதான சமூகத்தின் நிகர குறைபாடுகளையும், பலவீனங்களையும் மட்டுமே பிரதிபலிப்பதினாலும் சமூகத்திலுள்ள முன்னேற்றத்துக்கான பலங்களையும் சாதகமான காரணிகளையும் அடையாளம் கண்டு அதனைத் தனது செயற்பாடுகளில் உள்வாங்கத் தவறியதாலும் 'இலங்கைத் தமிழ் சமூகத்தின் வழிமுறையான சிதைவுக்கு வழிசமைக்கின்றது' என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.
ராஜதுரை

வரலாற்றில் மிகவும் பெறுமதிமிக்க ஆவணங்களாக இன்று விளங்கும், போராட்ட

செல் நெறிமுறைகளையும் தவறுகளையும் கேள்விக்குட்படுத்தி மக்கள் மேல் இழைக்கப்பட்ட கொடுமைகளையும் ஆவணப்படுத்தி அவற்றை யார் எவர் செய்தார்களோ அவர்களை நோக்கி விமர்சனம் செய்து வெளியிடப்பட்ட வெளியீடுகளின் ஆக்கதாரர்களான மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் பங்கை இங்கு புறக்கணித்திருப்பதானது இக்கட்டுரையின் பிரதான நோக்கம் வேறானது என்பதை புரிய வைக்கின்றது. யாரையோ இருட்டடிப்பு செய்வதற்காக பல்கலைக்கழகத்தையே இருட்டாக்கி காட்டப்பட்டிருக்கின்றது.
தமிழரங்கம்

யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் சில முக்கிய திரும்பல் புள்ளிகளைக் குறிப்பிட வேண்டும்.

1. கைலாசபதியின் தமிழர் கூட்டணிக்கு எதிரான போக்கு.
2. 77 இனப்படுகொலையின் போதான சிங்கள மாணவர்களின் வெளியேற்றம்.
3. 83 இல் இடம்பெயர்ந்த மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டமும் அதனைத் தொடர்ந்த எழுச்சிகளும்.
4. விஜிதரன் கடத்தப்பட்டதற்கான போராட்டம்.
5. இந்திய இராணுவ ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டம்
6. ரஜினி திரணகம, சிறீதரன், ராஜன் Hoole , வசந்தா வீரகத்தி, ராஜ்மோகன் போன்றோரின் மனித உரிமைச் செயற்பாடுகள் அளப்பரியவை.



இந்திய இராணுவம் வெளியேறிய பின்னர், பல்கலைக்கழகம் புலிகளின் ஆதரவுத் தளமாக மாறியிருந்தது. ஆக, பல்கலைக் கழகம் என்ற வரம்புக்குள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பங்கு கோடிட்டுக்காட்டத் தக்கது.
சபா நாவலன்

I think that a good example is the best sermon. University students say that the one-student policy has resulted in selfish student. I think that it may be that selfish community produce selfish university students. It's true that we don't know what we've got until it's gone, but it's also true that we don't know what we've been missing until it arrives.

My view is the best article! Well done Jeyabalan.
Kumaran.

பல்கலைக்கழகம் என்றுமே! பல்கலைக்கழகம் தான். அது ஒரு போதும் பள்ளியாவதில்லை. பள்ளியிலிருந்து வந்தவர்கள் ஆயுதமுனையில் பல்கலைக்கழகத்தை கட்டுப்படுத்தும்போது அது பள்ளியின் தரத்திற்கு கீழ்

இறங்கியதில் வியப்பேதும் இல்லை. மாணவ மாணவிகள் போராட்டத்தை ஆயுததாரிகள் குலைப்பு நடவடிக்கையில் ஈடுபடும் போது பேராசிரியர்கள் தான் என்னசெய்ய முடியும்? அதற்கு பல்கலைக்கழகம் தான் பொறுப்பேற்க முடியுமா?
சந்திரன் ராஜா

பல வாரங்களுக்கு முன் ஊடகவியலாளர் திரு. ஜெயபாலனினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சமூகமாற்றமும் யாழ் பல்கலைக்கழகமும் சம்பந்தமான விவாதஅரங்கும் அதை தொடர்ந்து வந்த பேராசிரியர் ஃகூல் அவர்களின் பேட்டியும் ஆரோக்கியமான பல கருத்துகளை தாங்கிவந்த போதிலும் அவை ஒரு அடிப்படை கேள்வியில் கவனம் செலுத்தவில்லை என்றே தெரிகிறது.

அதாவது சமூக மாற்றத்திற்கு பல்கலைக்கழகம் தானா அடிப்படை என்ற கேள்வியே அதுவாகும். சமூகமாற்றம் என்பது அடி மட்டதில் இருந்து பிறக்க ஆயத்தங்கள் செய்யாமல், ஒன்றல்ல பத்து ஏன் நூறு பேராசிரியர்கள் வந்தாலும் யாழ் பல்கலைக்கழகம் அதன் நிலையில் இருந்து மாற்றமடையாது என்பது என் நிலைப்பாடு.
நிஸ்தார் மொகமட் (சட்டத்தரணி), லண்டன்.

92 I have been following this forum since 1st of July when T. Jeyapalan published his article on Thesamnet.

I wish to congratulate Jeyapalan for his social responsibility and vision towards and effort for gearing up the University of Jaffna (UoJ) as a icon for Sri Lankan Tamils. As Jeyapalan has pointed out, this forum is for the most important stakeholders of the UoJ - 'the common people' to share their constructive ideas to develop this university. The UoJ is the property of the Tamil Public! The forum has unanimously agreed that the UoJ is corrupted and is at the moment, nearing its doom's day.
Yalpanan

'...கடந்த 36 வருடங்களாக யாழ்-சைவ-வேளாள-ஆண் ஒருவரே பதவியில் இருந்துள்ளார்.' என்று கட்டுரையாளர் குற்றம்சாட்டுகிறார். யாழ்ப்பாணத்தில் (இலங்கைத் தமிழரில்) பெரும்பான்மையானவர்கள் சைவ வேளாளர்கள். மேலும் உயர் கல்வி கற்றவர்களில் பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு தகுதியுள்ளவர்களில் பெண்கள் இருக்கவில்லை. காரணம் 50, 60 வருடங்களின் முன்னர் பெண்கள் கல்வி என்பது அவ்வளவு இல்லை, சிங்கள முஸ்லிம்களிடையே அது மிகக்குறைவு. எனவே உங்கள் குற்றச்சாட்டு தவறானது. இல்லை எனில் யாழ்

பல்கலைக்கழக உபவேந்தராக நியமிக்கத் தகுதி பெற்றிருந்தும் நிராகரிக்கப்பட்ட சைவவேளாளரல்லாத பெண்கள் பெயர்களைச் சொல்லுங்கள்.
சாந்தன்

**I don't know why Jeyabalan is entertaining religious identity here. Since, as you know that; the religion is the opium for a society. I kindly request any body who come to the Chair refrain form their religious identity.**
Aaivu

"...முதல் துணைவேந்தராக நியமிக்கப்பட்டதும் அதை ஒரு தலைசிறந்த ஆய்வுப் பல்கலைக் கழகமாக வளர்க்கத் திட்டமிட்டார்."

"...அப் பல்கலைக் கழகம் ஆய்வுப் பல்கலைக் கழகமாக, உலகளாவிய நிலையில் ஒரு சிறந்த பல்கலைக் கழகமாக விளங்க, ஆய்வாளர்களிடமும் அறிஞர்களிடமும் ஒழுக்கம், நேர்மை, தீராத அறிவுத் தேடல், கடப்பாடுடைய உழைப்பு ஆகியவற்றை எதிர்பார்த்தார். அத்தகைய பண்புகளைக் கொண்டிராதவர்கள் எனத் தான் கருதியவர்களைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேற்றினார்."



"...தனது ராஜினாமாக் கடிதத்தை முகவரியிட்டுக் கைவசம் வைத்திருந்தார். தன் செயல்பாடுகள் பிடிக்கவில்லையென எவர் ஒருவர் எண்ணினாலும் அக்கடிதத்தை தேதியிட்டு தபாலில் சேர்க்கத் தயாராக இருந்தார். தான் வரும்போது அலுவலர்கள் எழுந்து நிற்கக் கூடாது, அவரவர் பணியைக் கவனிக்க வேண்டும் என்பது போன்ற பல்வேறு முன்மாதிரியான நடைமுறைகளைச் செயற்படுத்திய ஆளுமை அவருக்குண்டு.. "
தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர் அறிஞர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் மறைந்தபோது காலச்சுவடு இதழில் ( இதழ் 116) வெளியான கட்டுரையிலிருந்து.)
கரவை ஜெயம்

கல்வி என்பதே பகுத்தறிவுதானே, ஆனால் கல்வியின் மகுடமான பல்கலைகளகத்திலுமா இப்படி. 1980களுக்கு முன்பு கல்வி கூட சில சமூகத்துக்கு மட்டுமே தலை சாய்த்தது என்பது மறுக்கமுடியாத உன்மை. அது பின்பும் கூட சமூக அந்தஸ்து பற்றி ஆளுக்காள் பேசியதால் கல்வி பற்றி கவனிக்க தவறியதும் உன்மைதான். கல்வி சார்ந்த போராட்டம் என்றாலும் சரி சமூக போராட்டமானாலும் சரி எதுவுமே மக்கள் சார்ந்து இல்லாமல் போராட்ட நாயகர்கள் சார்ந்து இருந்ததால் அனைத்தும் தோல்வி கண்டன.
பல்லி

ஜெயபாலனுக்கு முதற்கண் எனது நன்றிகள். பல்கலைக்கழகம் ஒரு அறிவியல் கூடமாக இருக்க வேண்டும். அது மக்களின் கல்விப் பொக்கிஸமாக இருக்க வேண்டும். சமுதாயத்துக்கு வழிகாட்டும் அறிவியல் கூடமாக இருக்க வேண்டும். இந்தத் தராதரங்கள் அனைத்தையும் யாழ் பல்கலைக்கழகம் இழந்துவிட்டது. அது புத்திஜீவிகள் எனத் தம்மைத்தாமே நாமகரணம் சூட்டிக்கொண்டுள்ள ஒரு சில தனிமனிதர்களின் தர்பாராகியுள்ளது. அரைகுறைகளின் இந்தச் சாம்ராஜ்யத்தில் எங்கே புத்தியுள்ளவன் வந்து குழப்பம் விளைவித்து விடுவானோ என்ற அச்சத்தில், அறிவுள்ளவர்கள் எவரையும் அடுக்காமல் இருந்துவரும் ஒரு இடம் அது.

இந்த நிலை, தமிழ் சமூகத்துக்குச் சாபக்கேடு. அதை மாற்றியே ஆகவேண்டும். யாழ் பல்கலைக்கழகம் ஒரு சிலரின் தனிச்சொத்தல்ல. அது சமூகத்தின் அறிவியல் சொத்து. அதை ஒருசிலர் சூறையாட இனியும் அனுமதிக்க முடியாது.
கெ ரூசாகன்

இத்தகைய ஒரு அலசலும் விவாதமும் கண்டிப்பாக அவசியம். இதனைச் செய்யும் போது நாங்கள் எங்கள் கருத்துக்களை மீளாய்வு செய்யவும் பொது நியாயத்தை ஏற்றுக் கொள்ளவும் தயாராக்கிக் கொள்வதும் அவசியம்.
கமலி



எமது சமூகம் சின்னாபின்னமாகித் தான் போயுள்ளது. சாதியை ஒழிக்கவென்று சபதமிட்டுக்கொண்டு களத்தில் குதித்தவர்களே – சாதியின் அடிப்படையில் தமது செயற்பாடுகளை நிரற்படுத்த, மேலும் மேலும் சாதியும், மூடத்தனமும், மூர்க்கமும், சுயநலமும், கயமையும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்ததான நாசகார வலைக்குள் தமிழ் சமூகம் நிரந்தரமாகவே விழுத்தப்பட்டுள்ளது.

இப்படியான நாசகார வலைக்கு அதி சிறந்த உதாரணம்தான் யாழ் பல்கலைக்கழகம்!
தேவராசா

Actually, this deteriorating situation should be handled by the students, but unfortunately students will not interfere in this matter. The reason is Honorable Minister Doglus Devantha, i.e., students are very much concerned about their personal security not about the social security, institutional benefits etc.,
Kanthan

பொறுப்புணர்வுடனும் துணிவுடனும் எழுதப்பட்ட மிகச்சிறப்பான கட்டுரை. பாராட்டுக்கள் ஜெயபாலன். ஜனநாயகத்தின் நான்கு காவலர்களில்

பத்திரிகையாளர்களும் ஒருவராவர் என்பதை நிரூபிக்கும் கட்டுரைக்கு நல்ல உதாரணமாகக் கொள்ளக்கூடிய கட்டுரை இது.
நட்சத்திரன் செவ்விந்தியன்

சமுதாயத்தில் முன்மாதிரியாக இருப்பவர்களும் சமுதாயத்திற்குப் பாரிய பொறுப்பேற்றிருக்கிற பல்கலைக்கழகமும் நேர்மையாகவும் ஊழல்கள் அற்றவர்களாகவும் இருத்தல் வேண்டுமென்று சமுதாயம் எதிர்பார்ப்பதை இவர்கள் ஏற்றுத்தான் ஆகவேண்டும். யாழ் பல்கலைக்கழகம் தனது பாதையில் இருந்து விலகி பலகாலமாகி விட்டது. இதை இனி தூக்கி சரியான தண்டவாளத்தில் வைக்க வேண்டியது எல்லோருடைய பொறுப்புமாகும்.
ஜெயராஜ்

Fundamentally the article is Jeyabalan's second appreciable product in the series of articles appear in the tamil elctronic media in the recent past. This article's only objective seems to attack the trio of the University.
Chandru V

அருமையான கட்டுரை ஜெயபாலன். உண்மையில் தமிழ் கல்விச்சமூகமே வெட்கப்பட்டு அழவேண்டிய நிலை. 30 வருட போர் அழித்ததை 3 வருடங்களில் கலாச்சாரம் அழித்து தமிழனின் வாழ்வே மண்ணோடு போய்விடும் நிலை. இதற்கு அரசோ புலியோ காரணம் என்பதை விட தமிழனே சக தமிழனை அழிப்பதை பார்த்து சாட்சிசொல்ல வேண்டிய நிலை. எந்தவிதமான பாரபட்சமும் இன்றி தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்
நாதன்

சைவ வேளாண் ஆணாதிக்கத்துவம் மற்றும் பாலியல் துஸ்பிரயோகம் போன்ற வகையறாக்களை இந்த விவாத மன்றம் நிறையவே அலசி ஆராய்ந்து விட்டது. ஆனால், இது மட்டும் தான் தமிழ் சமூகத்தில் உள்ள ஒரே ஒரு புற்று நோய் என்று கொள்ளுதல் முடியாது.

மேற்படி அழிவு மனித உரிமை மீறல் செயற்பாடுகளை தாராளமாகக் கட்டவிழ்த்து விட்டு பதவி மற்றும் அதிகாரங்களின் பின்னால் மறைந்து நின்று குளிர்காயும் இத்தியாதிகள் ஏன் இந்தக் கல்விச் சமூகத்தினுள் நுழைந்தார்கள் என்பதனை சற்று உசாவியறிதல் நலம்.

உண்மையான தேடலும், ஆக்கபூர்வமான கருத்தியல்வாதமும், நெஞ்சுரமும் கொண்ட ஒரு கல்வியாளர் சமூகம் ஏன் யாழ் மண்ணில் வேரூன்றி வளர

முடியவில்லை?

சமூக விரோதிகளை கல்விமான்கள் என்று போற்றி, கைகட்டி வாய்பொத்தி நின்று சலாம் போடும் சாதாரண பாமரர்களுக்கு விடிவுதான் எப்போது? மேற்படி கேள்விகளுக்கு எவராவது விடை சொல்வார்களா?
அனுஷா பி

இந்த விவாதத்தில் பல்கலைகழகத்தில் நடைபெறும் பாலியல் வன்முறைகளை சாதாரண பாலியல் நடத்தையாக சிலர் இங்கு வர்ணிகின்றனர். இது தவறான பார்வை. பதவியையும், அதிகாரத்தையும் பாவித்து பாலுறவுக்கு உடன்படவைப்பது பாலியல் வன்முறையாகும். இங்கு இந்த விவாதத்தில் ஆணாதிக்க சிந்தனை தாராளமாக கொடி கட்டிப் பறக்கிறது!!
ஸ்ரீ வைஸ்ணவி

தேசம் கட்டுரையைப் படித்தபின் டக்ளஸைத் தொடர்பு கொள்ளப் பல தடவைகள் முயற்சித்தும் பலன் கிடைக்கவில்லை. நீண்டகால அனுபவமும் அரசியல் முதிர்ச்சியுமுள்ள டக்ளஸ் இப்படியான பட்டங்களுக்கு அப்பாற்பட்டவர் என்றுதான் பலர் நினைக்கிறார்கள். யார் பட்டம் கொடுக்கிறார்கள் என்பதில் அந்தப் பட்டத்தின் கண்ணியம், பெருமை, கௌரவம் பிரதிபலிக்கிறது.

மன்மத மகாராசாக்கள், பிராந்திய வெறிபிடித்தவர்கள், பதவிக்கு யார் காலிலும் விழும் முதுகெலும்பற்றவர்கள் சேர்ந்து கொடுக்கும் கௌரவ காலாநிதி (??????) பட்டத்தில் தன் சுய மரியாதையைக் காற்றில் பறக்கவிடவேண்டியதை விட மிகவும் முக்கியமான சமுதாயக் கடமைகளைத் தமிழ் மக்கள் டக்ளஸிடம் எதிர்பார்க்கிறார்கள். இன்று தமிழ்ப் பகுதிகளில் பொதுவேலை செய்யும் உத்தியோகத்தர்களின் ஊழல்வேலைகளால் தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சியே ஊனமாகவிருக்கிறது.

இதை நிவர்த்தி செய்யும் ஆற்றல் டக்ளசுக்கு உண்டு என்று ஒரு சாதாரண தமிழன் எதிர்பார்க்கிறான். ஊழல் நிறைந்தவர்கள் கொடுக்கும் எந்த விருதிலும் எந்த மதிப்பும் கிடைக்காது.
ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் (எழுத்தாளர், மனித உரிமைவாதி) லண்டன்

கட்டுரையாளர் ஜெயபாலன் தொடக்கம் பதிவுகளிட்ட அன்பர்கள் அனைவரும் தாம் சார்ந்த சமூகத்தின் மீதான அக்கறை காரணமாகவே இதனைச் செய்கிறார்கள் என்பதும் தனிப்பட்ட விருப்பு அல்லது சில நபர்கள் மீதான காழ்ப்புணர்வு காரணமாக இதனை செய்யவில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மைகள்.

ஆனாலும் இந்தக் கட்டுரை மற்றும் பின்னூட்டங்களினூடாக நாம் சில சமூக ஆய்வுப் பொருள்களையும் இனம் காண வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இன்று பரவலாகக் காணப்படுவதாக நாம் உணரும் இப் (பாதகப்) போக்குகள் இன்று மட்டுமா உருவாகின? தமிழ் சமூகத்தின் மிகப் பெரும் கல்வித்தூண்களாகக் கருதப்பட்ட கைலாசபதி, வித்தியானந்தன், இந்திரபாலா, சிவத்தம்பி ஆகியோர் கோலோச்சிய காலங்களிலும் இந்த நிலைமைகள் காணப்பட்டன என்பதை மறுக்க முடியாது.

பேராசிரியர் துரைராஜா இயக்க உறுப்பினர்களை பல்கலைக் கழக நிர்வாகத்திலும், நிதியிலும் தலையிட வைத்து அவர்கள் கேட்காத பெரும் தகுதியை அள்ளி வழங்கி அவர்களை தம் நிலை அறியாத மயக்கத்தில் ஆழ்த்தி அவர்களிடம் உதவி பெற்றவர்.

அப்படியானால் தமிழ் சமூகத்தின் கற்றறிந்தவரிடையே காணப்படும் குறைபாடுதான் என்ன? நியாயத்தின் பால் எழுந்து நின்று நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று இவர்களால் ஏன் சொல்ல முடியாமல் போயிற்று? இதை யாராவது ஒரு கலாநிதிப் பட்டத்திற்கு ஆய்வு செய்ய வேண்டும்!



நாம் இன்னொரு முக்கியமான விசயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பல்கலைக்கழகத்தினுள் இயங்கும் ஒரு சில புல்லுருவிகளால் அங்கு கடமையாற்றும் ஒரு சில நல்லவர்களின் (அவர்கள் மிகச் சிறுபான்மையாக மாறுகின்ற போதிலும்) மீதும் ஒட்டுமொத்தமான பழி சுமத்தப்படாமலிருக்க வேண்டும். அநியாயம் செய்பவர்கள் அதிகாரத்தைக் கொண்டிருப்பதால் பல்கலைக்கழகம் மூடப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அதன் நிமித்தம் பல்கலைக் கழகம் எவ்வாறு நிர்வகிக்கப் பட வேண்டும் என்பது குறித்து அறிஞர்கள், ஆர்வலர்கள் பங்கேற்கும் திறந்த விவாதம் ஒன்று தொடக்கி வைக்கப்பட வேண்டும். விவாததின் பரிந்துரைகள் நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களிலும் நடைமுறைப் படுத்தப் பட வேண்டும். பதவிகள் தரும் அதிகாரம் காரணமாக அப்பாவி மாணவர் பழிவாங்கப்படுவதில் இருந்து காப்பாற்றப் படல் வேண்டும்.

தாமிரா மீனாஷி

*குறிப்பு: தேசம்நெற் இல் வெளியான இக்கட்டுரைகள் தொடர்பாகவும் இதனுடன் தொடர்பான கட்டுரைகள் தொடர்பாகவும் ஏராளமான கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டன. அக்கருத்துக்கள் அனைத்தையும் இங்கு பதிவிடுவதானால் அதுமட்டுமே மற்றுமொரு நூலாக அமைந்திருக்கும். அதனால் தெரிவு செய்யப்பட்ட சில கருத்துக்களே இங்கு பதிவிடப்படுகின்றது. கருத்துக்களைப் பதிவு செய்தவர்கள் அனைவருக்கும் நன்றிகள்.*



# தம்பிராஜா ஜெயபாலன்

இலங்கையின் அனுராதபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர், 1977ல் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறை காரணமாக யாழ்ப்பாணத்துக்கு குடும்பத்தாருடன் இடம்பெயர்ந்தார். இனமுரண்பாடு கூர்மையாகி யுத்தமாக மாறிய காலகட்டத்தில் 1991ல் லண்டனுக்குப் புலம்பெயர்ந்தார்.

இலங்கை அரசியலில் ஆர்வம்கொண்டவர், 1997ல் தேசம் சஞ்சிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராக இருந்து வருகின்றார். 2001 முதல் 2008 வரை உதயன் (லண்டன்) பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். தற்போது 2006ல் ஆரம்பிக்கப்பட்ட லண்டன் குரல் பத்திரிகையின் ஆசிரியராகவும், 2007ல் ஆரம்பிக்கப்பட்ட தேசம்நெற் இணையத்தின் ஆசிரியராகவும் உள்ளார்.

நடுத்தர வர்க்கத்திற்குரிய கல்வி மீதான கனவுகள் இருந்த போதும், மாணவப் பருவத்தின் முக்கியமான காலகட்டத்தில் யுத்த சூழலும், அதனால் ஏற்பட்ட புலம்பெயர்வும், புதிய சூழலுக்கு மொழி போன்ற இசைவாக்கி கொள்ள முடியாத மற்றும் காரணங்களினாலும், கல்வி மீதான கனவுகள் அவருக்கு பகற்கனவாகிப் போனது.

கல்விக் கனவு பகற்கனவாகிப் போகின்ற நிலை தாயகத்தில் உள்ள மாணவர்களுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்று கருதுபவர். மேலும் கல்வியே சிறுபான்மையினங்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ளவும் தங்களது உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும் உள்ள மிகச்சிறந்த வழி என்ற நம்பிக்கையுடையவர். அதனால் கல்விக் கட்டமைப்புகளை அதன் சீரழிவிலிருந்து மீட்டெடுக்க வேண்டும், என்ற நோக்கில் தேசம்நெற் இல் வெளியான இக்கட்டுரைகள் நூலாக்கப்பட்டு உள்ளது.

**தங்கை ஜெ பரிமளகாந்தி (ஆரம்பப் பள்ளி ஆசிரியை)**